விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
**Valampurii**

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 15 வியாழக்கிழமை (31.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# கூட்டமைப்பில் உள்ள சிலருக்கு எரிச்சலூட்டும் மக்கள் பேரவை!

## முதலமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் இரா.சம்பந்தனுக்கு தெளிவுபடுத்தினேன். அதற்குப் பின்னர் மக்கள் பேரவை ஒரு ஜனநாயக ரீதியான அமைப்பு என சம்பந்தன் என்னிடம் கூறினார். கூட்டமைப்பில் உள்ள சிலருக்கு இது எரிச்சலூட்டினால் அதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது என்று வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

23ஆம் பக்கம் பார்க்க

## கம்பவாரிதியின் பதில்



வலம்புரியின் புருஷோத்தமனுக்கு கம்பவாரிதி எழுதிய அன்புமடல் உள்ளே...

## அரச சேவை உறுதிமொழியில் ஒரே இனம் என்ற வசனம்

### புத்திஜீவிகள் கவலை

(கொழும்பு)

அரசாங்க சேவை சத்தியப்பிரமான உறுதிமொழியில் தவறு இடம் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளை முதலாம் திகதி அரச சேவை உத்தியோகத்தர் அனை

23ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு-முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குறித்து பேச்சு

(கொழும்பு)

நாட்டில் அரசியலமைப்பு மாற்றம் இடம்பெறவுள்ள நிலையில், அரசியலமைப்பு யோசனைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலை

23ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் பணிப்புக்கமைய படிப்படியாக காணி விடுவிப்பு

### அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் உறுதி மொழிக்கமைய வலி வடக்கில் தொடர்ச்சியாக தனியார் காணிகள் விடுவிக்கப்படவுள்ளதாக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நேற்று முன்தினம் வலி வடக்கில் தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 701.5 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

23ஆம் பக்கம் பார்க்க

## ரயில் மோதியதில் பரு.இளைஞன் பலி!

### பம்பலப்பிட்டியில் சம்பவம்

(கரணவாய்)

புகையிரதம் மோதியதில் பருத்தித்துறை இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை கொழும்பு பம்பலப்பிட்டியில் இடம் பெற்றுள்ளது.

துலாவெட்டி வீதி முதலாம் கட்டை பருத்தித்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வாசீகன் (வயது-27) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

24ஆம் பக்கம் பார்க்க

## நாமல் ராஜபக்ஷ வாக்குமூலம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவில் ஆஜராகியுள்ளார். போலியான தொலைபேசி அழைப்பு ஒன்று எடுத்தமை தொடர்பான விசாரணைகளில் வாக்குமூலம் அளிக்க அவர் இவ்வாறு சென்றுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்னதாக இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பிலேயே இவ்வாறு விசாரணை

24ஆம் பக்கம் பார்க்க

## வீட்டில் இருந்தோரை அச்சுறுத்தி ஆயுதமுனையில் கொள்ளை!



### உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் ஆயுத முனையில் துணிகர கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

உரும்பிராய் கிழக்கு ஞானவைரவர் கோவில் வீதி பகுதியில் உள்ள வீடொன்றிலேயே நேற்று முன்தினம இரவு 7.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## விபத்தில் ஐவர் பலி

சம்மாந்துறையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த வானும் பொல்கஸ்கோவிட்ட பகுதியிலிருந்து பொலநறுவை சோமாவதிய யாத்திரைக்காக சிலருடன் பயணித்த தனியார் பேருந்து ஒன்றுமே நேற்று காலை வரக்காபொல தும் மலதெனியவில் விபத்துக்குள்ளாகியதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

வரக்காபொல தும்மலதெனிய சந்திக்கு அருகில் நேற்று அதி காலை 4.30 மணியளவில் பேருந்து

23ஆம் பக்கம் பார்க்க

## அடுத்த ஆண்டுச் செயற்பாடுகள் இலக்கை நோக்கியதாக இருக்கும்

### முதலமைச்சர் உரை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் தனித்துவத்தை பேணும் வகையிலும் எமது இலக்கை நோக்கிய பயணிக்கும் ஆண்டாக அடுத்தாண்டு செயறபாடுகள் அமைய வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இவ்வாண்டிற்கான வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு நேற்று மதியத்துடன் நிறைவுக்கு வந்ததன் பின்னர், செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுடனான மதிய போசன நிகழ்வு யாழ்.கிறீன் கிராஸ் விடுதியில் நேற்றும் மதியம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

24ஆம் பக்கம் பார்க்க

## மகிந்த அரசின் நடைமுறையை பின்பற்றும் சட்டமா அதிபர்

### கைதிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகள் விவகாரத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் மகிந்த அரசாங்கத்தின் நடைமுறைகளையே பின்பற்றுவதாக அரசியல் கைதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகள் தற்போது நடைபெற்று வரும் நீதிமன்றங்களில் இருந்து வேறு நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுகின்றதாகவும்

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரச வைத்திய அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையானது வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இந்த சந்திப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை நகர மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இது தொடர்பாக அவர தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர்களுக்கான வாகனங்கள் அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் சம்பளப் பிரச்சினை தொடரபாகவும் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் அரச வைத்தியர்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின் அது தொடர்பாக கலந்துரையாட தாம் தயாராக இருப்பதாகவும் பேச்சுவார்த்தைகள் மூலம் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுக் கொடுப்பதே நல்லாட்சியின் பண்பு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது நிறுவனத்தின் விடுதியினை பராமரிப்பதற்கு இரவு நேர வேலையாள் 35 வயதுக்கு குறைந்த ஆண் தேவை. கல்வித் தகைமை தேவையில்லை.

தொடர்பு :
0768351521



## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். கே.கே.எஸ் றோட், இணுவில்.
இரு இடத்திலும்

**A/L 2018 வர்த்தகப்பிரிவு**

யாழ் மாவட்டத்தின் பிரபல ஆசிரியர்களினால்

ஆரம்பம் : 02-01-2016
யாழ் நகரில் : 8.00 am
இணுவிலில் : 3.00 pm

பொருளியல்
S.மகேந்திரன்
(BA.Spl.Trd.PGDE, MA (Eco Spl)

கணக்கீடு
B.முகுந்தன்
{BBA(Hons)MBA (FM Spl) CIMA Adr Dip in MA. (UK)}

வணிகக்கல்வி
S.பிரதீபன்
{HNDA. M.com PGDE} (C-3250)

உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்


## சட்டத்தை மீறிய பொலிஸ் உத்தியோகத்தர்



இலங்கையில் போக்குவரத்து சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு வரும் நிலையில், அதனை மீறும் வகையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நடந்து கொண்ட விதம் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

அவர் தனது மனைவி மற்றும் மகளை தலைக்கவசம் இன்றி ஏற்றிச் செல்லும் காட்சி மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு கவசம அணியாமல், பொலிஸ உத்தியோகத்தரே இவ்வாறு போக்குவரத்து விதி களை மீறினால் ஏனையவர்கள் எவ்வாறு போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிப்பார்கள் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக தலைக்கவசத்தை அணியாமல் செல்லு வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


## WORLD MOVIES - JAFFNA
### Alliance Française de Jaffna

af

cordially invites you to the screening of
**BOYCHOIR**
A child in difficulty becomes a boychoir (all audiences)
(2014, 96 min)
On
Thursday 31 Decembre 2015 at 4.00 p.m.
at
Alliance Francaise de Jaffna
61, kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 021 222 8093
English Language. English subtitles.
Free entrance.



(3018)

பிரெஞ்சு வகுப்புகள் ஆரம்பம் 10.01.2016
தொலைபேசியூடாக உடன் பதிவுசெய்க.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## விஞ்ஞானபீடம்

**விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு - 2014 நிலை 1G , 2G, 3G**
**கணனி விஞ்ஞான பட்டத் தேர்வு - 2014 நிலை 1S, 2S, 3S, 4S**
**விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு - 2014 நிலை 3M ,4M**

### இரண்டாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித் தேர்வு


இரண்டாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) மாசி 2016 இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் **2016 தை 12**ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

30-12-2015 (C-3248) **பதிவாளர்**

# சர்வதேச ரீதியில் நாட்டுக்கு நற்பெயர்

## ஹக்கீம் மகிழ்ச்சி



(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த காலத்திலிருந்து ஆட்சி மாற்றம் ஏற்படும் வரையில் இலங்கையில் சமாதானம் நிலைநாட்டப்படவில்லை என நகர அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசனம், நீர் விநியோக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த போதிலும், இலங்கையில் சமாதானம் நிலை நாட்டப்படவில்லை. சமாதானம் தோல்வியடைந்த ஒன்றாகவே காணப்பட்டது. தினந்தோறும் ஏதோ ஒரு வகையில் மதவாத பிரச்சினைகள், தாக்குதல்கள் என்பன இடம்பெற்றன. இவ்வாறான ஒரு நிலையில், ஆட்சி மாற்றத்தினைத் தொடர்ந்து இலங்கைக்கு சர்வதேச ரீதியில் நற்பெயர் கிடைத்துள்ளது.

இலங்கையில் சமத்துவம், சகோதரத்துவம், இனங்களுக்கு இடையில் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கியமைக்காக சர்வதேச, வல்லரசு நாடுகள் இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமரை வாழ்த்துக்கின்றன.

இவ்வாறான ஒரு நிலையில், சர்வதேச அங்கீகாரத்துடன் இணக்கத் தீர்வு கொண்டு வருவதற்கும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் புதிய அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி சிற்றம்பலம் சின்னப்பிள்ளை

வத்திராயன் தெற்கு தாளையடி
(சுண்டிக்குளம் சந்தி, பிரதான சாலை - தருமபுரம்)



வத்திராயன் தெற்கு தாளையடியை நிரந்தர முகவரியாகவும் சுண்டிக்குளம் சந்தி, முல்லை வீதி தருமபுரத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிற்றம்பலம் சின்னப்பிள்ளை 28.12.2015 திங்கட்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கதிராத்தை தம்பதிகளின் மூத்த புதல்வியும் அமரர் கணபதிப்பிள்ளை சிற்றம்பலத்தின் (மணியம்) அன்புத் துணைவியும் பாலச்சந்திரன் (ஜேர்மனி), மாசிலாமணி (ஜேர்மனி), நாகலிங்கம் (நோர்வே), பரமசிவம் (பூசகர் உடுத்துறை ஐந்தாம் பனைப் பிள்ளையார் ஆலயம்), புஸ்பமலர் (ஹொலண்ட்), கணேசலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி), அமரர் ஜெயலட்சுமி, பரமேஸ்வரி (டென்மார்க்), அமரர் அன்னலிங்கம் (பாடகர் சிட்டு) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி பா.சூரியா (ஜேர்மனி), திருமதி மா.றஞ்சிதமலர் (ஜேர்மனி), திருமதி நா.சகுந்தலாதேவி (நோர்வே), திருமதி ப.றஞ்சிதமலர், ப.குணரத்தினம், திருமதி க.மனோரதி (ஆசிரியர் - இராமநாதபுரம் ம.வி), ம.விஜயகுமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் அமரர் திருமதி இராசையா பொன்னம்மா, அமரர் திருமதி சோதிநாதன் சின்னக்குட்டி, திருமதி கந்தையா சரஸ்வதி, சின்னத்தம்பி சாமிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜாத்தா (ஜேர்மனி), சகிதா (ஜேர்மனி), மைதிலி (ஜேர்மனி), தனுசா (ஜேர்மனி), தயாபரன் (நோர்வே), அரவிந்தன் (நோர்வே), அனுஷன் (நோர்வே), கல்யாணி (நோர்வே), நித்திலா, நிரோஜன், நிருபன், நிமலன், கவிதா (ஹொலன்ட்), அபிமன்யு (ஹொலன்ட்), ஜினேசன் (ஹொலன்ட்), கம்சா (ஹொலன்ட்), அமிலினி (கிழக்கு பல்கலைக்கழகம்), வகிந்தன், புகழினி, அஜந் (டென்மார்க்), வினிதன் (டென்மார்க்), துஷா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31.12.2015 காலை 8 மணிக்கு அவரது தற்போதைய வதிவிடமான இல.236, சுண்டிக்குளம் சந்தி, தருமபுரத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திரு.சி பரமசிவம் (மகன்)
திரு.சி.கணேசலிங்கம் (மகன்)

(C-3244)

# 2 - 3 மணித்தியாலத்திற்குள் பொலிஸ் அறிக்கை கிடைக்கும்

நாடளாவிய ரீதியில் எந்த பொலிஸ பிரிவில் வசிப்பவரும் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு செல்லும் நோக்கில் பொலிஸ் அறிக்கைகளுக்கு வாரக்கணக்கில் செலவிட வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவற்றை இரண்டு அல்லது மூன்று மணி நேரத்துக்குள் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாடொன்றுக்கு தொழிலுக்கு செல்லும்போது பொலிஸ் அறிக்கை கோரப்படும். அப்போது யாழில் உள்ள ஒருவர் கொழும்புக்கு வந்து கைவிரல் ரேகைகளை பதிவு செய்து அதனை பெற்றுக் கொள்ள பல நாட்களை செலவிட வேண்டி ஏற்பட்டது. எனினும் தற்போது தொழில்நுட்பம் பரவல் படுத்தப்படுவதால் எந்த ஒரு பொலிஸ பிரிவிலும் கைவிரல் ரேகை பதிவு குறித்த அறிக்கையை 3 நிமிடங்களில் பெறலாம். அதனால் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் தத்தமது பொலிஸ் பிரிவிலேயே பொலிஸ் அறிக்கைகளைப் பெறக் கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குமார் குணரத்னத்தின் விளக்கமறியல் நீடிப்பு

முன்னிலை சோசலிசக் கட்சியின் அரசியற் குழு உறுப்பினர் குமார் குணரத்னத்தின் விளக்கமறியல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறி, நாட்டில் தங்கியிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இவர் கேகாலை, அருகுருவெல பகுதியில் வைத்து நவம்பர் மாதம் 04ஆம் திகதியன்று சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து நேற்றுவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கேகாலை நீதவான் நீதிமன்றம், கடந்த 18 ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில் மீண்டும் நேற்று அவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உள்வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வுகாண பேச்சுவார்த்தை

## ஸ்ரீ.ல.சு.க.பொருளாளர் தெரிவிப்பு


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள உள்வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிக்கவுள்ளதாக அக்கட்சியின் பொருளாளர் எஸ்.பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஐக்கிய சுதந்திர முன்னணியில் போட்டியிடவுள்ளதாகவும் இதில் சகலரையும் இணைந்து கொள்ளுமாறும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஸ்ரீ.ல.சு.கட்சி உறுப்பினர்கள் என்றும் ஆதரவாகவுள்ளதாகவும் கட்சி இழந்த சிறுபான்மையினரின் வாக்குகளை பாதுகாப்பதற்காக சகலரும் இணைந்து எதிர்வரும் நாட்களில் செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மரத்திலிருந்து வீழ்ந்து இறந்த பனைத் தொழிலாளிகளின் குடும்பங்களுக்கு வாழ்வாதார நிதியாக ரூபா ஒரு இலட்சம்

## வடக்கு கூட்டுறவு அமைச்சு வழங்கியது



தொழில் முயற்சியின்போது மரத்தில் இருந்து தவறுதலாக வீழ்ந்து இறந்த பனை, தென்னைச் சாற்று உற்பத்தித் தொழிலாளர்களின் ஆறு குடும்பங்களுக்கு வடக்கு கூட்டுறவு அமைச்சால் வாழ்வாதார நிதியாக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று புதன்கிழமை பேரவைச் செயலக வளாகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியின் போது உரிய குடும்பங்களிடம் இதற்கான காசோலைகளைக் கையளித்துள்ளார்.

வடக்கு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாணசபை தோற்றம் பெற்ற 2013 ஆம் ஆண்டில் இருந்து பனை, தென்னை மரங்களில் இருந்து வீழ்ந்து இறந்த குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வாழ்வாதார நிதியாக வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தார். அத்தோடு, அண்மையில் 2016 ஆம் ஆண்டுக்கான தனது அமைச்சுக்கான நிதிநிலை அறிக்கையைப் பேரவையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதும் இதனைத் தெரிவித்திருந்தார். இதன் அடிப்படையில், வடக்கு மாகாணத்தில் உள்ள பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, ஆறு குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு வாழ்வாதார நிதியாக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

வாழ்வாதார நிதி வழங்கும் நிகழ்ச்சியில் வடக்கு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடமாகாணசபை உறுப்பினர்கள், பிரதம செயலாளர் அ.பத்திநாதன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி.மதுமதி வசந்தகுமார் ஆகியோரும் பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (இ-4)

### பிரகீத் கடத்தல் விவகாரம்

# மற்றொரு புலனாய்வு அதிகாரியும் கைது!

(கொழும்பு)

**ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்திச் சென்ற குழுவில் இடம் பெற்றிருந்த மற்றொரு இராணுவப் புலனாய்வு அதிகாரியை, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.**

2010ஆம் ஆண்டு ராஜகிரியவில் வைத்து, பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்திச் சென்ற குழுவில் இவரும் ஒருவர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரகீத் எக்னெலிகொட கடத்திச் செல்லப்படும் போது, ஒரு சார்ஜன்ட் தர அதிகாரியாக இருந்த அபேரட்ண என்ற இந்த அதிகாரி, பின்னர் திடீரென லெப்டினன்ட்டாக பதவி உயர்த்தப்பட்டிருந்தார். ஏற்கனவே இவரிடம் இந்தச் சம்பவம் தொடர்பாக, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி, வாக்குமூலம் பெற்ற பின்னர் விடுவித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்றையதினம் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இக் கைதுச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிகிரியா ஓவியங்களை புகைப்படம் எடுக்க தடை

(கொழும்பு)

சிகிரியா ஓவியங்களை புகைப்படம் எடுப்பதற்கு நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

சிகிரியாவின் சுவர் ஓவியங்கள் தொடர்பான இத்தீர்மானத்திற்கு, தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளதாக மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் கிரிஷாந்த குணவர்த்தன தெரிவித்தார்.

கமராக்கள் மூலம் புகைப்படம் எடுக்கும்போது கமராவின் அதீத ஒளி காரணமாக ஓவியங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் அளவில் சிகிரியா சுவர் ஓவியத்துடன் தொடர்பான, அதன் பின்புல பூச்சு கொண்ட பகுதி ஒன்று உடைந்து வீழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தனியார்துறை ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கு அங்கீகாரம்

தனியார்துறை ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளதாக தொழில அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.செனவிரட்ன தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

2016 ஆம் வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறை ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

குறித்த உத்தேச சட்ட மூலத்திற்கு அமைச்சரவையின் பூரண அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் சில நிறுவனங்கள் தற்போதே ஆயிரம் ரூபாவினையும் சில நிறுவனங்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவினையும் வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சம்பள உயர்வு குறித்த சட்டமூலம் எதிர்வரும் ஆண்டு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.


அத்துடன் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளங்களும் உயர்த்தப்படும் என அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். செனவிரட்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பதிவுகள் இன்று இடம்பெறாது

வருடநிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் காணி மாவட்டப் பதிவகப் பணிகள் எவையும் இன்று 31 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற மாட்டாது என யாழ்ப்பாணம் காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர் அறிவித்துள்ளார்.

இன்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகத்தில் உள்ள காணி மாவட்டப் பதிவகத்தின் கருமபீடங்களில் காணிப்பதிவு தொடர்பான விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 01.01.2016 முதல் வழமைபோல் அனைத்து சேவைகளும் இடம்பெறும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

# சக மாணவருடன் நெருங்கிப் பழகியதாக மாணவிக்கு சவுக்கடி வழங்கிய நீதிமன்றம்




இந்தோனேஷியாவில் உள்ள பல கலைக்கழகம் ஒன்றில் சக மாணவருடன் நெருங்கிப் பழகிய மாணவிக்கு ஷரியா முறைப்படி நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது.

இந்தோனேஷியாவில் பல்கலைக்கழகம் ஒன்றில் சக மாணவருடன் நெருங்கிப் பழகியதாக 20 வயதான Elita Nur என்ற மாணவி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அங்கு அமுலில் இருக்கும் ஷரியா சட்டத்தின்படி திருமணமாகாத இளம்பெண்கள் ஆண் நண்பர்களுடன்நெருங்கிப்பழகுவது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுகிறது.

இந்நிலையில் ElitaNur சகமாணவர் ஒருவருடன் நெருங்கி பழகியதால் அவருக்கு ஷரியா முறைப்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து Banda Aceh பகுதியில் அமைந்துள்ள Baiturrahumim பள்ளிவாசலுக்கு அவர் அழைத்துவரப்பட்டு அங்கு அவருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பள்ளிவாசலில் குவிந்திருந்த மக்களின் ஆரவாரத்தினிடையே முகமூடி அணிந்த நபரால் அந்த இளம் பெண்ணிற்கு 5 முறை பிரம்படி தண்டனையாக வழங்கப்பட்டுள்ளது.

வலியால் துடித்த அவரை அங்கிருந்து அவசர ஊர்தி வரவழைத்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (இ-7)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
# වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
# VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

## கடைகளை வாடகைக்கு வழங்குதல் – 2015/2016

மருதனார்மடம் சந்தைத் தொகுதியில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் கூடிய ஒரேமுறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக வலிகாமம் தெற்கு பிரதேசசபையினால் கோரப்படுகின்றது.

| தொ. இல | கடை இல | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT வரி தவிர்ந்த தொகை) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்கமுடியாத கேள்விப்படிவக் கட்டணம் (VAT, NBT வரி தவிர்ந்த தொகை) |
|---|---|---|---|---|
| 01 | இல 04 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 02 | இல 07 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 03 | இல 13 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 04 | இல 14 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 05 | இல 22 | 1,800,000.00 | 36,000.00 | 1000.00 |
| 06 | இல 01A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 07 | இல 03A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 08 | இல 04A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 09 | இல 08A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 10 | இல 09A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 11 | இல 10A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 12 | இல 11A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 13 | இல 12A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |
| 14 | இல 18A | 1,200,000.00 | 24,000.00 | 1000.00 |

### நிபந்தனைகள்

01. அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணம், மீளளிக்கப்படாத கட்டணங்கள், பெறுமதி சேர்வரி ஆகியவற்றைப் பணமாகச் செலுத்தி ஆள்அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 31.12.2015-ம் திகதியிலிருந்து ஒரே முறையில் செலுத்தக் கூடிய தொகைக்கான கேள்விப்படிவம் இணைப்பிரதிகளில் பெற்று 14.01.2016-ம் திகதி மு.ப 12.00 மணிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். தாமதமானவை நிராகரிக்கப்படும்.

02. அலுவலகத்தில் இணைப்பிரதிகளில் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் படிவங்களில் விண்ணப்பகாரர் எவ்வித மாற்றங்களும் செய்தல் ஆகாது.

03. படிவத்தை பூரணப்படுத்துவதில் ஏற்படும் திருத்தங்கள் விண்ணப்பகாரரால் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்

04. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய இரண்டினையும் பூரணப்படுத்தி தமது கேள்விகளை தனித்தனிகடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு 'தவிசாளர், வலிதெற்கு பிரதேசபை, சுன்னாகம்' என முகவரியிட்டு கேள்வியடங்கிய கடித இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு, மூலப்பிரதி, இணைப்பிரதி எனவும் குறிப்பிடப்பட்டு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படலாம். அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம்.

05. 14.01.2016ந் திகதி மு.ப 12.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் மட்டும் அன்று பி.ப 2.00 மணியளவில் கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். விண்ணப்பகாரர் அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரம் பெற்ற பிரதிநிதி அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

06. 14.01.2016ந் திகதி மு.ப.12.00 மணிக்குப் பின்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கும் விண்ணப்பங்களை உரிய முறையில் சபையில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

08. அரச நிறுவனங்களும், கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவுச்சங்கங்களும் இக்கேள்வி நடைமுறைக்கமைவாக விண்ணப்பிக்கலாம்

09. எக்கேள்வியையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுள்ளது.

10. கேள்விதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

11. கடந்த காலங்களில் தவறுநர் பட்டியலில் (Defaulters list) அட்டவணைப்படுத்தப்பட்டோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகையாக, வரியாக நிலுவையிலுள்ளோர் கேள்விகள் கோர அருகதையற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்பட்டு செலுத்திய வைப்புப்பணம் அரச உடமையாக்கப்படும். பிரதேச சபையுடனான சகல எழுத்து மூல, வாய் மூல தொடர்பாடல்கள் யாவும் குத்தகைக்காரராலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவரது பிரதிநிதி ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்.

12. கேள்விக்காரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைகள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயத் தொகையைக்காட்டிலும் அதிகரித்ததாயிருத்தல் வேண்டும். ஆகக் கூடிய கேள்வித் தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.

13. ஏற்றுக்கொள்ளப்படும் சித்திரக் கேள்விக்காரர் தமது கேள்வித் தொகையின் 11 சதவீத பெறுமதி சேர்வரியாகவும் (VAT) 02 சதவீதம் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியாகவும் (NBT) வலிதெற்கு பிரதேசசபை மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

14. வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் விலைமதிப்பீட்டு திணைக்களம் மதிப்பிட்ட தொகையில் கடைக்கான மாதாந்த வாடகையும் பெறுமதிசேர்வரி, தேசத்தைகட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றைப் பணமாக மாதாந்தம் செலுத்த வேண்டும்.

15. மாதாந்த வாடகைப் பணத்தை அந்த மாதம் 30ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறின் கட்டுப்பணத்தின் 10 சதவீதம் தண்டப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். தொடர்ந்து இரு மாதங்களிற்கு வாடகைப் பணங்களைச் செலுத்தத் தவறுவோரது ஒப்பந்தம் மறு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

16. முற்குறிப்பிடப்பட்ட 14-வது 15-வது நிபந்தனைப் பிரகாரம் நடக்கத் தவறுமிடத்து வாடகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.

17. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை, சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.

18. குத்தகையாளர் தான் நடாத்தும் தொழிலின் அல்லது வியாபாரத்தின் வருடாந்த உத்தரவுக் கட்டணத்தை வலிதெற்கு பிரதேசசபையினால் தொகை குறித்து அறிவிக்கப்பட்டதும் குறித்த காலத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

19. வாடகைக்கு கொடுப்பவர் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு முறையும் தேவையேற்படின் காலத்திற்கு காலம் வாடகையை மீள் பரிசீலனை செய்வதற்கு அதிகாரம் உண்டு. அதற்கு வாடகைக்காரர் மறுப்பு தெரிவிக்க முடியாது.

20. குத்தகைக்குப் பெற்ற கடையின் மின்சார இணைப்புக்கட்டணங்கள், மாதாந்தக் கட்டணங்கள் யாவும் குத்தகையாளரின் பொறுப்பில் அமையும்.

21. கடையை வேறு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யவோ அன்றி உப வாடகைக்குக் கொடுக்கவோ முடியாது.

22. கேள்வித் திகதிக்கு முந்திய ஐந்து வருட காலத்திற்குள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களுக்காக நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் எந்தக் கடைக்கும் கேள்விகள் சமர்ப்பிப்பதற்கு அருகதையற்றவராவார்.

- மிகை இலாபம் ஈட்டிய குற்றம்
- நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைச் சட்டத்தை மீறிய குற்றம்
- சந்தை உப விதிகளை மீறிய குற்றம்

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தியாகராஜா தியாகச்சந்திரன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(சி-3249)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி இங்கிலாந்து அபார வெற்றி



சுற்றுலா இங்கிலாந்து அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 241 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

டேர்பனில் இடம்பெற்ற இந்த போட்டியில், தமது முதலாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 303 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி தமது முதலாவது இனிங்சிற்காக 214 ஓட்டங்களை பெற்றது.

இதனை தொடர்ந்து தமது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 326 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்படி, தென்னாபிரிக்க அணிக்கு 416 என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், தென்னாபிரிக்க அணி 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியை தழுவியது. (க)

# பொலிஸாருக்கு மறியல் உத்தரவு

30 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாகக் கோரி, 20 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டார் என்ற குற்றஞ்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட, ஹப்புத்தளை பொலிஸ் நிலையத்தின் உப-பொலிஸ் பரிசோதகர், எதிர்வரும் 4ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தீயினால் எரிந்து சேதமான முச்சக்கரவண்டிக்குக் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக, அதன் உரிமையாளருக்கு பொலிஸ் அறிக்கையை வழங்குவதற்கே அவர், இலஞ்சம் பெற்றுள்ளாரென குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸே, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இந்த பொலிஸ் உப-பரிசோதகர், ஓய்வுபெறுவதற்கு ஒரு மாதம் இருக்கின்ற நிலையிலே இந்தச் சம்பவத்தில் அவர், சிக்கிக்கொண்டதாக பொலிஸார், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். (இ-7)


**அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை பெருவிழாவில் இசை ஆராதனை செய்யும் கலைஞர்கள்**

இசை ஆராதனை
நிகழ்ச்சி
31.12.2015 வியாழக்கிழமை
புல்லாங்குழல்:-R.வசந்தன்
மிருதங்கம்:- க.கண்ணதாசன்
தவில்:- R.ஆனந்தகணேசன்

இசை ஆராதனை
அனுசரணை வழங்குவோர்
நா.திருச்செல்வம்
36, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(2901)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்





**தோற்றம் 07.03.1931 மறைவு 03.12.2015**

## அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

கடந்த 03.12.2015 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் மரணச் செய்தி கேட்டு அனைத்து வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (01.01. 2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் வீட்டுக் கிருத்திய நிகழ்வு நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்
சிவாறேடிங்கோ,
ஸ்ரீ முத்துமாரி அம்மன் றேடர்ஸ்
V.S.S அரிசி ஆலை

டச்சுவீதி,
சாவகச்சேரி.

(3009)


# இராசி பலன்

31.12.2015
(மார்கழி 15, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு,
சஷ்டி முன்னிரவு 8.35 மணிவரை
பூரம் முன்னிரவு 7.12 மணிவரை
இராகுகாலம் 1.59-3.29 மணிவரை
சுபநேரம் 7.59-9.29 மணிவரை

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம் இரவு 1.28 ற்கு சனி-சந் | | |
| | | | சந் |
| சூரி புத | சனி சுக் | செவ் | ராகு குரு |

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பகைவர்கள் விலகுவர், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மேடம்:** தாழ்ந்த சுபாவமுண்டு, அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பிள்ளைகள் குடும்பப் பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.

**இடபம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தாய் வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், விருந்தினர் வருகையுண்டு.

**மிதுனம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்களால் பலனுண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** செய் தொழில் மேன்மையுண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**துலாம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம்.

**கன்னி:** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள், உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

### வட மாகாணத்தில் அடுத்த வருடம்

# இணைந்த சேவைப் பதவிக்கான 700 நியமனங்கள் வழங்கப்படும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)


**வடக்கு மாகாணத்தில் அடுத்த வருடம் இணைந்த சேவை பதவிகளுக்கான 700 நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சபைக்கு அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களை நரப்பும் பொருட்டு நடத்தப்பட்டிருந்த போட்டிப் பரீட்சைகள் மற்றும் நேர்முகத்தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் இணைந்த சேவைப் பதவிகளில் உள்ள வெற்றிடங்களே நிரப்பப்படவுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் இந்த ஆண்டிற்கான இறுதி அமர்வு நேற்றையதினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பிரதேச சபை செய



லாளர்கள், நிர்வாக உத்தியோகத்தரகளாக 29 உத்தியோகத்தர்களும் திணைக்களங்களின் நிர்வாக உத்தியோகத்தர்களாக 25 உத்தியோகத்தர்களும், மொத்தம் 54 முகாமைத்துவ உதவியாளர் அதிசிறப்பு வகுப்பு பதவி உயர்வின் மூலம் நியமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், 326 பட்டதாரி பயிலுநர்கள், மத்திய அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் அடிப்படையில் நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தப்பட்டு நியமிக்கப்படவுள்ளனர். மேலும் 15 பட்டதாரிகள், மத்திய அரசின் அனுமதியின் அடிப்படையில், நிரந்தர நியமனம் பெறவுள்ளனர்.

மேலும் முகாமைத்துவ உதவியாளர்களாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சையின் அடிப்படையில் 47 உத்தியோகத்தர்களும், திறந்த போட்டி பரீட்சையின் அடிப்படையில் 126 பரீட்சார்த்திகளும் நியமனம் பெறவுள்ளனர். இது தவிர்ந்து சாரதிகளுக்கான போட்டி பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட ஏறத்தாழ 97 பரீட்சார்த்திகளும் நியமனம் பெறவுள்ளனர்.

இணைந்த சேவை தவிர்ந்து திணைக்கள சேவைகளுக்கான ஆளணி வெற்றிடங்களில் விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்கான 24 பேரும், கலாசார உத்தியோகத்தர்களாக 11 பேரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வகையில் 700 வெற்றிடங்கள் வடக்கு மாகாண சபையின் கீழ் நிரப்பப்படவுள்ளது என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# அச்சம் ஒழியுமா?

(கரணவாய்)

வடமராட்சியில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற கொள்ளைச் சம்பவங்கள் காரணமாக மக்கள் அச்சத்துடன் இராப்பொழுதை தினமும் கழித்து வருகின்றனர்.

தினந்தோறும் இரவு வேளைகளில் வடமராட்சியின் வெவ்வேறு இடங்களில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

கடந்த 18 ஆம் திகதி அன்று வடமராட்சி திக்கம் பகுதியில் உள்ள அந்தணர் ஒருவரது வீட்டுக்குள் துப்பாக்கி சகிதம் உள்நுழைந்த கொள்ளையர்கள் அந்தணரை மிரட்டி பணம், நகை என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றனர்.

மேலும் அன்றைய தினம் இரவு வடமராட்சி பகுதியில் உள்ள 3 ஆலயங்களில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

இதனைவிட கடந்த 27 ஆம் திகதி கரவெட்டி வதிரிப் பகுதியில் முகமூடிக் கொள்ளையர்களால் 2 வீடுகளில் 129 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

மேலும் இக்கொள்ளைச் சம்பவங்கள் இரவுப் பொழுதில் மட்டுமல்லாது பகல் பொழுதிலும் இடம்பெற்று வருவதாகவும் தெரிய வருகிறது.

அதாவது பகல் பொழுதில் சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஆடு, மாடு, நீர்ப்பம்பி என்பன திருடப்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் மக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் யாராவது சந்தேகத்திற்கிடமாக உலாவினால் அது தொடர்பில் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கும்படியும் பொலிஸார் இதன்போது மக்களுக்கு அறிவுறுத்தல் ஒன்றையும் விடுத்துள்ளனர். (இ-5-60)

## மார்கழி மாத இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் இதழின் மார்கழி மாத 216 ஆவது மலர் வெளி வந்துள்ளது. (இ-5)

## கைத்தொழில் சுற்றுலா

வர்த்தகத்துறை சார்ந்த நட வடிக்கைகள் மற்றும் சிறிய, நடுத்தர கைத்தொழில் துறைகள், விவசாயம் மற்றும் கால்நடை பண்ணைகள் போன்றவற்றை பார்வையிடவும் அதன் மூலம் எமது பொருளாதார மேம்பாட்டை விருத்தி செய்யவும் தமிழ் நாடு கைத்தொழிற்றுறை சுற்றுலா ஒன்றை மேற்கொள்ள யாழ்.வணிகர் கழகம் திட்டமிட் டுள்ளது.

2016 பெப்ரவரி முதல் வாரத்தில் மேற்கொள்ளவுள்ள இப் பயணத் திட்டத்தில் பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்கள் யாழ்.வணிகர் கழகத்துடன் தொடர்புகொள்ளுமாறு வணிகர் கழகம் கேட்டுள்ளது. (இ-5)

## திருவாசக முற்றோதல்

மூளாய் பொற்புலம்பதி மஹாகாளியம்பாள் தேவஸ்தான திருவாசக முற்றோதல் நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-5)

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் வருடாந்தம் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-5)

# கலாநிதி அமரர் தங்கம்மா அப்பாக்குட்டியின் 91 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா

(யாழ்ப்பாணம்)

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 91 ஆவது பிறந்த நாள் அறக்கொடைவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அனன பூரணி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா சைவசித்தாந்த மன்ற நிறுவுநர் திரு.திருமதி விசுவலிங்கம் வடிவழகாம்பாள் தமபதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன், யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, தீவக கல்வி வலய கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சுந்தரசிவம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.



இதன்போது ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள், இணுவில் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில அறங்காவலர் சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் அறக்கொடை வழங்கல், சிவத்தமிழ் விருது வழங்கல் என்பனவும் நடைபெறவுள்ளன. (இ-5)



நல்லூர் ஜே/117 கோண்டாவில் மத்தி மேற்கு பிரிவின் கிராமசேவகராக நீண்டகாலம் சேவையாற்றிய நவரத்தினம் சர்வகுணசீலன் அண்மையில் சேவையிலிருந்து ஓய்வுபெற்றதை முன்னிட்டு, கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தினரால் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டுள்ளார். சனசமூக நிலையத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஓய்வுபெற்ற கிராமசேவகரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். நிலையத்தினரால் நினைவுப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாகாணசபை உறுப்பினருடன், கிராமசேவையாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# அரசமைப்பு மாற்றங்களின் போது விடுமுறைகளை பின்பற்ற வேண்டும்

(கொழும்பு)

**அரசமைப்பு மாற்றங்களை மேற்கொள்ளும் போது கட்டாயமாக பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை அரசாங்கம் பின்பற்ற வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



காலத்தின் தேவைகளிற்கு ஏற்ப அரசியலமைப்பை காலத்திற்கு காலம் மாற்ற முடியும் என்றாலும் இதனை சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றியே முன்னெடுக்க வேண்டும்,

இந்த விடயம் தொடர்பில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்து அரசமைப்பில் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் 12 ஆவது அத்தியாயத்தில் இது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயத்தின் பிரிவு 83 மிக முக்கியமானது. இதில் அரசியலமைப்பினை மாற்றும் போது பின்பற்றவேண்டிய 11 விதிகள் காணப்படுகின்றன.

இது தவிர மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், சர்வஜன வாக்கெடுப்பும் அவசியம்.

அரசாங்கம் அரசமைப்பினை மாற்றமுயல்வது குறித்த விடயம் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியினர் தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

அரசாங்கம் அரசமைப்பினை மாற்றும்போது பின்பற்றவேண்டிய விடயங்கள் என அரசமைப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ள வட்யங்களை பின்பற்றும் வரை எங்களிற்கு பிரச்சினையில்லை.

எனினும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 11 விதிமுறைகள் பின்பற்றப்படாவிட்டால் அரசாங்கத்தின் முயற்சிகள் பாதிக்கப்படலாம். இலங்கை தேசத்தின் அடிப்படை பண்புகள் மற்றும் இயல்புகள் குறித்த முக்கியம் காரணமாகவே இந்த விதிமுறைகள் அரசமைப்பில் ஆழமாக பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றை சர்வஜன வாக்கெடுப்பின்றி மாற்றமுடியாது.

பிரதமர் முன்வைக்கவுள்ள தீர்மானம் என தெரிவிக்கப்பட்டு ஊடகங்களில் வெளியானவற்றை அவதானிக்கும்போது, அரசாங்கம் அரசியலமைப்பை மாற்றுவதற்கான அடிப்படை விதிமுறைகளை அலட்சியம் செய்கின்றது என்ற உணர்வு ஏற்படுகின்றது. அரசாங்கம் புதிய யோசனைகளை மக்கள் முன் சர்வஜன வாக்கெடுப்பாக முன்வைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன, எனினும் இந்த யோசனை கூட அரசமைப்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்களை பின்பற்றியதாக காணப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 6 இலட்சத்து 50 ஆயிரம் குற்றவாளிகளின் கைவிரல் ரேகைகள் குற்றப்பதிவுப் பிரிவில்

நாடளாவிய ரீதியில் நீதிமன்றங்களால குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்ட 6 இலட்சத்து 50 ஆயிரம் குற்றவாளிகளின் கை விரல் ரேகை அடையாளங்கள் குற்றப் பதிவுப் பிரிவில் (சி.ஆர்.டி) சேமிக்கப பட்டுள்ளதாகவும் அவை குற்ற விசாரணைக்கு பயன்படுத்தவென நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் குற்றப் பதிவுப் பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

கைவிரல் ரேகை ஒத்துப் பார்க்கும் சேவையை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கும், குற்ற விசாரணையின் போது கைது நடவடிக்கைகளை இலகுபடுத்தும் விதமாகவும் கொழும்பில் இரு வேறு நடவடிக்கைகளின் ஆரம்ப வைபவத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டே அவர் இதனைத் தெரிவித்தார்.

கைவிரல் ரேகையை வைதது சந்தேக நபர்களை குற்றவாளிகளாக காணும் நடைமுறை 1908 ஆம் ஆண்டு இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டது.

அப்போது ஆங்கிலேயர் இந்தியாவின் தமிழ்நாட்டில் இருந்து இங்கு அழைத்து வந்த குழந்தைவேல் முதலியார் என்ற பொலிஸ் பரிசோதகரைக் கொண்டு இங்கு இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது. 1908 முதல் 2012 ஆம் ஆண்டு வரை சாதாரண மனிதக் கண்களினால் சில கருவிகளைப் பயன்படுத்தி இது தொடர்பிலான சோதனைகள்இடம்பெற்றன.

எனினும் 2012 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் அனுசரணையில் இதற்கென விசேட மென்பொருள் உருவாக்கப்பட்டது. அதன்படி 2013 பெப்ரவரி 28 முதல் கைவிரல் ரேகைகள் ஒத்துப் பார்க்க கணனி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் இந்த தொழில்நுப்ப வசதிகளை நாம் தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள 42 பொலிஸ் பிரிவுகள், குற்றப் புலனாய்வுப் பிரிவு, போதைப்பொருள்தடுப்புப்பிரிவு, மோசடி தடுப்புப் பிரிவு, பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு ஆகிய விசேட நிறுவனாங்களுக்கும் விஸ்தரிப்பு செய்துள்ளோம். இதுவே இந்த நிகழ்வின் பிரதான நோக்கம்.

இதனூடாக குற்றவிசாரணைகள் இலகுபடுத்தப்படும். சந்தேகத்தில் கைதாகும் ஒருவரின் கைவிரல் ரேகைகள் உடனடியாக பெறப்பட்டு சில மணி நேரங்களிலேயே ஒத்துப் பார்க்கப்படும். இது வீண் சிரமங்களை தடுக்க உதவும்.எம்மிடம் தற்போதுள்ள தரவுகளில்பழைமையான கைவிரல் ரேகை 1912 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டதாகும். அத்துடன் அதில் மற்றொரு கைவிரல் ரேகைக்கு உரியவர் 212 குற்றங்களுடன் தொடர்புடையவராவார்.

இதனை விட சிறைகளில் இருந்து தப்பிய 7300 பேரின் விபரங்களும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 ஆயிரம் பேரின விபரங்களும் 9943 இராணுவத்தில் இருந்து தப்பியோரின் விபரங்களும் கூட எம்மிடம் உள்ளன.

அதனால் இவ்வாறு விரிவுபடுத்தப்படும் திட்டம் குற்ற விசாரணைகளில் மேலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆணைக்குழு விசாரணைக்கு அஞ்சி பணம் செலுத்திய முன்னாள் அமைச்சர் புஷ்பகுமார

மகிந்த ராஜபக்ஷ அரசின் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தனது அமைச்சுப் பதவியைப் பயன்படுத்தி பாரிய தொகையொன்றை மோசடி செய்திருந்தார்.

தனது மனைவியின் பெயரில் உள்ள காணியொன்றுக்கு சுமார் நான்காயிரம் தென்னங்கன்றுகளை இலவசமாக பெற்றுக் கொண்டிருந்த அவர், அதற்கான நடுகைச் செலவையும் அமைச்சின் மூலமாக ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் காரணமாக தெங்கு அபிவிருத்திச் சபைக்கு பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது. ஆட்சிமாற்றத்தின் பின் இது தொடர்பான தகவல்கள் வெளியில் கசிந்திருந்தன. (இ-7)

## ஹிருணிகா விடயத்தில் நான் தலையிடவில்லை

### ராஜித விளக்கம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர விவகாரத்தில் நான் எந்த விடயத்திலும் தலையிடவில்லை. அவ்வாறு பொலிஸ் விவகாரத்தில் நான் ஒருபோதும் தலையிடுவதில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

எனது சொந்த ஊரில் கூட நான் இவ்வாறு செயற்பட்டது கிடையாது. எனது ஆதரவாளர்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தாலும் பொலிஸாரின் விவகாரத்தில் நான் தலையிட மாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கேள்வி:- தற்போதைய அரசாங்கம் தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றதே?

பதில்: அவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடைபெறுகின்றது. அதுமட்டுமன்றி சில தவறுகள் நடைபெறாமல் தடுக்கப்படுகின்றன. கடந்த ஆட்சிக்காலத்தில் அவ்வாறு இருக்கவில்லை.

கேள்வி:- நீங்கள் ஹிருணிகா விவகாரத்தில் தலையிட்டதாக கூறப்படுகின்றது.

பதில்:- ஹிருணிகா விவகாரத்தில் நான் எந்தவகையிலும் தலையிடவில்லை. அந்த சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படும் போது நான் இலங்கையில் இருக்கவில்லை. அது மட்டுமன்றி நான் இவ்வாறான விவகாரங்கள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினரின் செயற்பாட்டில் தலையிடமாட்டேன். எனது சொந்த ஊரில் கூட நான் இவ்வாறு செயற்பட்டது கிடையாது. எனது ஆதரவாளர்களுக்கு ஏதாவது பிரச்சினை வந்தாலும் பொலிஸாரின் விவகாரத்தில் நான் தலையிடமாட்டேன்.

கேள்வி:- வெள்ளைவான் கலாசாரம் முடிந்துடிபெண்டர் கலாசாரம் வந்துள்ளதாக கூறப்படுகின்றதே?

பதில்:- ஒரு தனிப்பட்ட சம்பவத்தை வைத்துக் கொண்டு இவ்வாறு கூறுகின்றனர். இதில் அரசாங்கம் சம்பந்தப்படவில்லை.

கேள்வி:- சர்வதேச பாடகர் ஹென்றிகேவின் இசை நிகழ்வில் இளைஞர், யுவதிகள் நடந்து கொண்ட விதம் குறித்து அரசின் கருத்து என்ன?

பதில்:- அதில் இளைஞர்கள் எவரும் எதுவும் செய்யவில்லை. இது தொடர்பில் ஜனாதிபதி அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவித்துள்ளார். இவ்வாறு சர்வதேச இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதில் தவறில்லை. ஆனால் எமது நாட்டின் கலாசாரத்தை பாதுகாக்கும் வகையில் இந்த நிகழ்வுகள் நடத்தப்படவேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-7)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:21<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5338 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 13 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:ICT DIPLOMA<br>தொ.இ: G/5376 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 30<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:BSC/லண்டன் குடியுரிமை<br>தொ.இ: B/5340 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 15உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: G/5377 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 31 செவ்7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSC, MSC, CIMA/ தனியார் தொழில் சிங்கப்பூர்<br>தொ.இ: B/5341 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5382 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 49 செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MSC, PHDஅவுஸ்திரேலியா<br>தொ.இ: B/5342 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 43 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 8<br>தகைமை/தொழில்: HNDA/ அரசதொழில்<br>தொ.இ: G/5387 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(முள்ளியவளை)

இறுதி யுத்தத்தில் சாவைத் தழுவிய தமது கழக வீரர்களின் ஞாபகார்த்தமாக வருடந் தோறும் நடத்தப்பட்டுவரும் பத்துப் பந்துப் பரிமாற்றத்தினை கொண்ட மென்பந்துச் கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி ஆரம்பிக் கப்படவுள்ளது. இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் முல்லைத்தீவு மாவட் டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விளை யாட்டுக் கழகங்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி நண்பகல் 12மணிக்கு முன்னர் வித்தியா விளையாட்டுக் கழக நிரவாகத்தினருடன் தொடர்புகொண்டு தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறு வித்தியா விளையாட்டுக்கழக செயலாளர் த.ராஜ் கேட்டுள்ளார். அத்துடன் இப்போட்டிகளின் இறுதிப் போட்டியானது 2016ஆம் ஆண்டு தைப்பொங்கல் நாளன்று முள்ளியவளை வித்தியானந்த மைதானத் தில் இடம்பெறும் எனவும் மேலும் அவர் குறிப்பிட்டார். (2-302)

## முக்கொம்பன் பொதுச்சந்தையை துப்புரவு செய்து வியாபார நடவடிக்கைக்கு உதவுங்கள்

### வியாபாரிகள் கோரிக்கை



(முக்கொம்பன்)

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட முக்கொம் பன் பொதுச் சந்தையைச் சூழவுள்ள வளாகம் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதாகவும் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர் வியா பாரம் செய்வதற்கு அச்சப்படுவதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

இதனால் மீன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் வீதிகளில் நின்றே தமது வியாபாரத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

அத்துடன் பற்றைகள் சூழ்ந்து காணப்படுவதால் விஷ ஜந்துக் களின் நடமாட்டம் காணப்படுவதாக வும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களாகவே குறித்த சந்தையில் வியாபார நடவ டிக் கை மேற்கொள்ளப்படாது உள்ள தாக வியாபாரிகள் சுட்டிக்காட்டு கின்றனர்.

அத்துடன் மரக்கறி வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்படாது காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் குறித்த சந்தையை துப்புரவு செய்து வியாபார நடவடிக்கையை மீள வும் மேற்கொள்ள உதவ வேண்டுமென வியா பாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-283)

## சமகால சவால்கள் பற்றிய கலந்துரையாடல்

பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவிற்கும் முல்லைத்தீவு மாவட்ட அமரா குடும்ப தலைமை தாங்கும் பெண்களின் அமைப்பினருக்குமிடை யிலான சந்திப்பொன்று அண்மையில் புதுக்குடியிருப்பில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பெண்களை தலைமை யாகக் கொண்ட குடும்பங்கள் எதிர்நோக்கும் சமகால சவால்கள் பற்றி கலந்துரையாடிய அவர் பெண்களின் வாழ்வூதார மேம்பாடு மற்றும் கிராமிய உட்கட்டுமான அபிவிருத் திப்பணிகளையும் பற்றி கலந்துரையாடினார். மேலும் அங்கு உரையாற்றிய அவர், பெண் கள் அமைப்புக்களை கூட்டு முயற்சிகளின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய வளங்களை உரியமுறையில் பயன்படுத்தப்பட வேண்டிய தன் அவசியம் பற்றியும் குறிப்பிட்டதுடன் பெண் களை தலைமையாகக் கொண்ட குடுமபங் களின் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங் களுக்கான யோசனைகளையும் முன்வைத் தார். இறுதியாக பெண்கள் அமைபபினரால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (2-301-281)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராம மக்களுக்கு உதவிகள்



கடும் மழைகாரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பலகிராமங்கள் வெள் ளத்தில் மூழ்கின. இதனால் பலசிறுவர்கள் மலேரியா,வயிற்றோட்டம் போன்ற நோய் களின் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கின் றார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பரந் தன் சிவபுரம் மக்களுக்கு எவ்விதஉதவியும் கிடைக்காத நிலை மையை கவனத் தில் எடுத்த ஜேர்மனி யில் உள்ள தமிழர் கலாசார வட்டம் அமைப்பினர் அத்தி யாவசியஉதவியினை வழங்கியுள்ளனர். இந்நிகழ்வு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் மகேந் திரன் தலைமை யில அண்மையில் நடைபெற்றது. மற் றும் கிராம மாதர் அபிவிருத்தி சங்கத் தலைவி சி.கமலேஸ்வரி, கிராம அபி விருத்தி சங்க செயலாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இவ் உதவியினை வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் துணைத்தவிசாளர் ச.சஜீவன் மூலம் வழங் கியிருந்தனர். (2-4)

## முல்லை.மாவட்டத்தில்

## பச்சை மிளகாயிற்கு தட்டுப்பாடு விலையும் கிடுகிடுவென அதிகரிப்பு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக பச்சை மிளகாயிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதுடன் பச்சை மிளகாயின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்று, புதுக்குடியி ருப்பு ஆகிய பிரதேச பொதுச் சந்தைகளில் ஒரு கிலோ பச்சை மிளகாய் ,கொச்சிக்காய் என்பன ஆயிரத்து 200 ரூபா முதல் ஆயிரத்து 600 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்ற போதும் சில சந்தர்ப் பங்களில் எந்த ஒரு வியாபாரிகளிடமும் பச்சை மிளகாயையோ அல்லது கொச்சிக்காயையோ காண முடியாத நிலை காணப்படுகின்றது என மக்கள் தெரி விக்கின்றனர். இந்தத் தட்டுப்பாட்டிற்கு அண் மையில் பெய்த அடை மழை காரணமாக மிள காய் செய்கை பாதிக்கபட்டமையே காரணம் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (2-302)




## ஜனாதிபதி பதவியேற்று ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு மரநடுகை

(கற்குழி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒருவருட கால பூர்த்தியை யொட்டி கலந்துரையாடல் ஒன்று வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் அரச அதிபர் மாளிகையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் அரச மட்ட அதிகாரி கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 8ஆம் திகதி யன்று ஜனாதிபதி ஆட்சியைப் பொறுப்பேற்ற ஒருவருட பூர்த்தியையொட்டி தேசிய மரம் நடுகை திட்டமும் ,நாட்டு மக்களுக்கு நல்லாசி வேண்டி சர்வமத பிரார்த்தனையும் இடம் பெறுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனை யொட்டி சகல பிரதேச செயலாளர்களினால் இனங்காணப்பட்ட பொது இடங்களில் மரம் நடுவதற்கான ஒழுங்குகளையும் சர்வமத அனுஷ்டானங்களையும் உரிய நேரத்தில் மேற்கொள்ளுமாறும் கலந்து கொண்ட அனைவரிடமும் வவுனியா அரச அதிபர் கேட்டுக் கொண்டார். (2-302)

## குமுழமுனை-தண்ணீர்முறிப்பு வீதியை பயணிப்பதற்கு உகந்ததாக அமையுங்கள்

### பொதுமக்கள்,கமக்கார அமைப்பினர் கோரிக்கை

(மாமூலை)

முல்லைத்தீவு தண்ணீர்முறிப்பு விவசாய கிராமமாகும்.

இங்கு சுமார் 3ஆயிரத்து 450 ஏக்கர் நெற்பயிர் செய்கை பண்ணப்படுகின்றது.

இந்தக்கிராமத்தின் வீதிகளில் நாளாந்தம் சுமார் ஆயிரக்கணக்கான மக்கள் பயணம் செய்து வருகின்றனர்.

குமுழமுனை தொடக்கம் தண்ணீர்முறிப்பு வரையான வீதி போக்குவரத்திற்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது.

இவ்வீதி சுமார் 7.9 கிலோமீற்றர் நீள மானதாகும்.

முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்டதாகும்.

ஆனால் இவ்வீதி 5கிலோமீற்றர் மட்டுமே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பதிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீதியின் 2.9 கிலோமீற்றரானது வெறும் மணல் பாதையாகவே காணப்படுகின்றது.

நீர்ப்பாசன திணைக்களத்தினால் கடந்த 2012ஆம் ஆண்டு இவ்வீதியை புனரமைப் பதற்காக 396.3மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புப்பணிகள் ஆரம்பமானது.

இதன் ஒப்பந்தகாரரான மத்திய பொறி யியல் கட்டுமான சபை செயற்பட்டு வந்தது.

ஆனால் இவ்வீதி புனரமைப்பில் பல்வேறு பட்ட முறைகேடுகள் காணப்பட்டதாகவும் இங்கு மொத்தமாக 5 பாலங்களும் 2தாம் போதி புனரமைப்பும் குளத்திலுள்ள களி மண் ணைக் கொண்டே வீதி திருத்தம் செய்யப்பட் டதாகவும் இதனால் இவ்வீதி முன்னைய நிலையை விட சேதமடைந்தும் காணப்படு கின்றது.

அதுமட்டுமன்றி இவ்வீதியானது வீதி அபி விருத்தி அதிகார சபையின் கீழ் இருந்த இர ண்டு பாலங்களை உடைத்து அதிலிருந்த குழாய்களைக் கொண்டே நீர்ப்பாசன திணைக் களத்தினரால் உப வீதிகள் அமைக்கப்பட்டன.

தற்போது இதன் வழியாக பயணம் செய் யும் மக்கள் 100மீற்றர் தூரம் செல்ல வேண் டிய இடத்திற்கு 6கிலோமீற்றர் சுற்றி செல்ல வேண்டியுள்ளது.

இப்பாலப் பிரச்சினை தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் கடமையாற்றிய அரசாங்க அதிபரிடம் மக்கள் முறையிட்ட போது அர சாங்க அதிபர் நீர்பாசனத் திணைக்களத் தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது,

இருபாலங்களையும் 24 மணித் தியாலங் களில் மீளவும் திருத்தம் செய்து தருவதாக உறுதிமொழி வழங்கினர்.

ஆனால் இன்றுவரை பாலங்கள் புனர மைக்கப்படவில்லை.

அண்மையில் பெய்த கனமழை கார ணமாக வீதி மிகவும் சேதமடைந்து காணப் படுகின்றது.

எனவே குறித்த வீதியை காலம் தாழ்த்தாது உரியவர்கள் திருத்தம் செய்து போக்குவரத் துக்கு இலகுபடுத்தித்தருமாறு பொதுமக்கள், கிராம அபிவிருத்தி சங்கத்தினர்,கமக்கார அமைப்பினர் ஆகியோர் கோரிக்கை விடுத் துள்ளனர். (2-301)

## மீள்குடியேறியும் மின்சார வசதி இதுவரை வழங்கப்படாமையால் அவதியுறுகின்றோம்

(முள்ளியவளை)

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களில் மீள் குடியேறிய மக்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்தாமையினால் தாம் அவதியுறுவ தாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், தாம் இடம்பெயர்ந்து சுமார் 30 வருடங்களின் பின்னர் மீள் குடியமர்ந் துள்ளபோதும் தமக்கான அடிப்படைத் தேவையான மின்சார வசதியினை முழு மையாக ஏற்படுத்தித் தருவதற்கு உரிய அதிகாரிகள் தவறிவிட்டனர். தமது கிராமங் களில் வீதியோரம் வசிக்கும் சுமார் 10 வீதமா னோருக்கு மட்டுமே மின்சார வசதி ஏற் படுத்தப்பட்டுள்ளதாகவும் 90 வீதமானோர் மின்சார வசதியற்ற நிலையில் வாழ்ந்து வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

தமக்கான மின்சார வசதியினை ஏற்படுத் தாது காலத்திற்கு காலம் ஏமாற்றப்பட்டு வருவ தாகவும் விசனம் தெரிவிததனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமக்கு மின்சார வசதியை முழுமையாக பெற்றுத்தருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்து உதவவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோருகின்றனர். (2-302)

## மக்களின் காணி பிரச்சினையை தீர்க்க இன்று காணிக் கச்சேரி

### வவுனியா நகர செயலாளர் பிரிவில்

(கற்குழி)

வவுனியாவில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற காணிப் பிரச்சினை தீர்க்க முடியாதுள்ள நிலையில் அண்மையில் காணிகளுக்கான பதிவுகள் மேற்கொள் ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக வவுனியா நகர எல்லைக்குட்பட்ட மக்களின் காணி தொடர்பான பிரச்சினை மற்றும் காணி அனுமதிப்பத்திரம் தொடர்பான பிரச்சினைகள தொடர்பாக வவுனியா காணிக் கிளையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகர கிராம சேவை யாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இச்சந்திப்பில் காணி அலுவல்கள் உயர் அதிகாரிகளுடன் பிரதேச செயலாளர் கலந்து கொள்வார். தவறாது காணிப் பிரச்சினை கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் கல ந்து கொண்டு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள் ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (2-303)

# வடமாகாணத்தின் மூத்த பிரஜை 105 ஆவது வயதில் காலமானார்



வடமாகாணத்தில் அதிகூடிய வயது வரை வாழ்ந்த முதியவர் வேலாயுதம் சதாசிவம் தனது 105 ஆவது வயதில் வவுனியா வில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.20 மணியளவில் காலமானார். வவுனியா நகரசபையின் ஆரம்பகால செயலாளரும், கல்விமானும் சமூக ஆர்வலருமான இவரின் மறைவு, தமிழ்ச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும் என வவுனியாத் தமிழ்ச சங்கத்தின் சார்பாக அதன் செயலாளர் தமிழருவி த. சிவகுமாரன் அனுதாபச் செய்தியில் தெரிவித்தார்.

தமிழ்ச்சங்கத்தின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு அனைவரையும் உற்சாகப்படுத்தி வந்த இவரை தமிழ்ச் சங்கம் "சமூக ஜோதி" விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

வாழ்நாளின் பெரும் பகுதியை தமிழுக்கும் சைவத்திற்கும் அர்ப்பணித்து வாழ்ந்த இவரது மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினர்க்கும் சமூக ஆர்வலர்களுக்கும் ஆறுதல் கூறுவதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் வவுனியாத் தமிழ்ச்சங்கம் பிராத்திக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# ஐ.எஸ். தலைவன் கொல்லப்பட்டான்

## பென்டகன் அறிவிப்பு

பாரீஸ் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட ஐ.எஸ். தீவிரவாத தலைவன் சிரியாவில் கொல்லப்பட்டான் என்று அமெரிக்காவின் இராணுவ தலைமையகம் பென்டகன் அறிவித்துள்ளது.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த மாதம் 13 ஆம் திகதி காற்பந்து மைதானம், இன்னிசை அரங்கு உள்ளிட்ட 6 இடங்களில் ஐ.எஸ். தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். இதில், 125 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். இவர்களில் 3 தீவிரவாதிகள் பாரீஸ் நகரவாசிகள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனால், உள்நாட்டில் ரகசியமாக செயற்பட்டு வரும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் உதவியுடன் இந்த தாக்குதலை சிரியா தீவிரவாதிகள் நடத்தியிருப்பதும் பிரான்ஸ் பொலிஸாருக்கு தெரியவந்தது.

இதனையடுத்து பிரான்ஸ், பெல்ஜியம் உட்பட ஐரோப்பிய நாடுகளில் தீவிர சோதனை நடத்தப்பட்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். பிரான்ஸில் சிறப்பு படை எடுத்த அதிரடி நடவடிக்கையில் பெண் தீவிரவாதி உட்பட 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் பாரீஸ் தாக்குதலை சிரியாவில் இருந்துகொண்டு செயற்படுத்திய ஐ.எஸ். தீவிரவாத இயக்க தலைவன் கொல்லப்பட்டான் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. சிரியாவில் இம்மாதம் அமெரிக்க ராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில் தீவிரவாதி சரப்பே அல் மவுவதன் கொல்லப்பட்டான் என்று பென்டகன் அறிவித்துள்ளது. பாரீஸ் தாக்குதல் சூத்திரதாரி அப்துல் ஹமீத் அபவுத்தின் நெருங்கிய தொடர்பில் சரப்பே அல் மவுவதன் இருந்தான் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற வான்வழி தாக்குதலானது தீவிரவாத இயக்கத்தை வலுவிழக்க செய்ய மிகவும் உதவியாக இருக்கிறது என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் முதல் வெற்றியாக ரமாடி நகரம் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வற்றாப்பளை - கேப்பாபிலவு வீதி

# பொதுமக்கள் போக்குவரத்து செய்ய அனுமதிக்க வேண்டும்

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு

வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் காப்பெற் வீதியாக தரமுயர்த்தப்படவுள்ள வற்றாப்பளையில் இருந்து கேப்பாப்பிலவு வரையான வீதி புனரமைக்கப்பட்டதன் பின்னர் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்டு பொதுமக்களின் சுமுகமான போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படவேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மீள் குடியேற்றம் இடம்பெற்று ஆறு வருடங்கள் கடந்தும் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படாது இராணுவத்தினர் மாத்திரம் பயன்படுத்திவருகின்ற புதுக்குடியிருப்பில் இருந்து கேப்பாப்பிலவினூடாக வற்றாப்பளை செல்கின்ற மூன்று கிலோ மீற்றர் வரையான வீதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் காப்பெற் வீதியாக தரமுயர்த்தப்படவுள்ளது.

இவ்வீதியானது மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாத நிலையில் இப்பகுதி மக்கள் தமது போக்குவரத்துத்தேவைகளிற்காக தூரம் கூடிய செப்பனிடப்படாத பாதுகாப்பற்ற இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள மாற்று வழியையே பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் காப்பெற் வீதியாக தரமுயர்த்தப்படவுள்ள வற்றாப்பளையில் இருந்து கேப்பாப்பிலவு வரையான வீதி புனரமைக்கப்பட்டதன் பின்பு மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டு பொதுமக்களின் சுமுகமான போக்குவரத்திற்கும் அனுமதிக்கப்படல் வேண்டும்

மேலும் கேப்பாபிலவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள்,பாடசாலை, பொது மண்டபம், கோயில்கள், வீதிகள் என்பனவற்றை உள்ளடக்கியதாக காணப்படும் பெருமளவான நிலபரப்புக்களும் விடுவிக்கப்பட்டு மக்கள் தமது சொந்த நிலங்களில் இயல்பு வாழ்க்கை வாழ வழியேற்படுத்தப்படவேண்டும்.

மக்களின் காணிகளும் நிலங்களும் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிற்குள் தொடர்ச்சியாக இருந்து வரும் நிலையானது நல்லாட்சி அரசுக்கோட்பாட்டிற்கு எதிர்மறையான இயல்புகளையே வெளிப்படுத்துகின்றது. இந்நிலையான தமிழ் மக்களின் மனங்களில் இவ்வரசாங்கம் மீதான அதிருப்தி அலைகளினை தோற்றுவித்துள்ளது. என தெரிவிக்கப்பட்டு உள்ளது.(2-301)

# விமல் வீரவன்சவின் கட்சி சுதந்திரக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கவில்லை

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள சுந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கவில்லை என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் நான்கு கட்சிகளே உத்தியோகபூர்வமாக அங்கம் வகிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசவிமுக்தி ஜனதா கட்சி, மஹஜன எக்சத் பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா மஹஜன கட்சி ஆகியனவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இந்த கட்சிகளின் வரிசையில் தேசிய சுதந்திர முன்னணி கிடையாது. மஹஜன எக்சத் பெரமுன கட்சியுடன் நிலவி வரும் முரண்பாடுகள் களையப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத தெரிவித்தார்.(இ-7)

# முல்லை. கடற்கரைப் பகுதியில் இழுவைப்படகுகள் அத்துமீறல்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவிற்கு அண்மித்த கடற்கரை பகுதிகளில் 200 இற்கும் மேற்பட்ட இழுவைப்படகுகள் நேற்று முன்தினம் சட்டபூர்வமற்ற முறையில் தொழிலை செய்தனர். சட்டம், ஒழுங்கு எங்கே? இந்த அத்துமீறல் நடவடிக்கையை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு முதலமைச்சர், மீன்பிடி அமைச்சர் ஆகியோர் நடவடிக்கை மேற்கொ ள்ள வேண்டுமென வலியுறுத்துவ தாக வடக்கு மாகாணசபை உறுப் பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் 42 ஆவது அமர்வு நேற்று காலை 9.30 மணிக்கு கைதடியில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் சபைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.


இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


பல வழிகளிலும் பலத்த இழப்புக்களை சந்தித்து மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கும் எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஓரளவு காப்பாற்றும் இந்த கால கட்டத்தில் (இறால் சீசன்) இழுவைப் படகுகள் மூலம் இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்கள் அழித் துக் கொண்டிருக்கிறார்கள்.

முல்லைத்தீவில் மிகவும் கரைக்கு அண்மித்த பகுதிகளில் 200 இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் நேற்று முன்தினம் கூட தங்களின் சட்ட பூர்வமற்ற தொழிலை செய்தனர்.

சட்டம் ஒழுங்கு எங்கே? இந்த அத்துமீறல் நடவடிக்கை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு முதலமைச்சர் மற்றும் மீன்பிடி அமைச்சர் ஆகியோர் நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும். தமிழக மக்கள் எமது தொப்புள் கொடி உறவுகள். எமக்காக பல வழிகளிலும் தங்களை தியாகிப்பவர்கள் அர்ப்பணிப்பவர்கள். அத்தோடு இந்த விடயத்திலும் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உதவ வேண்டும்.


முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் உள்ளடங்கலாக வடக்கு மாகாண மீனவர்கள் சார்பாக இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன் என தெரிவித்தார். (2-4)





இரவு நேரத்தில் ஒளிரும் இந்தியா -பாகிஸ்தான் எல்லை, இமயமலையில் உள்ள பனிச்சிகரங்களின் நிழல், சஹாரா பாலைவனத்தில் தெரியும் தாவரங்கள் என்று சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள விண்வெளி வீரர்களால் இந்த ஆண்டு எடுக்கப்பட்டு நாஸாவால் வெளியிடப்பட்ட வியக்க வைக்கும் புகைப்படங்கள் இவை...

# வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன





(யாழ்ப்பாணம்)

வடமாகாண முதலமைச்சரின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியிலிருந்து 7 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய வாழ்வாதார உதவிப் பொருட்கள் நேற்றைய தினம் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனால் அவரது அலுவலகத்தில் வைத்து பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மாணவர்களுக்கும், விசேட தேவையுடையோர்களுக்கும், தொழில் அடிப்படையில் 33 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

அந்த வகையில் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பாடசாலை உபகரணங்களும், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள், சுய தொழில் முயற்சியாளருக்கு போட்டோ பிரதி இயந்திரம் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் போன்ற வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (படங்கள் :- பொ.சோபிகா)

## மணல் திருட்டு குறித்து வழக்கு

(கரணவாய்)

வீட்டு முற்றத்தில் பறிக்கப்பட்டிருந்த 2 லோட் மணல் திருடர்களால் களவாடிச் செல்லப்பட்ட திருட்டுச் சம்பவம் கரவெட்டியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டின் உரிமையாளர்கள் நீண்ட நாட்களாக வீட்டில் இல்லாத நிலையிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவ தினத்தன்று வீட்டுக் கேற்றின் பூட்டை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் வீட்டு முற்றத்தில் பறிக்கப்பட்டிருந்த 2 லோட் மணலை தமது வாகனத்தில் ஏற்றியதுடன் வீட்டுக்கதவை உடைத்து பெறுமதிமிக்க பொருட்களையும் களவாடிச் சென்றனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக வீட்டு உரிமையாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-5-60)

## பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தான நாடுகளின் பட்டியலில் சிரியா முதலிடம்

உலகளவில் பத்திரிகையாளர்களுக்கு மிகவும் அச்சுறுத்தலான நாடுகளின் பட்டியலில் சிரியா முதலிடம் பிடித்துள்ளது.

உலகம் முழுவதும் ஊடகம் மற்றும் பத்திரிகைகளில் பணியாற்றி வருபவர்களுக்கான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டில் தமது பணியின் காரணமாக 69 செய்தியாளர்கள் பலியாகியுள்ளதாக ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு குழுவான சிபிஜே தெரிவித்துள்ளது.

மேலும் இந்த குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தான நாடுகள் பட்டியலில் சிரியா முதலிடத்தை பிடித்துள்ளது.

இந்த ஆண்டில் 13 ஊடகவியலாளர்கள் அங்கு கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை குறைவாகும்.

சிரியாவில் நடைபெற்று வரும் போர் காரணமாகவும், ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொடூர தாக்குதல்கள் காரணமாகவும் செய்தியாளர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் கடந்த 4 ஆண்டுகளாக இந்த பட்டியலில் சிரியா முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உள்ள சார்லி ஹெப்டோ பத்திரிகையின் தலைமையகத்தில் ஊடகவியலாளர்கள் 9 பேர் கொலை செய்யப்பட்டதை அடுத்து ஊடகவியலாளர்களுக்கு மிகவும் மோசமான நாடுகளின் பட்டியலில் பிரான்ஸ் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

இந்த ஆண்டில் மட்டும் தமது பணியை செய்ததற்காக பிரான்ஸில் மொத்தம் 13 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் இராக், பிரேசில், வங்கதேசம், தென் சூடான் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில் இந்த ஆண்டு முறையே தலா 5 செய்தியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பாகிஸ்தானில் ஒரே நாளில் 4 தீவிரவாதிகளுக்கு தூக்கு

பாகிஸ்தானில் பெஷாவர் இராணுவ பாடசாலையில் தீவிரவாதிகள் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடத்திய கொடூர தாக்குதல்களில் குழந்தைகள், ஆசிரியர்கள், ஊழியர்கள் உட்பட 144 பேர் கொல்லப்பட்டனர்.

உலகமெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த கொடிய சம்பவத்தை தொடர்ந்து, பாகிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்ற விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக்கொள்ளப்பட்டது.

அத்துடன், தீவிரவாதிகள் மீதான வழக்குகளை விரைவாக விசாரித்து தீர்ப்பு வழங்க ஏதுவாக இராணுவ நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இதற்காக அந்த நாட்டின் அரசியல் சட்டத்திலும், இராணுவ சட்டத்திலும் திருத்தங்கள் செய்யப்பட்டன.

ஆனால் இந்த இராணுவ நீதிமன்றங்களுக்கு எதிராக பாகிஸ்தான் உயர் நீதிமன்றில் வழக்குகள் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கை தலைமை நீதிபதி நசிருல் முல்க் தலைமையிலான 17 நீதிபதிகள் அமர்வு விசாரித்தது. 11இற்கு 6 என்ற அளவில், பெரும்பான்மை நீதிபதிகள் இராணுவ நீதிமன்றம் அமைத்தது செல்லும் என தீர்ப்பு அளித்தனர்.

இந்த நிலையில் அங்கு தற்கொலைப்படை தாக்குதல், பணத்துக்காக ஆட்களை கடத்துதல், தீவிரவாத இயக்கங்களுக்கு நிதி உதவி அளித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் 4 தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை விதித்து இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கின.

அந்த தீவிரவாதிகள் நூர் சயீத் என்ற ஹபீஸ் சாகிப், முராத் கான், இனயதுல்லா, இஸ்ராருதீன் என்ற அபு லாயிஸ் ஆவர்கள்.

இவர்களை தூக்கில் போட்டு தண்டனையை நிறைவேற்றுவதற்கு இராணுவ தளபதி ஜெனரல் ரஹீல் ஷெரீப் கையெழுத்திட்டு உத்தரவு பிறப்பித்தார்.

இதையடுத்து இந்த 4 பேரும் அங்கு கைபர் பக்துங்குவா மாகாணத்தில் உள்ள கொஹாட் சிறையில் நேற்று முன்தினம் தூக்கில் போடப்பட்டனர்.

இங்குள்ள மற்றொரு சிறையில் இந்த மாதத்தின் தொடக்கத்தில் பெஷாவர் இராணுவ பாடசாலைத் தாக்குதல் வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 4 பேர் தூக்கில் போடப்பட்டது நினைவு கூரத்தக்கது.

பாகிஸ்தானில் மரண தண்டனை நிறைவேற்ற விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்ட இந்த ஓராண்டு காலத்தில் இதுவரை 310இற்கும் மேற்பட்டோர் தூக்கில் போடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கொண்டாட்டங்களின் போது தாக்குதல் நடத்த திட்டமா?

புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த இரண்டு நபர்களை பெல்ஜியம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இன்னும் சில தினங்களில் புத்தாண்டு பிறக்கவுள்ள நிலையில், அதனை வரவேற்க மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் பிரஸெல்சில் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக இருவரை பெல்ஜியம் பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-7)

## செவ்வாயில் நிலச்சரிவு



(வோஷிங்டன்)

பூமியில் இருந்து சுமார் 22 கோடி கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செவ்வாய் கிரகத்தை பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் மும்முரமாக ஈடுபட்டு உள்ளன.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான 'நாசா', செவ்வாய் கிரகத்தில் கியூரியாசிட்டி என்ற விண்கலத்தை இறக்கி உள்ளது. செவ்வாய் கிரகத்தில் கியூரியாசிட்டி புகைப்படங்களை எடுத்து அனுப்பி வருகிறது.

மேலும் கியூரியாசிட்டி பல வேறு பகுதிகளை துளையிட்டு மண் மாதிரிகளை எடுத்து சோதனைகளை மேற்கொண்டு அதன் ஆய்வு அறிக்கைகளையும் அனுப்பி வருகிறது.

அண்மையில் கியூரியாசிட்டி ரோவர் மவுண்ட்சார்ப் ஏரியாவில் மான் தோல் போல் இருக்கும் பாறை பகுதியை தோண்டி மாதிரியை எடுத்து ஆய்வில் ஈடுபட்டது. அவ்வாறு தோண்டிய போது அங்கு அரிய கனிமங்களும் மற்றும் தொந்தரவு தரும் நீல நிற தூசியும் வெளிப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் செவ்வாய் கிரகத்தில் நிலச்சரிவு ஏற்பட்டு உள்ளது. அதனை கியூரியாசிட்டி மண் குவியலுடன் கூடிய படத்தை எடுத்து அனுப்பி உள்ளது. ஒரு பள்ளத்தாக்கில் ஏற்பட்ட நிலச்சரிவு பாறாங்கல் மற்றும் மணலால் மூடப்பட்டிருக்கும் காட்சியை அந்த புகைப்படம் காட்டுகிறது.

இந்த நிலச்சரிவு சமீபத்தில் ஏற்பட்டு உள்ளது. பல தனிப்பட்ட கற் பாறைகள் சரிந்து உள்ளன என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து உள்ளனர். (இ-7)

## மேக் அப் அதிகம்

## பேருந்திலிருந்து இறக்கிவிடப்பட்ட இங்கிலாந்து சிறுமியால் பரபரப்பு



இங்கிலாந்தில் மேக் அப் அதிகம் என்று கூறி சிறுமியை பேருந்தில் இருந்து இறக்கிவிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வாரம் சஹ்ரா சாதிக் என்ற அந்த 15 வயது சிறுமி, பர்மிங்காம் தேசிய நெடுஞ்சாலையில் பேருந்தில் பயணம் செய்துள்ளார். அந்த பேருந்தில் இருந்த பெண் நடத்துநர், சஹ்ரா சாதிக்கின் சிறுமிகளுக்கான பயணச் சீட்டை வாங்கி பரிசோதித்துள்ளார்.

பின்னர் உன்னையும் உன் மேக் அப்பையும் பார்த்தால் சிறுமி போல் தெரியவில்லை என்று கூறி அந்த பெண்ணை நடுவழியில் இறக்கிவிட்டுள்ளார். மேலும் 35 பவுண்ட் அபராதமும் விதித்துள்ளார்.

தற்போது இந்த செய்தி ஊடகங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது. (இ-7)

# உள்ளூராட்சி மன்ற மோசடிகள் குறித்து இதுவரை 98 முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

**உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகள் தொடர்பில் 98 முறைப்பாடுகள் ஊழல் மோசடி பிரிவிற்கு கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.**

இந்த முறைப்பாடுகள் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் இறுதி வரை கிடைக்கப்பெற்றதாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மேல் மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும், வடமாகாணத்தில் 5 முறைப்பாடுகளும், தென் மாகாணத்தில் 4 முறைப்பாடுகளும், கிழக்கு மாகாணத்தில் 6 முறைப்பாடுகளும் மேலும் மத்திய மாகாணம் குறித்து 8 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன..

அத்துடன் அதி கூடிய முறைப்பாடுகள் மேல் மாகாணத்திலும் குறைந்தளவிலான முறைப்பாடுகள் சப்ரகமுவ மாகாணத்திலும் கிடைக்கப்பெற்றதாக கூறப்படுகிறது.


இதன் பிரகாரம் குறித்த முறைப்பாடுகள் மாகாண சபைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதோடு, முறைப்பாடுகள் தொடர்பான அறிக்கை அமைச்சருக்கு கையளிக்கப்பட்டு அதன் பின்பே மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை சில உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லை நீடிப்பு தொடர்பான வர்த்தமானி அறிக்கை வெளியிடப்பட்டது.

கலைக்கப்படாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான கால எல்லை ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொழும்பு மாநகர சபை, தெஹிவளை மற்றும் கல்கிசை மாநகர சபை உள்ளிட்ட 23 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் டிசெம்பர் 3 ஆம் திகதியுடன் நிறைவடையும் எனவும் கூறப்படுகிறது. (இ-7)

# தரம் -1 மாணவர்களின் பிரவேசமும் பாடசாலைக் கல்விக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பமும்



கருணாமூர்த்தி பத்மகாந்தன்
ஆசிரியர்,
யா/மிருசுவில் அரசினர்
தமிழ் கலவன் பாடசாலை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பிள்ளைகளை இனங்காணலில் உள்ளடங்கும் துறைகள் மற் றும் செயற்பாடுகள்

தரம் ஒன்றில் புகும் மாணவர்களை இனங்காணல் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் 16 வகையா செயற்பாடுகள் காணப்படுகின்றன.

1.விளையாட்டுவீடு-விளையாடுவோம்
2.ஓடுவோம், பாய்வோம், ஏறுவோம்
3.வெட்டி ஒட்டுவோம்
4.தாளை உருண்டையாக்குவோம்
5.தாளை கிழிப்போம்- பூக்கள் செய்வோம்
6.பகுதிகளை இணைப்போம்
7.ஆக்கம் செய்வோம்
8.கோலங்களை இனங் காண்போம்
9.எண்ணுவோம்
10.செவிமடுப்போம்
11.கதைப்புத்தகம் பார்ப்போம்
12.ஒரு நிகழ்வை/ கதையை கட்டியெழுப்புவோம்
13.சித்திரம் வரைவோம்
14.ஆடுவோம் பாடுவோம்
15.மகிழ்வோம்
16.சுகாதாரமும் பழக்கவழக்கங்களும் மற்றும் கற்றலுக்குத் தேவையான திறன்கள் இப்பதினாறு செயற்பாடுகளையும் இரண்டு கிழமைகளுக்கு ஏற்றவாறு ஒழுங்குபடுத்தி செயற்படுத்துதல் சிறந்ததாக எதிர்பார்க்கப்படுகிறது.

இச்செயற்பாடுகளைச் செயற்படுத்துகின்ற போது இச்செயற்பாடுகள் சிலவற்றினது ஒன்றிணைப்பு மற்றும் தனிச் செயற்பாட்டின் மூலமாகவும் பல்வேறு திறன்கள் மாணவர்களிடத்தே கட்டியெழுப்பப்படுதல் இடம்பெறுகிறது. இத்திறன்களாாக

1.பேரியக்கத் திறன்கள்
2.நுண் இயக்கத் திறன்கள்
3.புரிகை/ அறிகைத் திறன்கள்
4.சமூகத் திறன்கள்
5.மொழித்திறன்கள்
6.இரசனைத் திறன்கள்
7.தனிப்பட்ட சுகாதாரமும் பழக்க வழக்கங்களும் கற்றலுக்கான திறன்கள் என்பன காணப்படுகின்றன.

மாணவர்களது பாடசாலைக் கல்வியின் ஆரம்பக் கட்டங்களில் இடம்பெறவேண்டிய பிள்ளைகளது முழுமையான விருத்தியில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களாக இப்பிள்ளைகளை இனங்காணல் செயற்பாட்டின் போதான பாடசாலையின் தயார் நிலை மற்றும் குடும்பத்தினது தயார் நிலை என்பன விளங்குகின்றன.

**பாடசாலையின் தயார் நிலை**

**பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்** என்ற இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பாடசாலையின் தயார் நிலையை நாம் எடுத்து நோக்கின் இங்கு அதிபர் மற்றும் ஆசிரியர்களது பங்கு மிக முக்கியமானதாகும். அந்நிலையில் இந்நிகழ்ச்சித்திட்டம்

1.அதிபர் தலைமையில் திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு அமுல்படுத்தப்படல்

2. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுமதித்தலுடன் இச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படல் (கால்கோள்விழாவிற்கு முன்னர் செயற்படுத்தப்பட்டிருத்தல்)

3.ஆரம்பக்கல்வி தொடர்பாக திறமையும் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஒருவரை முதலாம் தரத்திற்கு நியமித்தல்

4.இயன்றளவு ஆண் ஆசிரியரைத் தவிர்த்து பெண் ஆசிரியரை நியமித்தல் ஆரோக்கியமானது

5.நியமிக்கப்பட்ட ஆசிரியரை இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான செயலமர்வுகளுக்கு முற்கூட்டியே அனுப்புதல்

6.நியமிக்கப்பட்ட ஆசிரியரை இடம் மாற்றுதல் தவிர்க்கப்படல் வேண்டும்

7.இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக முதலாம் தர ஆசிரியர்கள் ஏனைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவைகளை இனங்காண்பதற்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும் அதிபர் தலைமை தாங்குதல்

8.இவ்வேலைத்திட்டம் தொடர்பான நோக்கங்கள், குறிக்கோள்கள் செயன்முறை தொடர்பாகப் பெற்றோருக்கு அறிவுறுத்தல்களை ஆரம்பத்திலேயே வழங்குதல்

9.செயன்முறையை நடைமுறைப்படுத்தும் விதம், பிள்ளைகள் தொடர்பான அறிக்கைகள் பேணும் விதம் தொடர்பாக முழுமையான கண்காணித்தலை அதன் மேற்கொள்ளல் வேண்டும்

10.இந்நிகழ்ச்சித்திட்டம் சிறப்பாக வெற்றியடைய முடியுமான பங்களிப்பை வழங்குதல் வேண்டும்

**ஆசிரியர்களினால் பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள்**

1. ஆசிரியர் தான் ஒரு தீர்ப்பாளர் எனும் நிலையை விடுத்து தாய் போல பிள்ளைகளது பிரச்சினைகளை அவதானித்து இனங்கண்டு கொள்ளல்

2.இச்செயற்பாடுகளை நடத்தும் வேளையில் ஒவ்வொரு பிள்ளையினதும் ஆற்றல்களை குறிப்பாக இனங்காணல்

3.இவ்வேலைத்திட்டம் ஒரு சோதனை அல்ல என்பதனை நன்கு கருத்தில் கொள்ளல் வேண்டும்

4.செயற்பாடுகளை செயற்படுத்துவதுடன் நன்கு அவதானித்து வேலைத்திட்டத்தின் இறுதியில் கணிப்பீட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்தல்

5.குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் ஒவ்வொரு செயற்பாடுகளுக்குப் பதிலாக மாற்றுச் செயற்பாட்டுத் திட்டங்களை நன்கு திட்டமிட்டு பயன்படுத்துவதற்கான சுதந்திரம் உண்டு

6.சக ஆசிரியர்கள், அதிபர் பெற்றோர்களுடன் கருத்தாடல்களை மேற்கொண்டு செயற்பாடுகளைத் திட்டமிடுவதுடன் உதவிகளையும் பெற்றுக்கொள்ளல்

7.இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பெற்றோர்களுக்குப் பூரண அறிவுறுத்தல்களை வழங்குதல்

8. பாடசாலைச் சமூகத்திற்குப் பொருந்தக்கூடியதும் வசதியானதுமான உடைகளை அணிந்து பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கல்

9. பிள்ளைகள் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் ஈடுபடும்போது அவர்களது பாதுகாப்பு தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டும்

10.மாணவர்கள் மகிழ்ச்சியுடனும் இரசனையுடனும் ஆர்வத்துடனும் செயற்படக்கூடிய வகையில் செயற்பாடுகளை அமைத்தலும் நட்புடன் உறவாடலும்

11. வகுப்பு மாணவர்கள் அனைவரும் கூட்டாக பங்கு கொள்ள சந்தர்ப்பம் வழங்குதல்.

12. செயற்பாடுகளை மேற் கொள்ளும் வேளைகளில் எல்லாப்பிள்ளைகள் மீதும் கரிசனை காட்டுதல் வேண்டும். அதை விடுத்து பாராபட்சம் காட்டலாகாது.

13.ஆசிரியர்களது கருத்தாடல்கள் மற்றும் சொற்பிரயோகங்கள் நேர்த்தியானதாகவும் மாணவர்களால் விரும்பப்படக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். அதற்கேற்ப தம்மை இயைபு படுத்தல் நல்லது.

**பெற்றோர்களது பங்களிப்பு**

1.இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பூரண விளக்கத்தை ஆசிரியர்களிடமோ, அதிபரிடமோ அறிந்து கொள்ளல்.

2. தனது பிள்ளையினது கற்றல் மேம்பாட்டிற்கு இந் நிகழ்ச்சித் திட்டம் அவசியம்என்பதை உணர்தல்.

3.ஆசிரியர்களுடன் சேர்ந்து இந் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக்க பங்காற்றுதல்.

4.இந் நிகழ்ச்சித்திட்டத்தில் தனது பிள்ளையினைப் பூரணமாகப் பங்கெடுக்க உதவுதல். (வரவைச் சிறப்பாகப் பேணல்)

5.பிள்ளைகளது பாதுகாப்பில் கூடிய கவனம் எடுத்துச் செயற்படல்.

6. பிள்ளைகளிற்கு மகிழ்ச்சிகரமான சூழலை வீட்டிலும் பேணல்.

7.தமது பிள்ளைகளின் விருத்தி தொடர்பாக கொண்டிருக்கின்ற மறையான மனப்பாங்குகளை அகற்றிக் கொள்ளல்.

**முடிவுரை**

இவ்வகையில் நாம் பார்க்கின்ற போது இன்றைய கல்வி நிலையில் ஆரம்பக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன் தரம் 1 இல் புதிதாக பிரவேசிக்கும் பிள்ளைகளை நன்கு இனங்காணுதல் நிகழ்ச்சித் திட்டமானது அம் மாணவர்களை பாடசாலைச் சூழலுடன் இயைபுபடுத்தி, ஓர் விருப்புடைய இடமாக பாடசாலையை மாற்றுவதுடன், எதிர்கால கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டத்தினையும் வகுத்துக்கொள்ள ஏதுவாக அமைகின்றது. இச் செயற்றிட்டத்தை சிறப்பாக மேற் கொள்ள பாடசாலைச் சமூகம் மற்றும் பெற்றோர் ஆகியோரது பங்களிப்பும் அவசியமானதொன்றாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(முற்றும்)

# 'வலம்புரி' புருசோத்தமனுக்கு க

உண்மையும் அன்பும் நிறைந்த, சகோதரர் புருஷோத்தமனுக்கு, இப்பெயரில் எழுதியவர் யார் என்று, நான் ஊகித்தது சரியாய் இருக்கும் என்ற நம்பிக்கையோடு, இக்கடிதத்தை எழுதத் தொடங்குகிறேன். உங்கள்உண்மைப்பெயரிலேயே இக் கடிதம் எழுதப்பட்டிருந்தால், நான் இன்னும் மகிழ்ந்திருப்பேன். உண்மையை உரைப்பதற்கு எதற்கு முகமூடி? ஆனால் உங்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் இருக்கிறது என்று அறியாமல், அதுபற்றி அதிகம் நான் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை. எனவே நேரே விடயத்திற்கு வருகிறேன்.

தங்கள் கடிதம் மிக நாகரிகமாக எழுதப்பட்டிருந்தது. அந்தப் பண்பாட்டை முதலில் பாராட்ட விரும்புகிறேன். பொதுவாக எனது விமர்சனங்களுக்குப் பதில் உரைக்க வருபவர்கள், நான் எழுதியவை பற்றி எழுத முனையாமல், என்னைத் துரோகியாகவும், திருடனாகவும், வஞ்சகனாகவும் வர்ணித்து, அல்லது தேவையில்லாமல் கம்பனைக்கண்டித்தும் தூஷிக்கவே முனைகிறார்கள். அண்மையில் ஒரு இணையத்தளம், என்னைக் காமுகனாகவும் வர்ணித்திருந்தது. அவற்றையெல்லாம் கண்டு, நம் இனம் இவ்வளவுதானா? என்று சலித்திருந்த எனக்கு, உங்கள் நாகரிகமானமடல்மகிழ்வுதந்தது. அந்த நாகரிகத்திற்கு என் நன்றிகள்.

உங்கள் மடலின் தொடக்கத்தில் என்னை நிறையவே பாராட்டியிருந்தீர்கள். எனக்கு யாழ்.பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் தரவேண்டும் என்கின்ற, உங்களின் விதந்துரைப்பு ஆச்சரியம் தந்தது. ஆனால் ஒன்று. இத்தகு ஆசைகளை நான் கடந்து பலகாலமாகி விட்டது என்பதை, தயை கூர்ந்து தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்கலைக்கழகம் எனக்கு மதிப்பளிக்கவேண்டும் என்று, நான் என்றும் எதிர்பார்த்தவன் அல்லன். அத்தகைய எதிர்பார்ப்பு எனக்கு துளியளவேனும் இருந்திருந்தால், நான் அவர்களுடன் பலதரம் பகிரங்கமாக மோதியிருக்க மாட்டேன். அதுமட்டுமல்ல, தப்பித் தவறி அதிசயமாய், பல்கலைக்கழகம் அத்தகு முடிவொன்றுக்கு வந்தாலும், நிச்சயம் அதை நான் நிராகரிப்பேன் என்பது உறுதி. காரணம் வரிசை பேணப்படாது, தகுதி பாராமல், தம் தனித்தொடர்பு பற்றி, பட்டங்களுக்காய் தவமிருப்போருக்கு பல்கலைக்கழகத்தாரால் வரங்களாய் அளிக்கப்படும் விருதுகள், என்னைப் பொறுத்தளவில், இழிவுக்குரியனவே அன்றி பெருமைக்குரியன அன்றாம். உண்மைக்காய்ப் பல விடயங்களில் பலபேருடன் மோதியும், இன்றும் மக்கள் தரும் அன்பும், மரியாதையும்,அங்கீகரிப்புமே, எனக்குக் கிடைத்த பெரும் விருதென்று கருதுபவன் நான். இதனைத் தயைகூர்ந்து அலட்சியமாய்க் கொள்ளற்க. என்னை நேசிக்கும் உங்களுக்கு,என் நிலை உரைப்பது அவசியம் என்று கருதியதால்தான், இதனை எழுதினேன்-அவ்வளவே!

என்மீது தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் போலவே, தங்கள் மீதும் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன். இனப்பற்றும், மொழிப்பற்றும், நடுநிலைமையும், உங்களிடம் எப்போதும் இருக்கும் என்று நம்புகிறவன் நான். உங்களது எழுத்திலும், பேச்சிலும், சத்தியத்தின் சாயல் கண்டு மகிழ்பவன் நான். அதனாற்றான் தாங்கள் எழுதிய மடலின் ஒவ்வொரு வரியையும், நிதானித்து, படித்து, உணர்ந்து உடன் இப்பதிலை எழுதத்தொடங்குகிறேன. தாங்கள் எழுதிய விடயத்திற்குள் நுழையும்முன்புஒருவேண்டுகோள் இக்கருத்துப் பரிமாற்றம் எங்களது தனி உறவை, எவ்விதத்திலும் பாதிக்கக்கூடாது என்பதே அவ் வேண்டுகோள்ஆகும். முரண்பட்டவர்கள் நாகரிகத்தோடு ஒருவர்க்கொருவர் கருத்துப் பரிமாறி, பகையின்றி தம் முரண்பாட்டைத் தீர்க்க முயலலாம்எனும்விடயத்தில, நம் அரசியல் தலைவர்களுக்கு, நாம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என்பது எனது பேரவா.

**அன்பு நண்பா!**

நான் ஒன்றும் கூட்டமைப்பின் ஆதரவாளன் அல்லன். கடந்த தேர்தல் காலத்தில், உகரத்தில் நான் எழுதிய கட்டுரைகளையும், 'தூண்டில்' பதில்களையும் நீங்கள் படித்திருப்பீர்கள். அவற்றில் அவர்களை நான் எவ்வளவு கடுமையாகச் சாடியிருந்தேன் என்பதையும், நிச்சயம் நீங்கள் அறிந்திருப்பீர்கள். என்னைப் பொறுத்தவரை நான் எந்தக்கட்சிக்கோ, அல்லது எந்தக்கட்சியையும் சார்ந்த தனித்தலைவர்களுக்கோ, எதிரியோ, ஆதரவாளனோ அல்லன். ஒட்டுமொத்த இனத்தின் நன்மை நோக்கிய முயற்சியில், இயங்குபவர்களைப் பாராட்டவும், மறுதலையாய் இயங்கு பவர்களைக் கண்டிக்கவுமே, இதுவரை என் எழுத்துக்களையும், பேச்சுக்களையும் நான் பயன்படுத்தியிருக்கிறேன்.

புலிகள் இருந்த காலத்தில், அவர்கள் எதைச் சொன்னாலும், கற்றவர்கள் அதற்கு 'சலாம்' போட்டுக்கொண்டிருந்தபோது, புலிகளின் மேடையிலேயே அவர்களின் சில தவறுகளை, துணிந்து சுட்டிக்காட்டியவன் நான். திலீபனின் நினைவுநாளில், காவடி, தூக்குக்காவடி, பஜனை, வர்த்தகர்களின் கட்டாயவரவுப்பதிவு என்பனவாய், தவறுகள் நிகழ்ந்த போது, ஆயிரக்கணக்கான மக்கள் முன் நிகழ்ந்த, திலீபனின் நினைவு நிறைவுநாள் கூட்டத்தில், புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் எல்லாம் மேடையைச் சூழ்ந்து நிற்க, மேற்செயல்கள் தவறென்று சுட்டிக்காட்டி, அதனை உடன் நிறுத்த வேண்டும் என்று, பகிரங்கமாய் அறைகூவல் விடுத்தேன். மண்ணுக்காக உயிர்துறந்த ஒரு தியாகிக்கு அஞ்சலி செலுத்த மக்களை கட்டாயப்படுத்தி அழைத்து வருவது வெட்கக்கேடு என்று துணிந்து சொன்னேன். புலிகளின் மேடையில் வைத்தே நான் புலிகளைக்கண்டித்ததைக் கண்டு, பலரும் திகைத்தார்கள். அன்றுதான் சத்தியத்தின் பெருமையை நான் உணர்ந்தேன். நிகழ்ச்சி முடிந்து மேடையைவிட்டு நான் கீழிறங்கியபோது, காவற்றுறைப் பொறுப்பாளர் நடேசன் உட்பட ஆயுதத்துடன் நின்ற, அனைதது புலி உறுப்பினர்களும் எழுந்து நின்று ஒதுங்கி தலைவணங்கி என்னை மரியாதை செய்தார்கள். அப்போதும், இப்போது போலவே வால்பிடிப்போர் பலரும் என்னை 'றோவின்' கையாள் என்றும், புலிகளின் புலனாய்வுத்துறை என்னைக் கடத்தப்போகிறது என்றும், பரவலாய்ப் பேசினார்கள். புலிகள் மத்தியிலும் சில சலசலப்பு உண்டானதுஉண்மையே.ஆனால என்கருத்து சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்து, அடுத்த ஆண்டு நடந்த திலீபனின் நினைவுதின விழாவில், நான் சொன்ன விடயங்கள்எல்லாம்தவிர்க்கப்பட்ட போது, உண்மையில்உளம்குளிர்ந்தேன்.

அதுமட்டுமல்ல, நாங்கள்கம்பன் விழாக்களை நடத்திக் கொண்டிருந்த பொழுது, புலிகளின் வானொலியில் கம்பனையும், இராமனையும் இழிவுபடுத்தி, இராவணன் பற்றிய ஒரு நாடகம் ஒலிபரப்பப்பட்டது. பின்னாளில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட, எங்கள் நண்பர் பொன் கணேசமூர்த்தி அவர்களே, புலிகளுக்காக அந்த நாடகத்தை எழுதி தயாரித்து வெளியிட்டு வந்தார். முழுக்க முழுக்க கம்பனையும், இராமனையும் கொச்சைப்படுத்தும் விதத்தில், அந்த நாடகம் தயாரிக்கப்பட்டிருந்தது. அப்போது யாழிலிருந்த அனைவருக்கும், இந்த நாடகம் கம்பன் கழகத்திற்கு எதிராகச் செய்யப்படும் முயற்சி என் பது தெரிந்திருந்தது. அந்த நாடகம் முடிந்தபோது, அம் முயற்சியில் ஈடுபட்டவர்களைப் பாராட்டுவதற்காகப் புலிகள் அமைப்பு, இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் ஒருவிழாவினை ஏற்பாடு செய்திருந்தது. அந்த விழாவிற்கு ஆச்சரியமாகப் புலிகள் என்னையும் பேச அழைத்திருந்தனர். அழைப்பிதழில் எனது பெயரைக் கண்ட அனைவருக்கும் ஆச்சரியம். விழா நடந்த போது, ஈரோஸ் பாலகுமாரன், புதுவை இரத்தினதுரை, பொட்டம்மான் போன்ற புலிகளின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். எல்லோரும்என்னை விளித்து, எதிர்க்கருத்துக்களை மரியாதை குறையாமல் பேசினார்கள். மண்டபம் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. பலரும் இவர் என்ன் செய்யப்போகிறார்? எப்படிச் சமாளிக்கப்போகிறார்? என்று, ஆர்வத்தோடு என் பேச்சிற்காகக் காத்திருந்தார்கள்.

மேடையேறிய நான். 'காய்ச்சல் வந்தவனுக்கு வாட்டிய பாண் (ரொட்டி) நல்ல உணவுதான். அது காய்ச்சல் நேரத்திற்கே உகந்தது. அதனை அவன் எப்போதும் சாப்பிடமுடியாது. காய்ச்சல் மாறியதும் சுவையும் பலமுமிக்க 'புரியாணியை' அவன் நிச்சயம் நாடுவான். அதுபோல தமிழினத்திற்கு நோய் வந்திருக்கிற இன்றைய நிலையில் வேண்டுமானால், நீங்கள் கம்பனை ஒதுக்கி வைக்கலாம். ஆனால் நாளை நம் இனம் உரிமை பெற்று தலை நிமிர்ந்ததும், ஒவ்வொரு தமிழனும், கம்பனைத் தானாக நாடுவான். அதை உங்களால் தடுக்க முடியாது. அப்படிக் காலம் கனிந்ததும் கம்பனைத் தேடப்போகிற இனத்திற்காகவே, நாம் கம்பனைக் காத்து வருகிறோம். அதைப் புரிந்து கொள்ளுங்கள்' என்றும், தமிழகத்தில் திராவிடர் கழகத்தினர், ஆரியர்களுக்கு எதிரான தம் போராட்டத்தை வெளிப்படுத்தும், ஒரு குறியீடாகவே கம்பனை எதிர்த்தார்கள். நம் தமிழ் மண்ணில், ஆரிய, திராவிட போராட்டம் என்பதே இல்லை. எனவே திராவிடர் கழகங்களின் கொள்கையை, இங்கு நீங்கள் வீணாய் நடைமுறைப்படுத்த நினைப்பது தவறு' என்று சொன்னதோடல்லாமல், மேடையின் முன்பு இருந்த புலிகளின் ஆதரவாளரான, யாழ் வீரமணி ஐயரைச் சுட்டிக்காட்டி, 'இதோ இவர் ஆரியர் தான் இவரை உங்களால் வெறுக்கமுடியுமா?' என்று கேட்டேன். புலிகள் சங்கடப்பட்டுப் போனார்கள். சபை கைதட்டி ஆரவாரித்தது. நான் இதுவரை பேசிய பேச்சுக்களில் மறக்கமுடியாமல், என் மனதில் பதிவானவற்றில் இவ்விரண்டு பேச்சுக்களும் அடங்கும். காரணம். இவை சாமர்த்தியமான பேச்சுக்கள் என்பதால் அல்ல. சத்தியமான பேச்சுக்கள் என்பதால்.

இளமைதொட்டே நான் இப்படித்தான் வளர்ந்திருக்கிறேன். இந்துக்கல்லூரியில் நான் ஏ.எல் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தபோது, நடந்த ஒரு சம்பவத்தையும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அப்போது யாழ்.மேயராக தமிழ் காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த, திரு.ராஜா விஸ்வநாதன் அவர்கள தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். தமிழர் விடுதலைக்கூட்டணி உருவாகி விட்டிருந்த காலமது. விஸ்வநாதன் என் தந்தையின் தங்கையின் கணவர். என் சொந்த மாமா. இப்போது நாடுகடந்த தமிழ் ஈழத்தின் பிரதமராய் இருக்கும், உருத்திரகுமாரின் தந்தை. அப்போது பிரதமராய் இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். அந்தப்பயணத்தில் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்த அவரது நெருங்கிய நண்பரான, அல்பிறட் துரையப்பா அவர்களின் சமாதிக்கு, அஞ்சலி செலுத்த விரும்பினார். அவரது சமாதி மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட முற்றவெளியில் அமைந்திருந்தது. ஆனால் பிரதமரின் விருப்பத்தை நிறைவேற்ற மறுத்து யாழ்.மேயர் அஞ்சலி செய்ய அனுமதியளிக்கவில்லை. எனக்கென்னவோ அச்செயல் மிக அநாகரிகமாய்ப்பட்டது. விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால், ஒரு தனி மனிதனுக்கு அஞ்சலி செலுத்த விடாமல், தடுத்த அச்செயலைக் கண்டித்து மேயருக்கு, இது தவறு! தமிழர் நாகரிகத்திற்கு ஒவ்வாத விடயம்! என்று சொல்லி, ஓர் கடிதம் எழுதினேன்.

இந்த எனது இயல்பு பற்றியே அண்மைக்காலமாக, முதலமைச்சர் பற்றிய சில விமர்சனங்களை முன்வைத்து வருகிறேன். திரு. விக்னேஸ்வரன் அவர்களை முதலமைச்சராக்க, பாடுபட்டவர்களில் நானும் ஒருவன் என்பது, உங்களுக்கே தெரிந்திருக்கும். இன்றைய இக் ... ருக்கு எமது பிரச்சினை ... ரது சட்டஅறிவு, துண ... பவை துணை புரிய ... பலரோடு சேர்ந்து ... பட்டேன். ஆனால் என் ...

இன்று பலரும் மு ... பகை இருப்பதாகவும் ... எதிர்த்து வருவதாக ... கட்டி வருகின்றனர் ... என்னில் முதலமை ... யும், அன்பும் வை ... கம்பன் மலருக்காக ... பின்வருமாறு குறிப்பி ...

*"கொழும்புக் கம ... இணைத்து இறை ... நம்பிக்கை. பொ ... துடனோ, கழகத்து ... அதன் நிர்வாக அ ... என்பது எப்பவோ ... சங்க, நிர்வாகங் ... எடுத்த முடிவு அது. ... படுத்துவதில் நா ... இருந்தேன். கார ... நலத்திற்குப் பொது ... நிறுவனங்கள் பல ... என்னால் முடிந்த ... நிறுவனத்திற்கோ ... வராகவோ நிர்வா ... வேண்டிய அத்திய ... எனக்குத் தெரியவி ... நின்று சேவை செ ...*

*அப்படி ஒரு ... அந்தக் காலகட்ட ... தெரியாத ஜெயராஜ ... புக் கம்பன்கழக ... பதவியேற்க வே ... ஏனோ சற்றுத் ... தெரிந்த அளவில் ... குரலில் தொனித் ... ததைச் சாதிக்கக் ... இருந்ததை என் ... யாளம் கண்டு வி ... நனவாக்கும் ... இருந்ததைக் கண ... ஆணவம், மமன ... உறைவிடமாக ... அமையாது என்ற ... ன்றி விட்டது. கெ ... ஆனால் நிர்வாக ... வாங்காது விட்டா ... ஏற்றுக்கொள்வத ... ஜெயராஜ். அதே ... பணிகளில் என் ... செல்லக் குழந் ... னும், சிறப்புடனும் ...*

நீதியரசரின் இக் ... கும், அவருக்கும் ... நெருக்கத்தையும் ... வைத்திருந்த நம் ... விளக்கம் செய்யும் ... தந்திருக்கிறேன். ... பட்ட ரீதியில் எழுதி ... ருமாறு எழுதினார்.

*"ஜெயராஜின் ...*

# த கம்பவாரிதியின் அன்புமடல்

பகுதி 01

இன்றைய இக்கட்டான சூழலில், பிறநாட்டா எமது பிரச்சினையை விளங்க வைக்க, அவ ட்டஅறிவு, துணிவு, ஆங்கிலப்புலமை என் துணை புரியும் என்ற நம்பிக்கையிலேயே, ராடு சேர்ந்து நானும் இம் முயற்சியில் ஈடு ன். ஆனால் என் எண்ணம்நிறைவேறவில்லை. ன்று பலரும் முதலமைச்சரோடு எனக்கு ஏதோ இருப்பதாகவும், அதனாலேயே அவரை நான் ந்து வருவதாகவும், தம் இஷ்டத்திற்குக் கதை வருகின்றனர். முதலமைச்சரில் நானும், ரில் முதலமைச்சரும், அளவற்ற நம்பிக்கை அன்பும் வைத்திருந்தோம். எங்களது ஒரு ன் மலருக்காக எழுதிய கட்டுரையில், நீதியரசர் ருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

*கொழும்புக் கம்பன் கழகத்துடன் என்னை ணத்தது இறை திருவருளே என்பது என் பிக்கை. பொதுவாக எந்த ஒரு சங்கத் னா, கழகத்துடனோ, நிறுவனத்துடனோ ர் நிர்வாக அமைப்பில் பங்குகொள்வதில்லை து எப்பவோ நான் எடுத்த முடிவு. பல , நிர்வாகங்களில் பங்குபற்றிய பின்னர் த முடிவு அது. அந்தக் கொள்கையை அமுல் துவதில் நான் மிகவும் பிடிவாதமாக ந்தேன். காரணம் நிர்வாகிகளின் சுய திற்குப் பொதுநலம் என்ற முலாம் பூசியே வனங்கள் பல நிர்வகிக்கப்பட்டு வந்தன. னால் முடிந்தவற்றை ஒரு சங்கத்திற்கோ, வனத்திற்கோ செய்ய அதில் குழு அங்கத்த கவோ நிர்வாகியாகவோ நான் செயற்பட ன்டிய அத்தியாவசியம் எதுவும் இருப்பதாக குத் தெரியவில்லை. அதனால் ஒதுங்கி து சேவை செய்யவே ஆசைப்பட்டேன்.*

*ப்படி ஒரு கொள்கையுடன் இருந்தும் க் காலகட்டத்தில் எனக்கு முன்பின் பாத ஜெயராஜ் அவர்கள் தங்கள் கொழும் கம்பன்கழகத்தின் பெருந்த லைவராகப் யேற்க வேண்டும் என்று கேட்ட போது ா சற்றுத் தடுமாறினேன். எனக்குத் ந்த அளவில் அதற்கான காரணம் அவர் ல் தொனித்த ஒரு நம்பிக்கை. நினைத் ச் சாதிக்கக் கூடிய இறைபலம் அவரிடம் ந்ததை என் உள்மனம் எப்படியோ அடை ம் கண்டு விட்டது. இலட்சியக் கனவுகளை வாக்கும் வைராககியம் ஜெயராஜ்க்கு ந்ததைக் கண்டு கொண் டேன். அகந்தை, ாவம், மமதை, சுயநலம் ஆகியவற்றின் றவிடமாக கொழும்புக் கம்பன் கழகம் மயாது என்ற நம்பிக்கை மனதில் வேரூ விட்டது. கொள்கையைக் கைவிட்டேன். ால் நிர்வாகப் பணிகளில் என்னை உள் காது விட்டால் பெருந்தலைவர் பதவியை க்கொள்வதாக கூறினேன். சரி என்றார் ராஜ். அதேபோல் இன்றுவரை நிர்வாகப் களில் என்னை அமிழ்த்தாமலே ஒரு லக் குழந்தையாகவே என்னைச் சீரு சிறப்புடனும் நடத்தி வந்துள்ளார்கள்."*

நியரசரின் இக்கட்டுரைக் கருத்துக்கள், எனக் அவருக்கும் இடையில் இருந்த உறவின் க்கத்தையும், நாம் ஒருவர் மேல் ஒருவர் ந்திருந்த நம்பிக்கையையும், உங்களுக்கு கம் செய்யும் என்பதற்காகவே, அதனை இங்கு நக்கிறேன். அதுமட்டுமல்ல, எனக்கு தனிப் தியில் எழுதிய கடிதம் ஒன்றில், அவர் பின்வ ு எழுதினார்.

*ஜெயராஜின் அன்பின் ஆற்றலே, அவர வர்களை அடிபணிய வைக்கிறது. அதில் ஒன்றும் விந்தை இல்லை."*

இவ்வாறு கிட்டத்தட்ட பதினைந்தாண்டுகளுக்கு மேலாக, எங்கள் உறவும், அன்பும் தொடர்ந்தது உண்மை. பின்னர் 2011 கம்பன் விழாவில், அவரது கோரிக்கை ஒன்றை நிறைவேற்ற முடியாமல் போனதில், சிறு மனஸ்தாபம் ஏற்பட்டு அவர் கழகப் பதவியிலிருந்து விலகினார். அப்போதும் அவருக்கும், எங்களுக்கும் இடையிலான அன்பில், எக்குறைவும் ஏற்படவில்லை. பதவி விலகியபோது அவர் எழுதிய கடிதத்தின் சில வரிகளைக் கீழே தருகிறேன்.

*"எந்த ஒரு நிறுவனத்திலோ சங்கத்திலோ பதவி வகிக்க விரும்பாத என்னைத் தெய்வம் கொழும்புக் கம்பன்கழகத்தோடு உங்கள் மூலம் இணைத்தது. இவ்வாறு இணைத்து இவ் வருடத்துடன் பதினாறு ஆண்டுகள் சென்று விட்டன என்று நம்புகின்றேன். இதுவரை காலமும் எந்த ஒரு மன உளைச்சலோ, சிக்கலோ, பிணக்குகளோ இல்லாமல் எங்கள் உறவு நீடித்ததையிட்டு மிக்க மகிழ்வுடையவனாக இருக்கின்றேன்.*

*நீங்கள் அடங்கிய கம்பன் குடும்ப அன்பர்கள் யாவரும் எனக்குத் தமது அன்பையும் மதிப்பையும் இதுவரை காலமும் மனமகிழ்வுடன் அள்ளிச் சொரிந்ததையிட்டுப் பூரித்துப் போயிருக்கின்றேன். கம்பன்கழகம் நீடூழி காலம வளர்ந்து வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன். எனினும் எனது தனிப்பட்ட காரணங்களுக்காக என்னால் தொடர்ந்து கொழும்புக் கம்பன் கழகத்துப் பெருந்தலைவர் பதவியை வகிக்க முடியாதிருப்பதையிட்டு மனம் வருந்துகிறேன். நான் கொழும்புக் கம்பன் கழகத்துப் பெருந்தலைவர் பதவியில் இருந்து விலகுவதை இத்தால் உங்களுக்கு அறிவிக்கின்றேன்."*

இதுவே அவர் எங்களுக்கு எழுதிய வரிகள். அவர் பதவி விலகிய அடுத்த ஆண்டு விழாவில், அவருக்கு, 'கம்பன்புகழ் விருது' வழங்க விரும்பி வேண்டினோம். 'அது ஒருவருக்கொருவர் நம்மை நாமே பாராட்டுவதாய் அமைந்துவிடும்' என்று கூறி, அவர் அதை ஏற்க மறுத்தார். பின்னர் அவரையே அழைத்து அவ்வாண்டு விழாவை தொடக்கி வைக்கச் செய்தோம். நாம் அமைத்த ஐஸ்வர்ய லக்ஷ்மி ஆலயத்தின், அத்திபாரக் கல்லையும் அவரைக்கொண்டே நாட்டினோம்.




பின்னர் முதலமைச்சர் பதவியை அவர் ஏற்கவேண்டுமென்று, சர்ச்சைகள் ஆரம்பித்த போது, அதனை மறுக்காதீர்கள் என்று, தொலைபேசியில் அவருடன் வாதிட்டேன். வீரகேசரிப் பத்திரிகையில் தம் பெயரிட்டுக் கருத்துத் தெரிவிக்க, பலரும் தயங்கிய நிலையில்,நீதியரசரே அப்பதவிக்குப் பொருத்தமானவர் என, பகிரங்கமாய் அறிக்கை விடுத்தேன். அது தவிர, தினக்குரல் பத்திரிகையில், நீதியரசரை விளித்து, அவர் பதவியேற்க முன்வரவேண்டியதன் அவசியத்தைச் சொல்லி, 'செயற்தக்க செய்யாமையாலும் கெடும்' என்ற தலைப்பில், புனைபெயரில் விரிவாய் ஒரு கடிதம் வரைந்தேன. அதுமட்டுமல்லாமல் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில், நீதியரசரைப் பதவியேற்கக் கட்டாயப் படுத்தும் நோக்கில், தற்போதைய அமைச்சர் மனோ கணேசன் அவர்களால், ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில், துணிந்து பல விடயங்களைக் கூறினேன். இப்படியாய் அவர் முதலமைச்சராக வேண்டுமென, நான் நடத்திய போராட்டங்கள்பலப்பல. இன்று அவரைப் பயன்படுத்த நினைவோர் எவரும், அன்று அவரை ஆதரிக்க முன்வரவில்லை.

பின்னர் அவர் தேர்தலில் நிற்க முன்வந்ததும், தொடர்ந்து அவருக்குக் கிடைத்த பெருவெற்றியும், யாவரும் அறிந்தவையே. அவர் வெற்றிபெற்ற கையோடு, நான் அவருக்கு எழுதிய கடிதமொன்றையும்,இவ்விடத்தில் தரவிரும்புகிறேன்.

*23.09.2013*

*பெருமை மிக்க ஐயா அவர்கட்கு,*

*வணக்கம்.*

*நலம் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். முதலில் பெற்ற பெரு வெற்றிக்கு எமது வாழ்த்துக்கள். தங்கள் வெற்றிக்காய் எம்மைப் பலரும் வாழ்த்துகின்றனர். அமைதியாய் இருக்க நினைத்த உங்கள் தலைமேல், இனத்தலைமை என்ற பார மிகுந்த மகுடம் சூட்டப்பட்டுள்ளது. இனி, தங்களின் ஒவ்வொரு செயற்பாடும் இனத்தின் செயற்பாடாய்க் கணிக்கப்படும். மிகப் பாரிய பொறுப்பு! தாங்கும் சக்தியை இறை வன் அருள்வான். அதற்காய் அன்றாடம் இறைவனைப் பிரார்த்திப்போம். தேர்தல் பிரசாரத்தில் புலிகளை வழி மொழிவதாய் ஓர் பிரமை தோன்றிற்று. முன்னவர் பாதைகள், குறைகளால்தான் மூடப்பட்டன. எனவே, இனி வரும் அரசியலில் தங்கள் வழி தனி வழியாகவே இருக்கட்டும். பொதுப்பட விடப்படும் சவால்கள் இனங்களுக்கிடையி லான பகையை வளர்க்கும். அது நலதைதல்ல. பேரின அரசியலாளர்களுடன் மோதி வெற்றி கொள்ளும் அதேவேளை, பேரின மக்களுடன் நட்பையும் வளர்த்தெடுக்க வேண்டும. இது என் விருப்பு. அவர்தம் மனங்களையும் வென்றெடுக்க சில வழிகள் உள. ஒன்றைச் சொல்கிறேன். யதீந்திரா என்பவர் தினக்குரல் கட்டுரையில் குறிப்பிட்டபடி, வெற்றி பெற்ற அனைவரும் நல்லை ஆதீனம், யாழ்.பிசப், ஓர் இஸ்லாமிய மதத்தலைவர் ஆகியோரிடம் ஆசி பெறுவ தோடு, முக்கியமாக பௌத்த பீடாதிபதிகளிடம் சென்று ஆசி பெறுங்கள். அவர்கட்கு உங்கள கொள்கையை விளக்கம் செய்யுங்கள. அது போலவே சிங்கள அறிஞர் குழாத்தையும், ஊடகவியலாளர்களையும் ஒன்று கூட்டி அவர்களுக்கும் மேற்கருத்தை உரையுங்கள். இன ஒற்றுமைக்கான முயற்சியில் இது நல்ல பயன் தரும் என எண்ணுகிறேன். மனத்தில் உதித்தது - எழுதியிருக்கிறேன். தங்களாலேனும் நம் இனம் உய்வடையட்டும். தயை கூர்நது கட்சித் தலைவராய் அன்றி இனத்தலைவராய் செயற்பட முயலுங்கள்.*

*நன்றி.*

*வணக்கம்.*

*"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"*

*அன்பன்*

*இ. ஜெயராஜ்*

*(கம்பன் கழகம்)*

முதலமைச்சருடனான என் எதிர்பார்ப்புக்கள், இக்கடிதத்தில் பதிவாகியுள்ளன. முதலமைச்சர் நல்லவர், துணிவானவர், தர்மத்திற்குக் கட்டுப்படுபவர், தெய்வத்திற்குப் பயந்து நடப்பவர் என்பதிலெல்லாம், எனக்குப் பெரிய நம்பிக்கை இருந்தது. நல்லவர்கள் சூழ வாழ்ந்த போது, அவர் அப்படித்தான் இருந்தார். பின்னர் அரசியல் அவரைத் தடுமாற வைத்து வட்டது. பதவியேற்றதும்அவரை, அவருடைய முன்னைய நண்பர்களால் அணுக முடியவில்லை. கருத்துரைக்க முடியவில்லை. திட்டமிட்டு சிலரால் அவர் பிரிக்கப்பட்டார். அதிலிருந்துதான் அவரது வீழ்ச்சி ஆரம்பமாயிற்று.




# புத்திசாலிகள்!

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் வாழும் மக்கள், இந்த உலகத்திலேயே தாங்கள்தான் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், அவர்கள் அனைவரும் சரியான முட்டாள்கள் என்பது அவர்களுக்கு தெரியாது.

ஒருநாள்-

அவர்கள் மரத்தால் ஒரு பெரிய வீடு கட்டத் தீர்மானித்தனர்.

அதற்கான நல்ல மரத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் காட்டுக்குப் போக முடிவு செய்தனர்.

அப்போது, அவர்களில் மிகவும் அதிபுத்திசாலியான ஒருவன் சொன்னான்.

"நான் குதிரை வண்டியில் ஏறி முதலில் போகிறேன். நீங்களெல்லாம் பின்னால் வாருங்கள்!" என்றான்.

எல்லாரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதிபுத்திசாலி குதிரை வண்டியில் ஏறி காட்டுக்குப் பாய்ந்து சென்றான்.

ஆனால், வழியில் அவன் குதிரை வண்டி ஒரு கல்லின் மீது ஏறியதால் கவிழ்ந்தது.

அவன் கையிலிருந்த கோடாரி தூரத்தில் சென்று விழுந்தது.

அவனும் ஆழமான ஒரு குழியில் விழுந்து விட்டான்.

குதிரை வண்டிக்குப் பின்னால் வந்த மற்ற அறிவாளிகள், அதிபுத்திசாலியின் கோடாரி வழியில் கிடப்பதைப் பார்த்தனர்.



அவர்களில் மிகச் சிறந்த அறிவாளி அவன்தான் என்பதால், அவன் கோடாரியை விட்டுச் சென்றதற்கு ஏதும் முக்கியமான காரணம் இருக்கும் என்று மற்றவர்கள் நினைத்தனர்.

அதனால், எல்லாரும் மரம் வெட்டுவதற்காகத் தங்கள் கையில் எடுத்து வந்திருந்த கோடாரியை அப்படியே போட்டு விட்டுத் தொடர்ந்து சென்றனர்.

காட்டுக்குச் சென்று வெட்டுவதற்கு ஏற்ற மரத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

ஆனால், யார் கையிலும் கோடாரி இல்லையே, பிறகு எப்படி மரம் வெட்டுவது? எல்லாரும் ஒன்றாக அமர்ந்து இதற்கு என்ன வழியென்று சிந்தித்தனர்.

அங்கிருந்தவர்களில் முக்கியமான அறிவாளி சொன்னான்.

"நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். மரத்தை வெட்ட முடியவில்லை என்றாலும் நாம் மரத்தின் கிளையை ஒடிப்போம்.

இப்போது இருப்பதில் நான்தானே பெரிய அறிவாளி. அதனால் நான் முதலில் மரத்தில் ஏறி உறுதியான ஒரு கிளையைப் பிடித்துத் தொங்குகிறேன். அப்போது உங்களில் ஒருவர் என் காலைப் பிடித்துத் தொங்க வேண்டும். அவருடைய காலைப் பிடித்து மற்றொருவர் தொங்க வேண்டும்.

அப்படி நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கும் போது நம் பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்!" என்றான். அது மிகவும் நல்ல கருத்துதான் என்று எல்லாரும் ஏற்றுக் கொண்டனர்.

அவ்வாறு அந்த அறிவாளி பக்கத்திலிருந்த மரத்தில் ஏறி ஒரு உறுதியான கிளையைப் பிடித்து தொங்கினான்.

அவன் காலை மற்றொருவன் பிடித்துத் தொங்கினான். அவன் காலை இன்னொருவன் பிடித்துத் தொங்கினான்.

இப்படியே எல்லாரும் ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கினர். மிகப் பெரிய பாரத்தால் கிளை, எப்போது வேண்டுமானாலும் முறிந்து விடக்கூடிய நிலைக்கு வந்தது. அப்போது அறிவாளி சொன்னான்.

"நண்பர்களே, கிளை இப்போது ஒடிந்து விடும். அதற்கு முன்பு நான் இந்தக் கிளையை இன்னும் கொஞ்சம் பலமாகப் பற்றிக் கொள்கிறேன்!" என்றான்.

கிளையை மேலும் வலுவாகப் பற்றிக் கொள்வதற்காக அவன் கையைச் சற்று அசைத்ததும் அவன் பிடி நழுவியது. எல்லாரும் கீழே விழுந்தனர். ஆனால், அந்த மரக் கிளையோ, முறியாமல் அப்படியே இருந்தது. இனி என்ன செய்வது என்று எல்லாரும் ஆலோசித்தனர். அந்தக் கூட்டத்திலிருந்த வேறொரு அறிவாளி இப்படிச் சொன்னான்.

(தொடரும்)




- 1492 - சிசிலியிலருந்து 100,000 யூதர்கள் வெளியேற்றப்பட்டனர்.
- 1599 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி இந்தியாவுக்கான தனது கப்பல் பயணத்தை ஆரம்பித்தது.
- 1687 - நன்னம்பிக்கை முனையை அடைவதற்காக ஹியூகெனாட் எனப்படும் புரட்டஸ்தாந்தர்களின் முதற் தொகுதியினர் பிரான்சை விட்டுப் புறப்பட்டனர்.
- 1695-இங்கிலாந்தில் பலகணி வரி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து பல அங்காடி உரிமையாளர்கள் தமது அங்காடிகளின் பலகணிகளை செங்கல் கொண்டு மூட ஆரம்பித்தார்கள்.
- 1857 -விக்டோரியா மகாராணி கனடாவின் தலைநகராக ஒட்டாவாவைத் தேர்ந்தெடுத்தார்.
- 1862- அமெரிக்கப் புரட்சிப் போர்: மேற்கு வேர்ஜீனியாவை கூட்டணியில் இணைப்பதற்கான சட்டமூலத்தில் ஆபிரகாம் லிங்கன் கையெழுத திட்டதில் வேர்ஜீனியா இரண்டாகப் பிரிந்தது.
- 1879 - வெள்ளொளிர்வு விளக்கு முதற்தடவையாக தோமஸ் எடிசனால் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1881 - இலங்கை முழுவதும் கடுமையான நில நடுக்கம் உணரப்பட்டது.
- 1909 - மான்ஹட்டன் பாலம் திறக்கப்பட்டது.
- 1923 - லண்டனின் பிக் பென் மணிக்கூண்டின் மணியொலி மணிக்கொரு தடவை பிபிசியில் ஒலி பரப்பு செய்ய ஆரம்பிக்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஹங்கேரி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1946 - அமெரிக்க அதிபர் ஹரி ட்ரூமன் இரண்டாம் உலகப் போரில் ஐக்கிய அமெரிக்காவின் பங்கு முடிவுக்கு வந்ததாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.
- 1847 - ஆறுமுக நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் ஆரம்பித்தார்.
- 1963 - மத்திய ஆப்பிரிக்கக் கூட்டமைப்பு சாம்பியா, மலாவி, ரொடீசியா என மூன்று நாடுகளாகப் பிளவுற்றது.
- 1981 - கானாவில் இடம்பெற்ற இராணிவப் புரட்சியில் அதிபர் ஹில்லா லிமான் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1984 - ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானார்.
- 1987 - ரொபேர்ட் முகாபே சிம்பாப்வேயின் ஜனாதிபதியாகத் தெர்ர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1991 - சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியத்தின் அனைத்து நிறுவனங்கள், மற்றும் சோவியத் ஒன்றியம் இந்நாளிலிருந்து அதிகாரபூர்வமாக கலைக்கப்பட்டன.
- 1994 - பீனிக்ஸ் தீவுகள், மற்றும் லைன் தீவுகளில் நேரமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து, கிரிபட்டியில் இந்நாள் முற்றாக விலக்கப்பட்டது.
- 1999 - போரிஸ் யெல்ட்சின் ரஷ்யாவின் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார்.
- 1999 - 1977 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய, ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் அதிகாரத்தை பனாமாவிடம் ஒப்படைத்தது.
- 1999 - 155 பயணிகளுடன் இந்திய விமானம் ஒன்றைக் கடத்திய ஐந்து கடத்தல்காரர்கள் தாம் விடுவிக்கக் கோரிய இரண்டு இஸ்லாமிய மதகுருமார்கள் விடுவிக்கப்பட்டதை அடுத்து விமானத்தைக் கைவிட்டு வெளியேறினர்.
- 2004 - உலகின் மிக உயரமான வானளாவியான தாய்வானின் 509 மீட்டர் உயர தாய்ப்பே 101 அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
- 2006 - ஐக்கிய அமெரிக்காவிடம் இரண்டாம் உலகப் போரின் போது பெற்ற கடன்களை ஐக்கிய இராச்சியம் முழுவதுமாக கட்டி முடித்தது.

### பிறப்புகள்

- 1491 - ஜாக் கார்ட்டியே, பிரெஞ்சு நாடுகாண் பயணி (இ. 1557)
- 1880 - ஜோர்ஜ் மார்ஷல், நோபல் விருது பெற்ற அமெரிக்கர் (இ. 1959)
- 1929 - ச. வே. சுப்பிரமணியன், தமிழறிஞர்
- 1937 - அவ்ராம் ஹேர்ஷ்கோ, நோபல் பரிசு பெற்ற ஸ்ரேலியர்
- 1955 - தாவூத் இப்ராகிம், இந்தியாவில் தேடப்படும் தீவிரவாதி

### இறப்புகள்

- 1905 -அலெக்சாண்டர் பப்போவ், ரஷ்ய இயற்பியலாளர் (பி. 1859)
- 2001 - தொ. மு. சிதம்பர ரகுநாதன், தமிழக எழுத்தாளர் (பி. 1923)

# 2015 ஆம் ஆண்டில் இதுவரை 110 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர்

2015ஆம் ஆண்டில் இதுவரை 110 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக, எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்புத் தெரிவித்துள்ளது. அவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கையிலேயே, இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கொல்லப்பட்டுள்ள 110 பேரில் 49 பேர், அவர்களது பணிக்காக அல்லது வேண்டுமென்றே இலக்கு வைக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 18 பேர், அவர்களது பணியின் போது கொல்லப்பட்டுள்ளனர். மீதி 43 பேர், தெளிவற்ற காரணங்களால் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மேலதிகமாக, மக்கள் ஊடகவியலாளர்கள் 27 பேரும், ஊடகப் பணியாளர்கள் 7 பேரும், 2015 ஆம் ஆண்டில் கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்படி, 2005ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 110 ஊடகவியலாளர்கள், அவர்களது பணியுடன் தொடர்புபட்ட காரணங்களுக்காகக் கொல்லப்பட்டுள்ளனர் என அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

இதில் குறிப்பிடத்தக்கதாக, கடந்தாண்டு கொல்லப்பட்டவர்களில் மூன்றிலிரண்டு பேர், போர் வலயங்களில் சிக்கி மரணமடைந்திருந்தனர். ஆனால், இவ்வாண்டில் கொல்லப்பட்ட மூன்றிலிரண்டு ஊடகவியலாளர்கள், சமாதானம் நிலவுகின்ற நாடுகள் எனத் தெரிவிக்கப்படும் நாடுகளிலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்திய நாடுகளாக, ஈராக், சிரியா ஆகியன காணப்படுகின்றன. இரு நாடுகளிலும் முறையே 11, 10 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தியாவில் 9, பிரான்ஸில் 8, யேமனில் 8, மெக்சிக்கோவில் 8, தென் சூடானில் 7, பிலிப்பைன்ஸில் 7, ஹொன்டூராஸில் 7 என, இந்த எண்ணிக்கை நீள்கிறது.

இந்தியாவில் கொல்லப்பட்ட 9 பேரில் 5 பேர், ஊடகவியல் பணிகளுக்காகக் கொல்லப்பட்டதோடு, 4 பேர், வெளிப்படுத்தப்படாத காரணங்களுக்காகக் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

இலங்கையில் ஓர் ஊடகவியலாளரே உயிரிழந்துள்ளார். அவர் தனது ஊடகப் பயணத்தின்போது யானையால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஊடகவியலாளர்கள் தவிர பங்களாதேஷில் கொல்லப்பட்ட பதிவர்கள் நால்வரை ஞாபகப்படுத்தும் அவ்வறிக்கை, கொல்லப்பட்டுள்ளவர்கள் தவிர, 54 ஊடகவியலாளர்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள் எனவும், 153 ஊடகவியலாளர்கள், தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை

## அரசு மறுப்பு

(கொழும்பு)

**அரசியலமைப்புத் திருத்தம், ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ளும் வகையிலேயே மேற்கொள்ளப்படும் என்றும், சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.**



ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள சகல தரப்பினருக்கும் இடையில் உடன்பாடு காணப்படுகிறது. சமஷ்டி என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை.

அதேவேளை, 1972 அரசியலமைப்பு போன்று இந்த புதிய அரசியலமைப்பு மக்கள் மீது திணிக்கப்படமாட்டாது.

அரசியலமைப்பு மாற்றம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பொதுசன வாக்கெடுப்பின் மூலமே இது நடைமுறைப்படுத்தப்படும்.

புதிய அரசியலமைப்பின் ஊடாக மாகாணசபை முறையை ஒழிக்கும் திட்டம் கிடையாது.

அனைத்து கட்சிகள், சிறுபான்மை கட்சிகள், சிவில் அமைப்புகள் பொதுமக்கள் அடங்கலாக சகல தரப்பினரதும் கருத்துக்களை பெற்றே புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆப்கானிஸ்தானின் அதிர்வே கண்டியில் உணரப்பட்டது

கண்டி, மெததும்பர பகுதியில் சிறியதொரு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது. கடந்த திங்கட்கிழமை இரவு 10.30இற்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

பல்லேகல, ஹக்மான்ன மற்றும் மஹாகனதரவ பகுதிகளில் அமைந்துள்ள நிலநடுக்க கண்காணிப்பு நிலையங்களில், இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் பதிவாகியுள்ளன. இவை தொடர்பான துல்லிய தகவல்களை, கண்காணிப்பு நிலையங்கள் ஆராய்ந்து வருகின்றன.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் இந்துகுஷ் மலைப்பாங்கான பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட பூமியதிர்வின் பெறுபேறாகவே, மெததும்பரையில் பூமியதிர்வு உணரப்பட்டதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் திறவுகோல் விடாமுயற்சி

சரியான நேரத்தில் சரியான முறையில் சரியான அளவில் செய்யப்பட்ட எந்தவொரு முயற்சியும் தோற்றதாக சரித்திரம் இல்லை.

தோல்வியைவிட தோல்வி பற்றிய பயம்தான் அதிகம் நம்மை ஆட்டிப்படைக்கிறது. ஒரு காரியம் நடைபெற வேண்டி ஒருவரை சந்திக்கிறோம். அந்த செயல் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கு குறிக்கோளுடன் கூடிய பேச்சு, தெளிவான சிந்தனை, கவனமுடன் கேட்டல், உபயோகமான செய்திகளைத் தெரிந்து வைத்திருத்தல், சரியான வழிமுறைகளைப் பின்பற்றுதல், சூழ்நிலையை அனுசரித்துப்போதல் ஆகிய 6 சூத்திரங்களைக் கடைப்பிடித்தால் அவை நமது வெற்றிக்கு நிச்சயம் கைகொடுக்கும்.

வேலையால் கரைந்த மனிதர்களைவிட கவலையால் சரிந்த மனிதர்களே இங்கு அதிகம். கவலை என்பது நமக்கு நாமே போட்டுக் கொள்ளும் விலங்கு. நிதானமாக செயற்படும் ஒருவனை எந்த சூழ்நிலையும் முட்டாளாக்க முடியாது.

தோமஸ் அல்வா எடிசன் ஒரு பெரிய விஞ்ஞானி. அவரது மாணவப் பருவத்தில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் அவருடைய கோணலான தலையைப்பார்த்து இவனுடைய தலை அமைப்பு மோசமாக இருக்கிறது. இவன் என்ன படித்தாலும் அது இவன் மூளையில் ஏறாது என்று கூறினார். இதைக் கேட்ட எடிசனின் தாயார் 'என் மகனை எப்படியும் பெரியவனாக்குவேன்' என்று அவருக்குச் சவால் விட்டதுடன் அவனுக்கு சிரமப்பட்டு பாடங்களை கற்றுக்கொடுத்தார். அன்னையின் விடாமுயற்சியாலும் தன்னுடைய உழைப்பாலும் எடிசன் மாமேதையானார். அப்பொழுது அவர், 'மனிதன் கடமைப்பட்டிருப்பது மூளைக்கு அல்ல, முயற்சிக்கே. கடவுள் வரங்களை விற்பனை செய்கிறார். முயற்சியே அவற்றின் விலை' என்று கூறினார்.

மாவீரன் நெப்போலியன் போர்க்களத்தில் இருந்தாலும் சரி, மற்ற நேரங்களில் தன் அலுவலங்களில் ஏதாவதொன்றில் இருந்தாலும்சரி, தன்னை சந்திக்க வருபவரிடம் கேட்கிற முதல் கேள்வி, 'நீ கொண்டு வந்திருக்கும் செய்திகளில் மோசமான செய்தி ஏதாவது இருந்தால் அதை முதலிலேயே என்னிடம் சொல்லிவிடு' என்பதுதான். 'ஏன் இப்படி கேட்கிறீர்கள்' என்று அவருடைய உதவி தளபதி ஒருநாள் அவரிடம் கேட்டதற்கு நெப்போலியன் இப்படிச் சொன்னான்.

'வாழ்க்கை ஒரு போர்க்களம். அதில் மோசமான எதிரியைத்தான் முதலில் நாம் எதிர்கொள்ள வேண்டும். ஏனென்றால் கெட்ட செய்திகளில்தான் சிந்தித்து செயலாற்ற வேண்டிய விடயங்கள் இருக்கும். நல்ல செய்திகள் வெறுமனே ரசித்து மகிழ்கிற மாதிரி இனிமையானவைகளாக இருப்பதுதான் இயல்பு. அதனால் அந்த நல்ல செய்திகளில் நம் திறமைக்கு சவாலாக எதுவும் இருக்க வாய்ப்பில்லை' என்றார்.

ஒரு அரசனிடம் விலை மதிக்க முடியாத ஒரு பெரிய வைரக்கல் இருந்தது. அதைத் தன் நாட்டின் பெருமைக்குரிய பொருளாக அவன் கருதினான். ஒருநாள் அந்த வைரக்கல்லில் தலைமுடி அளவில் கீறல் ஒன்று விழுந்தது. வைரத்தின் அழகு போயிற்றே என வருந்தினான் மன்னன். தன் நாட்டிலுள்ள நகை விற்பனையாளர்களை வரவழைத்து ஆலோசித்தான். 'இந்த வைரத்தை இனி ஒன்றும் செய்ய முடியாது. அது இன்னும் விரிசல் கொடுக்கும்' என்றனர் வியாபாரிகள்.

'இந்த வைரத்தை அதன் பழைய மதிப்பிற்கு கொண்டு வருபவருக்கு தக்க பரிசு வழங்கப்படும்' என்று அரசன் அறிவித்தான். ஓர் ஏழை பொற்கொல்லன் முன்வந்து 'அரசே! இந்த கீறலை வைத்தே வைரத்தின் மதிப்பை பல மடங்கு உயர்த்த முடியும்' என்றான். வைரக்கல் அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

சில நாட்களுக்கு பிறகு அந்த பொற்கொல்லன் ஒரு சிறிய நகைப் பேழையுடன் திரும்பி வந்தான். அதன் மூடியைத் திறந்தான். அரசன் பிரமித்து போனான். வைரத்தின் மீது அழகான ரோஜா செதுக்கப்பட்டிருந்தது. அவனுக்கு கவலை அளித்த கீறல், ரோஜாவின் காம்பாகி விட்டது. இது ஒரு கதைதான். ஆரம்பத்தில் நமக்கு கஷ்டம் என்று தோன்றுபவை காலப்போக்கில் இன்பமானதாகத் தோன்றும்.

முட்களுக்கு மத்தியில்தான் ரோஜாக்கள் அழகாக மலர்கின்றன. பிரச்சினைகளுக்கு மத்தியில்தான் மனிதனின் வாழ்க்கை பிரகாசிக்கின்றது.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

# மீண்டும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் இலங்கையின் இராணுவக்குறைப்பு விடயம்

## உயர் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் வடக்கில் நிலைகொண்டு தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருப்பது சர்ச்சைக்குரிய பிரச்சினையேயாகும்.



இலங்கையின் வடபகுதியில் தொடர்ந்தும் இயங்கிவரும் அரச படைகளின் உயர் எண்ணிக்கையே அங்கு வாழ்கின்ற தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு குந்தகமாக இருந்துவரும் சர்ச்சைக்குரியதொரு பிரச்சினையாக நீடித்து வருவதாக அப்பகுதி தமிழ் அரசியல் கட்சிகள் உணர்வுபூர்வமான தமது பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தி வருகின்றன.

இதனையே வடமாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கடந்த வாரம் சபையில் குறிப்பாக எடுத்துக் கூறியிருந்தார்.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதத்தின் இறுதிக்கட்ட விவாத நாட்களின்போது தமிழர் தேசியக் கூட்டமைப்புங்கூட இதே பிரச்சினையையே பாராளுமன்றத்திலும் எழுப்பியிருந்தது. புதிய அரசு தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வர வேண்டுமென்பதற்காக எந்தவித எழுத்துமூல ஒப்பந்தங்களும் செய்து கொள்ளப்படாமலேயே இந்த அரசுக்கான ஆதரவினை 'TNA' வழங்கியிருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சபையில் எடுத்துக் கூறியிருந்தார்.

எப்படியும் அரசாங்கம் அதிகாரத்திற்கு வருமுன்னரே அது வடபகுதி மக்களது ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு பலவாக்குறுதிகளையும் ஏற்கனவே அவர்களுக்கு அளித்திருந்தது. வடக்கின் இராணுவ பிரசன்னம் குறைக்கப்படுமென்பதுடன் அவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பொது மக்களது காணிகளும் விடுவிக்கப்படுமென்பதும் அவற்றுள் ஒன்றாகும் என்று கூறிய சரவணபவன், இந்த வாக்குறுதிகளுக்குப் பின்னருங்கூட வலுவானதொரு இராணுவப் பிரசன்னம் அங்கு தொடர்ந்தும் நிலவுவது மட்டுமல்லாது, தனியார் உடமைகள் மீதான அவர்களது ஆக்கிரமிப்பும் தொடர்வதாகவே உள்ளது என்று மேலும் கூறினார்.

### இயல்புநிலை உறுதி செய்யப்படுதல்

முன்னைய ஆட்சியாளர்களது கொள்கைகளையே புதிய அரசாங்கம் பின்பற்றக்கூடாதென்பதுடன் வடக்கில் இயல்பு நிலை திரும்புவது உறுதி செய்யப்படவும் வேண்டுமென்பதே 'TNA' பாராளுமன்ற உறுப்பினரது கோரிக்கையாயிருந்தது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையாலும் செனட் சபையாலும் கடந்த வாரம் நிறைவேற்றப்படவிருந்த அமெரிக்க செலவின மசோதாவுங்கூட இலங்கைக்கான அமெரிக்க இராணுவ உதவித் தொகை US $ 4,000,000 டொலர்களை கடந்துவிடக்கூடாதென்பதுடன் இலங்கை ஆயுதப்படைகளை இடமாற்றி ஈடுபடுத்துதல், மீளமைப்பு செய்தல், ஆட்குறைப்பு செய்தல் போன்ற வேலைத் திட்டங்களுக்கே அது பயன்பட வேண்டுமென்பதிலும் குறிப்பான அவதானம் செலுத்தியுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுச் சச்சரவுகளுக்கான அடிப்படைக் காரணங்களை சவாலுக்குட்படுத்தும் விதத்தில் அறைகூவல் விடுத்து அவற்றுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள இலங்கை வழங்கும் உத்தரவாதத்திலேயே அதற்கான உதவி தங்கியிருப்பதாக இராஜாங்கச் செயலர் அதனை உறுதிப்படுத்தவும் வேண்டுமெனவும் அம்மசோதா சுட்டிக்காட்டுகின்றது.

நூற்றுக்காணக்கான ஏக்கர் வடபுல நிலங்களை அரசு ஏற்கனவே விடுவித்திருந்தபோதிலும் 'TNA' யின் தரவுப்படி பலாலியிலும் வலிகாமத்திலுமுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான பல காணிகள் இன்னும் விடுவிக்கப்படாமலேயே உள்ளன.

வடக்கிலுள்ள காணிகளுக்கு முறையான உரித்தாளர்களாயிருக்கக்கூடிய சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த உரிமையாளர்கள் தமது உடமைகளை கோருவதை 'TNA'எப்போதுமே எதிர்த்ததில்லை என்று கூறிய அதன் உறுப்பினரான மாவை சேனாதிராஜா, எப்படியும் முன்னைய அரசாங்கம் வடக்கின் சில பிரதேசங்களில் தமிழர்களுக்கு சொந்தமான சில காணிகளில் சிங்களக் குடும்பங்கள் சிலவற்றை சட்ட விரோதமாக மீள்குடியேற்றம் செய்துள்ளதாகவும் கூறினார். 'JVP' யுங்கூட இராணுவத்தின் இந்த வடபுல- நில ஆக்கிரமிப்பு பற்றி கடந்தவாரம் பாராளுமன்றத்தில் பிரச்சினை கிளப்பியதுடன் அங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுங்கூட தமது நாளாந்த செயற்பாடுகளை ஒழுங்கான முறையில் கொண்டு நடத்தும் இயல்புநிலையை மீண்டும் பெறுவதற்கு வேண்டிய அடிப்படை வசதிகளும் அற்றவர்களாகவே தொடர்ந்திருப்பதாக கூறியிருந்தது. தற்காலிக கூடாரங்களில் வாழ்பவர்கள் உட்பட சில குடும்பங்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுடன் அவர்களனைவருக்கும் முறையான வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படவும் வேண்டுமென 'JVP' பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்னாயக்காவும் சபையில் கூறியிருந்தார். வடமாகாணத்தில் 2009 மே மாதம் வரையில் 59 முகாம்கள் மூடப்பட்டுவிட்டதாக இந்த வருட நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை கூறிய போதிலும் இந்த வருடத்தில் ஏனைய வேறு முகாம்கள் எதுவும் இதுவரையில் மூடப்படவில்லை. முகாம்களின் எண்ணிக்கை 152 லிருந்து 93 ஆக குறைக்கப்பட்டுவிட்டதாக (2009 - 2014 வருட காலகட்டத்தில்) மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தவின் கூற்றினை குறிப்பிட்டுக் காட்டும் ஊடக அறிக்கைகளும் உண்டு.

**சண்டே லீடர் பத்திரிகையில் “மீண்டும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் இலங்கையின் இராணுவக் குறைப்பு விடயம்” எனும் தலைப்பில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்...**


### அறிக்கைகளை மறுக்கும் இராணுவம்

இராணுவத்தின் 75% டிவிஷன்கள் வடக்கிலேயே நிலைகொண்டுள்ளதாக கூறும் அறிக்கைகளை மறுக்கும் இராணுவம் அவற்றின் உண்மையான எண்ணிக்கையை வெளியிட மறுத்தே வருகிறது.

“உலகின் எந்தவொரு இராணுவமுமே அதன தன் எண்ணிக்கை விபரங்களை வெளிப்படுத்துவது கிடையாது” என்று கூறும் அது, “பல நாடுகளதும் கடற்படை அணிகள், விமானப்படை அணிகள், இராணுவ வியூக அமைப்புகள் போன்றவற்றை அடையாளங்காட்டும் இலக்கங்களையோ விபரங்களையே அவை ஒருபோதுமே வெளிப்படுத்துவதில்லை” எனவும் சுட்டிக்காட்டுகிறது. படையணி மீளமைப்பு- குறைப்பு- பிரித்து ஆங்காங்கே ஈடுபடுத்துவது போன்ற வற்றுடன் தனியார் காணிகளை (போரின்போது இராணுவம் கையேற்றுக்கொண்டவை) விடுவிப்பது போன்ற அனைத்து நடவடிக்கைகளுமே எந்தவொரு இராணுவமும் போர் முடிவினைத் தொடர்ந்து இயல்பாக்வே மேற்கொள்ளும் “தொடர் நடவடிக்கைகளின் பகுதிச் செயற்பாடுகளே” என அது மேலும் குறிப்பிட்டுக் கூறுகிறது.

கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் பலாலியில் விடுவிக்கப்பட்ட 6,258 ஏக்கர் உட்பட 19,159 ஏக்கர் காணிகள் வடக்கில் விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் உறுதிப்படுத்து கிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காங்கேசன் துறைப் பகுதியில் இராணுவத்தினரால் நடத்தப்பட்டுவரும் விடுமுறை ஓய்வுக்கான “தல செவன” ஹொட்டல் விடுதிப் பயன்பாடுகள் இட வசதிகளுக்கேற்ப பொதுமக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் அனுமதிக்கப்படுவதாக இராணுவம் அதுபற்றி விளக்கமும் அளித்துள்ளது. (தொடரும்)

**தமிழில் யோகர்**



# ஈழ ஆதரவாளர்களை திருப்திப்படுத்தும் அரசு

## இராணுவத்தை பழிவாங்குவதாக கம்மன்பில காட்டம்

(கொழும்பு)

**ஈழ ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இராணுவத்தினரைப் பழிவாங்கிக் கொண்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில குற்றம்சாட்டியுள்ளார்.**

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ராணுவ புலனாய்வாளர்களை விடுவிக்குமாறு கோரி நேற்று முன்தினம் கொட்டாவை நகரில் சத்தியாக்கிரகம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினரும், பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் விடுதலைப் புலி பயங்கரவாதிகளை அடக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது. ஆனால் இன்று இராணுவத்தினரைப் பழிவாங்க அரசாங்கம் குறித்த சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஈழ ஆதரவாளர்கள் தங்களுக்கு எதிரான பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி இராணுவத்தினரைப் பழிவாங்க வேண்டுமென்று அரசாங்கத்திடம் விடுத்திருந்த கோரிக்கை இன்று நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறாக பிரிவினைவாதிகளை திருப்திப்படுத்த இராணுவத்தினரை பலி கொடுக்கத் தயாராக இருக்கும் இந்த அரசாங்கம் ஒரு தேசத்துரோக அரசாங்கமாகும். அதனை இப்போது பொதுமக்களும் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளார்கள் என்றும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவி நீக்கப்படும்

### அமைச்சர் கபீர் ஹாஸிம் அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு மாற்றப்படவுள்ளதோடு இதன்போது புதிதாக ஏற்படுத்தப்பட்ட பிரதித் தலைவர் உட்பட பல்வேறுபட்ட பதவிகள் நீக்கப்படுமென கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஸம் தெரிவித்துள்ளார். ஜனவரி முதல் வாரத்தில் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான கபீர் ஹாஸிம் மேலும் தெரிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பாக கட்சியின் தலைவரும், பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில கூடிய நிறைவேற்றுக் குழுக் கூட்டத் தொடரில் தீர்மானிக்கப்பட்டது. இந்த யாப்பு மாற்றத்தில் கட்சியில் புதிதாக ஏற்படுததப்பட்ட பிரதித் தலைவர் உட்பட பல்வேறு பதவிகள் நீக்கப்படவுள்ளதுடன, முக்கிய பதவிகளுக்கு புதியவர்கள நியமிக்கப்படும் சாத்தியமும் உள்ளது. மாவட்டங்கள் தோறும் தேர்தல தொகுதிகள் தோறும் கட்சிக் கிளைகள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்ட கட்சி ஆதரவாளர்களின் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு தீர்வுகள் வழங்கப்படவுள்ளன. அதே வேளை மக்கள் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக கட்சித தலைமையகமான சிறிகொத்தாவில் விசேட பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 5000 பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனங்கள்

எதிர்வரும் ஒரு சில தினங்களில் முதற்கட்டமாக பட்டதாரிகள் 5000 பேருக்கு புதிய நியமனங்கள் வழங்கவுள்ளதாக தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சர் டபிள்யூ. டி.ஜே.செனவிரத்ன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்போதைய அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினை நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் சவாலாக இருந்து வருகின்றது.

இதனை கவனத்திற் கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் எதிர்வரும் சில தினங்களில் முதற்கட்டமாக 5000 பட்டதாரிகளுக்கு புதிய நியமனங்களை வழங்க தீர்மானித்துள்ளது.

ஏனைய பட்டதாரிகளுக்கும் மிக விரைவில் நியமனக் கடிதங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற ஒரு தொகை நிதியையும், அரச ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து பெறப்படுகின்ற ஒரு தொகை நிதியையும் வைத்து அமைக்கப்படுகின்ற பங்களிப்பு ஓய்வூதிய முறையினூடாகவே எதிர்வரும் காலங்களில் ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

100 நாட்கள் வேலைத்திட்டம் என்பது தேசிய கொள்கைகளின் ஒரு செயற்பாடாக மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் நாட்டின் அனைத்து பாகங்களிலும் உள்ள மக்கள் பலவகையான நன்மைகளை பெற்றுக் கொண்டனர்.


நல்லாட்சி அரசாங்கத்தில் மக்களுக்கும் நாட்டுக்கும் தேவையான சகல அபிவிருத்தி திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வகையில் வீதி, மின்சாரம், சுகாதாரம், கல்வி என பல துறைகளை குறிப்பிட முடியுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை நேற்று அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் மனித வளங்களாக பயன்படுத்தும் (Man Power) ஊழியர்களின் எதிர்காலம் குறித்தும் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 590

கோபிகா உதயகுமார்



கரோலின் கெனி




டினு டினோ




ஆனந்தராசா கிருஷாந்




நிஷா நிஷாந்தன்




பிரபா பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

## 86 ஸ்டூடியோ 1975 இல் மூடப்பட்டது

...வாசனுக்குப் பெரியார் காபி கொடுப்பார். அதைக் குடித்துவிட்டு வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்புவார்.

**நட்பு ஏற்பட்டது எப்படி?**

வாசனுடன் அறிமுகம் ஏற்பட்டது பற்றி பெரியார் ஒரு கட்டுரையில் கூறியிருப்பதாவது:-

அந்தக் காலத்தில் கேட்லாக் வியாபாரம்னு ஒண்ணு உண்டு. அதாவது எல்லா ஷாப்பிலே இருக்கிற சாமான்களோட பெயர்களையும் பட்டியல் எடுத்து, புத்தகமாகப் போட்டு, தபாலில் அனுப்பி வைக்கிறது.

அந்தப் புத்தகத்திலே சில பொருட்களோட பொம்மையும் இருக்கும். புத்தகத்தைப் பார்த்துவிட்டு ஆர்டர் வரும்.

கடையிலே போய் அந்தந்த சாமான்களை வாங்கி அனுப்பி வைக்கிறது. இதிலே கிடைக்கிற கமிஷன் தான் இலாபம்.


இதுக்குத்தான் கேட்லாக் வியாபாரம்னு அந்தக் காலத்திலே எஸ்.எஸ்.வாசன் இந்த வியாபாரம் பண்ணிக்கிட்டிருந்தாரு.

ஒரு நாளைக்கு என்கிட்டே வந்து உங்க குடியரசு பத்திரிகையிலே என் வியாபாரத்தை விளம்பரம் பண்ணணும்னாரு.

சரின்னேன் நான். அப்போ குடியரசிலே ஓர் அங்குலத்திற்கு இரண்டணா விளம்பர சார்ஜ். நான் இதைச் சொன்னதும் இரண்டாதானா?.னு கேட்டார் வாசன். ஆமாம் என்றேன்.

எவ்வளவு விளம்பரம் கொடுத்தாலும் எடுத்துப்பீங்களானு கேட்டார். விளம்பரம் வேண்டாம்பாங்காளா சரின்னேன்.

இந்தப் பிள்ளை என்ன பண்ணிச்சு. எங்கெங்கேயோ போய் விளம்பரம் சேகரிச்சுட்டு வந்து குடியரசுக்குக் கொடுக்க ஆரம்பிச்சுது.



இப்படித்தான் வாசன் எனக்கு முதல்லே பழக்கமானார்.

அப்போ குடியரசு நல்லா போய்க்கிட்டிருந்தது. விளம்பரம் சேரிச்சுக்கொடுத்துக்கிட்டிருந்தார் வாசன்.

ஒரு பத்திரிகை நடத்தினார். விளம்பரம் மூலம் பணம் வருது.

நமக்குத் தோணுற விடயத்தையும் மக்களுக்குச் சொல்ல முடியறதுங்கறதைப் பார்த்தபோது நாமே ஒரு பத்திரிகை நடத்தினா என்ன ன்னு வாசனுக்குத் தோணியிருக்கு. அதனால்தான ஆனந்த விகடன் ஆரம்பிச்சாரு.

ரொம்ப குறைந்த விலைக்கு அவருக்கு அது கிடைத்தது. எங் கிட்டே விடயத்தைச் சொன்னார். அது மட்டுமல்ல, ஆரம்ப காலத்தில் என் சங்கதிகளுக்கு நிறைய இடம் கொடுத்தார்.

என்னைப் பத்தி ஒரு சிறு வார்த்தை கூட குற்றமாக எழுத மாட்டார்.

நாங்கள் சந்திக்கிறபோது கூட அரசியலோ, சமூக விடயங்களோ பேசிக்க மாட்டோம்.

அதுதான் சொன்னேனே, என்கிட்டே பேசவே மாட்டாரு.

எதிரே கொஞ்ச நேரம் நின்னுட்டுப் போயிடுவார். அவ்வளவு மரியாதை.

இவ்வாறு பெரியார் குறிப்பிட்டுள்ளார். (தொடரும்)

# அப்போது ஆயுதங்களுடன் போராடியவர்கள் இப்போது பசி வேதனையுடன் போராடுகின்றனர்

30.12.2015 அன்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி



...அதாவது தற்போது வன்னியில் மோசமான சூழல் நிலவுவதாகவும் ஒழுக்கமற்ற செயல்கள் அதிகரிப்பதாகவும் முன்னாள் போராளிகள் கூறுகின்றனர்.

'புலிகள் இருந்த காலத்தில் எவரும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடவில்லை. அனைவரும் பிரபாகரனுக்கு பயந்து விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. தற்போது மாலை ஆறு மணிக்குப் பின்னர் எந்தவொரு பெண்களும் வீதியால் நடந்து செல்ல முடியாது' என்பது முன்னாள் போராளிகளின் ஆதங்கமாகும்.

வன்னிப் பகுதியில் தொழிற்சாலை ஒன்றை நிறுவி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கினால் இளைஞர்களுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் குறைவடையும் என தினேஸ் உணர்கிறார்.

வடிவேல் 13 ஆண்டுகள் புலிகள் அமைப்பில் பணியாற்றிய போது ஏப்ரல் 17, 2009 இல் தனது கண்பார்வையை இழந்தார். இவர் புலிகளின் முக்கிய தளபதி ஒருவரின் பாதுகாப்பாளராக கடமை யாற்றியிருந்தார்.

'புனர்வாழ்வு முகாமில் நாங்கள் மிகவும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டோம். ஆனால் எமக்கென எந்தவொரு தொழிற்பயிற்சிகளும் வழங்கப்படவில்லை. நான் விடுவிக்கப்பட்ட பின்னர், அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கால் துடைப்பான்கள் தயாரிக்கக் கற்றுக்கொண்டோம். ஆனால் இதில் வருவாயைப் பெற முடியவில்லை. பின்னர் சமையலாளராகப் பணியாற்றினேன். தற்போது சிறிய உணவகத்தை நடாத்தி வருகிறேன். ஆனால் தற்போது பெருமளவில் உணவகங்கள் நிறுவப்பட்டுள்ளதால் இவர்களுடன் போட்டியிடுவது மிகவும் கடினமாக உள்ளது' என வடிவேல் தெரிவித்தார். இவர் ஒரு பிள்ளைக்குத் தந்தையாவார்.

இராணுவத்துடன் நட்பாக நடந்து கொள்ள இவர் விரும்புகிறார். ஆனால் அரசாங்கமானது இதுவரையில் வடிவேல் போன்ற மாற்றுத் திறனாளிகளுக்கு எவ்வித உதவிகளையும் வழங்கவில்லை. முன்னாள் போராளி என முத்திரை குத்தப்படுவதை வடிவேல் விரும்பவில்லை. ஒவ்வொருவர் மத்தியிலும் சிங்களவர் அல்லது தமிழர் என்கின்ற இனப்பாகுபாடு காணப்படுகிறது. ஆகவே இந்தப் பிரச்சினை மீண்டும் இடம்பெறக் கூடாது என்பதையே வடிவேல் விரும்புகிறார். 'நான் அரசியலுக்குள் நுழைய விரும்பவில்லை. எமக்கு இன்னுமொரு யுத்தம் வேண்டாம்' என வடிவேல் மேலும் கூறினார்.

சமூகப் பணியாளர்கள், சமூகத் தலைவர்களின் கருத்தின் பிரகாரம் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் தற்போதும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

'மூன்று முக்கிய விடயங்கள் காணப்படுகின்றன. முதலாவது முன்னாள் போராளிகள் இராணுவத்தினரின் முகவர்களாக நோக்கப்படுகின்றனர். இவர்கள் உளவாளிகள் என்கின்ற அவப்பெயரைச் சம்பாதிக்கின்றனர்.

இரண்டாவதாக, புலிகளின் காலத்தில் ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு தற்போது உயிருடன் உள்ள போராளிகள் இவர்களால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு போரில் இறந்தவர்களின் குடும்பங்களால் அவமதிக்கப்படுகின்றனர்.

மூன்றாவதாக, புனர்வாழ்வளிக்கப்பட்ட பெண் போராளிகள் கறைபடிந்தவர்கள் என கிராமத்தவர்களால் ஓரங்கட்டப்படுகின்றனர்' என கிளிநொச்சியைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய எஸ்.கே.டானியல் தெரிவித்தார்.

'விவசாயத்தில் ஈடுபட்டவர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இதில் எவ்வித பயனுமில்லை. புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களில் 2000 பேர் வரை சிவில் பாதுகாப்பு படையில் வேலைக்கு இணைக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் தற்போதும் தொழில் தேடுகின்றனர்' என டானியல் குறிப்பிட்டார். 'ஆசிரியர் ஒருவர் புலிகள் அமைப்பில் இணைவதற்கு முன்னர் எட்டு ஆண்டுகள் வரை பாடசாலை ஒன்றில் சேவையாற்றியிருந்தார். இவர் தனது வேலைப் பத்திரத்தைப் பெறுவதற்காக அதிபரிடம் சென்றபோது அவர் அதனைக் கொடுக்க மறுத்துவிட்டார்.

புலிகள் அமைப்பில் பணியாற்றியதே இதற்கான காரணமாகும். பிறிதொரு சந்தர்ப்பத்தில் யோகப் பயிற்சிக்காக இந்தியாவிற்குச் செல்வதற்கு முன்னாள் போராளி ஒருவர் விரும்பினார்.

ஆனால் இவருக்கான கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது' என டானியல் சுட்டிக்காட்டினார்.

போர் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்த போதிலும் தற்போதும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இவர்கள் சாதாரண மக்களாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதே மிகப் பாரிய பிரச்சினையாகும்.

'நாங்கள் அனைத்தையும் போரில் இழந்துவிட்டோம். இவ்வாறானதொரு போர் மீண்டும் ஏற்படக்கூடாது.

நீங்கள் எவ்வாறு எங்களை அழைப்பதென்பது ஒரு பிரச்சினையல்ல. ஆனால் தயவு செய்து எங்களை தனிமைப் படுத்திவிடாதீர்கள்' என புனர்வாழ்வு பெற்ற ஒருவர் கேட்டுக் கொண்டார். (முற்றும்)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



நெஞ்சில்

பொதுவாக நெஞ்சின் எந்தப் பகுதியில் மச்சம் இருந்தாலும் அது நன்மையாகவே இருக்கும். நெஞ்சில் மச்சம் உள்ளவர்கள் முன்னோர் வழிச்சொத்தை அவ்வளவாகப் பெற்றிருக்கவில்லையென்றாலும் திருமணத்திற்குப் பிறகு சொத்து, சுதந்திரங்கள் அதிகமாகும். மனைவி மூலமாகவும் அதிக அளவில் தனலாபம் உண்டாகும்.

நெஞ்சின் வலது பக்கத்தில் மச்சம் இருந்தால் பரம்பரை செல்வந்தராக இருப்பார்கள். தன்னலத்தைக் காட்டிலும் பொதுநலத்திற்காகப் பாடுபடுவார்கள். இந்த மச்சம் உடையவர்களில் சிலர் இசைக் கலைத்துறையில் புகழ் பெற்ற மேதைகளாகத் திகழ் வார்கள்.

நெஞ்சின் இடது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் வாழ்க்கை வசதிகளைப் பெற்றவர்களாக இருப்பார்கள். சாதாரண வாழ்க்கையை சிறப்பாக கழிக்கும் ஆற்றலுடையவர்கள். அதிகமாகப் புசிக்கும் இயல்புடையவர். நெறி தவறாமல் தமது வாழ்க்கையை வகுத்துக் கொள்பவர்களாகையால் பிறருடைய பாராட்டுதலைப் பெறுபவர்.

நெஞ்சுக்குக் கீழே மச்சம் இருந்தால் இளம் வயதிலேயே திருமணம் நடக்கும். மனைவி வந்த பிறகே இவரது வாழ்க்கை செம்மைப்படும். மனைவி மூலமாக சிலருக்கு சொத்து, பணம் போன்றவை கிடைக்கும்.

வலது உள்ளங்கையில்

உள்ளங்கையில் அதாவது ஆண்களுக்கு வலது உள்ளங்கையில் மச்சம் இருந்தால் மிகவும் நன்மையைத் தரும்.

கையில் கட்டை விரல் முதல் ஐந்து விரல்கள் உள்ளன. அவைகள் ஒவ்வொன்றின் மீதும் உள்ள மச்சங்களுக்கு முறையே பலன் கூறப்படுகிறது.

வலதுஉள்ளங்கையில்கட்டை விரலின் அடியில் மச்சம் இருந்தால் மனைவி, மக்களுக்கும் பந்துக்களுக்கும் விரோதியாவான். முன்னோர் சொத்துக்களைஎல்லாம்அழித்துவிடுவான்.

உள்ளங்கையில் நடு விரலின் அடியில் மச்சம் இருந்தால், பந்துக்களுக்கும் மனைவிக்கும்விரோதியாவான். முன்னோர் சொத்தை அழித்து விடுவான்.

வலதுஉள்ளங்கையில்ஆள் காட்டி விரல் அடியில் மச்சம் இருந்தால் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவான். சாமர்த்தியமாகப் பேசி பணம் சம்பாதிப்பதில் வல்லவனாகவும் இருப்பான். மக்களின் மத்தியில் இருப்பதைக் காட்டிலும் தனிமையையே அதிகமாக விரும்புவான்.

வலது உள்ளங்கையில் மோதிர விரல் அடியில் மச்சம் இருந்தால் வாழ்க்கைக்குரிய சாதாரண வசதிகளெல்லாம் பெற்றிருப்பான்.

சஞ்சலமானமனமுள்ளவன். தன் சக்திக்கு மிஞ்சிய காரியங்களை செய்ய முற்பட்டு மனவேதனைகளை மட்டுமே சம்பாதித்துக் கொள்வான்.

வலது உள்ளங்கையில் சுண்டு விரலின் அடியில் மச்சம் இருந்தால் நீண்ட ஆயுளும் அளவற்ற செல்வமும் படைத்தவனாக இருப்பான். சந்ததியும் வளர்ச்சியாக இருக்கும். உலக விவகாரத் தில் மிகவும் திறமைசாலி யாகத் திகழ்வான். தெய்வ பக்தி, பிராமண பக்தி நிரம் பியவன். நினைத்ததை முடிக் கும் திறமையானவன் இவன்.

(தொடரும்)

## இரண்டு நீதவான்களின் இடமாற்றங்கள் இரத்து

(கொழும்பு)

பல்வேறு முக்கிய வழக்குகளை விசாரித்து வந்த கொழும்பு பிரதம நீதவான் கிகன் பிலபிட்டிய மற்றும் கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸ் ஆகியோரின் இடமாற்றங்களை இரத்துச் செய்ய நீதி சேவைகள் ஆணைககுழு முடிவு செய்துள்ளது.


2016 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம், 117 நீதவான்களை இடமாற்றம் செய்யும் உத்தரவை நீதிச் சேவைகள் ஆணைக்குழு பிறப்பித்திருநதது.

முன்னைய ஆட்சியில்இடம பெற்ற பல்வேறு ஒழுங்கீனங்கள், குற்றச்செயல்கள தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வந்த கொழும்பு பிரதம நீதவான் கிகன் பிலபிட்டிய மற்றும் கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ் ஆகியோரும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இது முக்கியமான வழக்குகளில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பரவலான விமரசனங்கள் எழுந்திருந்தன.

இந்த நிலையிலேயே இவரகளின் இடமாற்றங்களை நிறுத்தி வைக்கவும், இன்னும் ஒரு ஆண்டு காலதுக்கு இவர்கள் ஏற்கனவே பணியாற்றிய நீதிமன்றங்களில் பணியாற்ற அனுமதிக்கவும் தீர்மானித்துள்ளது.

ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை மற்றும், முன்னைய அரசாங்கத்தின் முக்கிய அரசியல்வாதிகளுக்கு எதிரான வழக்குகள் இந்த நீதிபதிகள் முன்பாகவே விசாரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)




## வர்ணசிங்கவின் அமைச்சு முதலமைச்சர் வசமானது

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரும் மேல் மாகாண சபையின் சுகாதார அமைச்சருமான நிஷாந்த வர்ணசிங்கவின் அமைச்சு, மேல் மாகாண சபையின் முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேல் மாகாண சபையின், 2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில், நிஷாந்த வர்ணசிங்கவின் அமைச்சுகளுக்கான நிதியொதுக்கீடுகள் தோல்வியடைந்ததையடுத்தே, அவ்வமைச்சு, முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கையை மேல் மாகாண ஆளுநர் எடுத்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

அதனடிப்படையில், மேல் மாகாண சுகாதார, சுதேச மருத்துவத்துறை, சமூக நலனோம்பல், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு, மகளிர் விவகார அமைச்சே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**எனக்கு அறிவிககவிலலை**

மேல் மாகாண சுகாதார, சுதேச மருத்துவத்துறை, சமூக நலனோம்பல், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு, மகளிர் விவகார அமைச்சு, மேல் மாகாண முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்படுவது தொடர்பில் தனக்கு அறிவிக்கவில்லை என்று, மேல் மாகாண சபையின் அமைச்சர் நிஷாந்த வர்ணசிங்க தெரிவித்தார்.

மாகாண சபையின் எந்தவொரு அமைச்சையும் தனககுக் கீழ் கொண்டு வருவதற்கும், அவ்வமைச்சை வேறொருவரிடம் ஒப்படைப்பதற்குமான அதிகாரம், ஆளுநருக்கு இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

**அவசரமாக இன்று கூடுகிறது அவை**

மேல் மாகாண சபையின் சுகாதார அமைச்சுக்கான நிதியொதுக்கீடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அச்சபை, இன்று வியாழக்கிழமை கூடவிருக்கின்றது.

சுகாதார அமைச்சுக்கான நிதியொதுக்கீடு தவிர, மேல் மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், அச்சபையின் அமர்வு, ஜனவரி 5 ஆம் திகதி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

ஆளுநருக்கு இருக்கின்ற அதிகாரங்களின் பிரகாரமே, அச்சபை, இன்று வியாழக்கிழமை கூடவிருப்பதாகவும் அறியமுடிகின்றது. சுகாதார அமைச்சுக்கான நிதியொதுக்கீடுகள் நிறைவேற்றாமை சட்டரீதியான பிரச்சினை என்பதனால் அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே, அவையை அவசரமாகக் கூட்டுவதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்தார் என்றும் அறியமுடிகின்றது. (இ-7)

# செய்தித் துளிகள்

## ஜெய்ப்பூர் இயன்மருத்துவப் பகுதியின் தலைவர் தேசிய ரீதியில் இரண்டாமிடம்

(யாழ்ப்பாணம்)

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சினால் நடத்தப்பட்ட சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக்கூட்டுறவு தொடர்பான நாடு தழுவிய தமிழ் மொழியிலான கவிதைப் போட்டியில் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த இயன் மருத்துவப்பகுதியின் தலைவர் தங்கராசா-தமயந்தி தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கான கேடயம், பரிசு மற்றும் சான்றிதழ் என்பன கடந்த 17.12.2015 அன்று கொழும்பு 7 நெளும் பொக்கண மகிந்த ராஜபக்ஷ கலைக் கூடத்தில் வைத்து வழங்கப்பட்டது. (இ-5)

## கலை இலக்கியப் பெருவிழா

வல்வெட்டித்துறை கலை கலாசார இலக்கிய மன்றம் நடத்தும் 6ஆவது மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறை ரேவடி உல்லாச கடற்கரையில் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலைகலாசார இலக்கிய மன்றத்தலைவர் ம.சுலக்ஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக சங்கீத ஆசிரியை திருமதி. ஞானச்சந்திரன் துவாரகி, கலைப்பருதி கே.என்.தேவதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இளம்சிற்பக் கலைஞர் வெ.இராஜேந்திரன் கௌரவிக்கப்படவுள்ளார்.(இ-5)

## 2014-2015ம் ஆண்டின் சிறந்த பிரதேச செயலகம் குச்சவெளி

ஆண்டுதோறும் நடத்தப்படும் சிறந்த பிரதேச செயலகத் தெரிவில் 2014-2015 ஆம் ஆண்டின் சிறந்த பிரதேச செயலகமாக திருகோணமலைமாவட்டத்தில் உள்ள குச்சவெளி பிரதேச செய லகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கையின் தேசிய உற்பத்தி அபிவிருத்தி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

7R எனும் முறைமையை அடிப்படையாகக் கொண்டே இந்த சிறந்த பிரதேச செயலகங்கள் தரப்படுத்தப் படுகின்றன. 7R முறையானது தயாரிப்பு, தரம், நேரம் இடம், செலவு நிந்தனைகள், தகவல் அறியும் உரிமை என் பவற்றின் சிறப்பை வைத்தே இவை கணிக்கப்படுகின்றன. குறித்த பிரதேசம் கடந்த 30 வருடமாக யுத்தத்தால் பாதிக்கப் பட்ட பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது.இ

## பல் வைத்திய நிபுணர் நியமனம்

(பொற்பதி)

வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு புதிதாக பல் வைத்திய நிபுணர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி வைத்தியசாலையில் பல்வைத்திய நிபுணர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்படாத நிலையே காணப்பட்டது.

இவ்வைத்தியசாலையில் வாரத்தில் ஒருநாள் நடைபெறும் நடமாடும் பல்வைத்திய சேவையே இதுவரை காலமும் நடைபெற்று வந்தது.

அதாவது மந்திகை ஆதார வைத்தியசாலையில் இருந்து வாரத்தில் ஒவ்வொரு புதன் கிழமையும் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு பல்வைத்திய நடமாடும் சேவை ஒன்று வாகனம் மூலம் செயற்படுத்தப்பட்டு வந்தது. இதனால் அங்குள்ள நோயாளர்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமது வைத்திய சேவைகளை பெற்று வந்தனர்.

இதன்காரணமாகவே மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு தற்போது பல் வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5-64)

## புகையிரத நிலையத்தில் யாசகம் பெறுவோர் எண்ணிக்கை குறைவு

புகையிரத திணைக்களம் எடுத்த நடவடிக்கை காரணமாக புகையிரத நிலையத்தில் யாசகம், வியாபாரம் செய்பவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என புகையிரத திணைக்களத்தின் பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

புகையிரத நிலையத்தின் அனுமதியின்றி வியாபாரம் செய்தவர்களுக்கு தண்டப் பணமாக கடந்த ஐப்பசி மாதத்தில் 40ஆயிரமும் கார்த்திகை மாதத்தில் 51 ஆயிரமும் அரசுக்கு கிடைத்துள்ளது. மற்றும் புகையிரத கடவை மூடியுள்ள போது பாதையை கடந்தவர் களுக்கும் சாரதிகளுக்கு மான தண்டப் பணமாக 45ஆயிரம் கிடைத்துள்ளது என்றும் கூறியுள்ளார்.

புகையிரத நிலையத்திலும் புகையிரதத்திலும் யாசகம் செய்தவர்கள் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ

## ஸ்ரீ சாரதா தேவி ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-மருதனார் மடம் வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ணமிஷனில் அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஜெயந்தி விழாவும் கல்பதரு தினமும் நாளை முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி. ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

## இலங்கைப் பெண்ணின் தண்டனை தொடர்பில் சவுதி அரேபிய தூதரகம் அக்கறை காட்டவில்லை

சவுதி அரேபியாவில் கல்லால் அடித்துக் கொல்லுமாறு தண்டனை விதிக்கப்பட்ட இலங்கைப் பெண் தொடர்பில், அந்த நாட்டிலுள்ள, இலங்கைக்கான தூதரகத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை என தெரிவிக்கப்பட்டுள் ளது.

மேலும் இலங்கை பெண்ணின் தண்டனை தொடர்பில் சவுதி அரே பிய தூதரகம் அக்கறை காட்டவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், அந்த குற்றச்சாட்டை இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் அஸ்மி தாசிம் மறுத்துள் ளார்.

இலங்கைப் பெண்ணுக்கு விதிக் கப்பட்ட தண்டனையை தளர்த்துவது தொடர்பிலான மேன்முறையீடு களை முன்வைப்பது குறித்து, இலங்கை அரசாங்கம் மட்டு மல்லாது, இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதரகமும் சிறந்த நடவடிக்கைகளை முன்னெடுத் ததாக அவர் சுட்டிக்காட்டியுள் ளார். அண்மையில் சவுதி அரே பிய நீதிமன்றத்தால் இலங்கைப் பெண் ஒருவரை கல்லால் அடித் துக் கொல்லுமாறு மரண தண் டனை விதிக்கப்பட்டது. எனினும் இலங்கை தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மேன்முறை யீடு காரணமான அந்த தண் டனை சிறைத் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தககது. (இ-7)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 30.12.2015

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 141.79 | 146.03 |
| பிரிட்டன் | பவுண்ட் | 209.38 | 217.16 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 153.91 | 160.30 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 141.84 | 148.02 |
| கனடா | டொலர் | 101.74 | 106.11 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 102.25 | 107.24 |
| சிங்கப்பூர் | டொலர் | 99.72 | 103.74 |
| இந்தியா | ரூபா | 2.1682 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.0472 |
| குவைத் | டினார் | 473.7777 |
| ஓமான் | ரியால் | 373.6322 |
| கட்டார் | ரியால் | 39.5139 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3652 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1669 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 160 | 170 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 55 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 600 | 800 | 1000 | 800 |
| தக்காளி | 150 | 130 | 120 | 140 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 180 | 40 | 160-200 | 200 | 120 |
| கரட் | 180 | 250 | 200 | 200-350 | 240 | 150 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 140 | 90 | 100 | 160 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 200 | 160 | 70-120 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 200 | 400 | 150 | 250 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 100 | 160 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 240 | 200 | 150 |
| லீக்ஸ் | 140 | 200 | 130 | 160-200 | 200 | 100 |
| பீற்றூட் | 200 | — | — | — | 240 | — |
| கறிமிளகாய் | 400 | — | 350 | 350 | 600 | 400 |
| முருங்கைக்காய் | 500 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | 280 | 200 | 280 | 250 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 150 | — | 160 | — |
| கீரை - 1 பிடி | 30 | 60 | — | 50 | 60 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 150 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-45 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | 100 | 150 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 250 | — | 260 | — | — |
| முள்ளங்கி | 120 | 150 | — | 100 | 160 | 120 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 25 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 30 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 60 | 50 | 50 | 100 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## இலங்கை நோக்கி பழ.நெடுமாறன் படகில் பயணம் 67

7, தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நண்பர் நெடுமாறன் அவர்கள் தலை மையில் நடைபெறுகின்ற தியாக பயணத்தில் செல்ப வர்களை இந்திய அரசு இடை யிலேயே தடுத்துவிடும் என்ற செய்தியை இலங்கை ஜனாதி பதி ஜெயவர்த்தன வெளியிடு கிற அளவிற்கு இங்குள்ள மாநில அரசு காவல் துறையும் இலங்கையோடு தங்களுக் குள்ள நேசத்தை வெளிக் காட்டியிருப்பது பெரும் வேதனைக்குரியது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

ராஜினாமா கடிதத்தையும் சபாநாயகர் ராசாராமுக்கு அனுப்பி விட்டதாகக் கருணா நிதி தெரிவித்தார்.

### தீ வைத்துக் கொளுத்தினார்

இலங்கையில் தமிழர்களு க்கு எதிராக கொண்டு வரப் பட்ட பிரிவினைத் தடைச் சட்ட நகலை ஒகஸ்ட் 12 ஆம் திகதி சென்னையில் நடை பெற்ற பொதுக்கூட்ட மேடை யில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தீ வைத்துக் கொளுத்தினார். தீ பரவட்டும்- இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களுடைய துயரத்தைத் தீர்க்கட்டும் என்று கூறிச் சட்ட நகலை அவர் எரித்தார்.

இலங்கைத் தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து இலங்கைக்குப் படகில் செல்ல பழ.நெடுமாறன், குமரி ஆனந் தன் ஆகியோர் முயன்றனர்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படு வதைத் தடுக்க இந்திய இரா ணுவத்தை அனுப்பாததால் என் தலைமையில் 5 ஆயிரம் பேர் கொண்ட தியாகப்படை இலங்கைக்குப் படகுகளில் செல்லும் என்று தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் பழ.நெடுமாறன் அறிவித்திருந் தார்.

இதன்படி 1983 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி மதுரையில் இரு ந்து ராமேஸ்வரத்திற்குப் பாதயாத்திரையாகப் புறப் பட்டார். இதற்கான தொடக்க விழா, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அருகே உள்ள காந்தி சிலை முன்பு



நடந்தது.

இந்த விழாவுக்குத் தலைமை தாங்கி முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் பேசிய தாவது:-

### தியாகப் பயணம்

பழ.நெடுமாறனின் இந்தத் தியாகப் பயணம் தமிழக வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தப் பயணத்தை மத்திய, மாநில அரசுக்கு அனுமதிக்குமா? இலங்கை அரசு தடுக்குமா என்பது சட்டப்பிரச்சினை.

நமக்குத் தனி நாடு என்று இருந்திருந்தால் இலங்கை மீது படையெடுத்து நமது இனத் தைத்- தமிழர்களைப் பாது காத்து இருப்போம். இப் போது நாம் யாரையோ நம்பி எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளது.

இருந்தாலும் உயிர்த் தியா கம் செய்வதைத் தடை செய்ய சட்டம் கிடையாது. இந்தத் தியாகப் பயணம் எப்படியும் மத்திய அரசின் கண்ணைத் திறக்கும். எனவே நெடுமாறனின் இந்தப் பய ணம் வெற்றி பெறட்டும் என்று வாழ்த்தி வழியனுப்பு கிறேன். இவ்வாறு கி.ஆ. பெ.விசுவநாதம் பேசினார்.

### குன்றக்குடி அடிகளார்

இந்த விழாவில் குன்றக் குடி அடிகளார் பேசியதா வது:-

தாய்த் தமிழகம் வலிமை யுடன் இருந்தால் உலகில் எந்தப் பகுதியில் உள்ள தமிழனும் நன்றாக இருப் பான். ஆனால் இப்போது தாய்த் தமிழகமே நொந்து கிடக்கிறது. முதலில் நமக்கு நாமே தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும்.

தியாக யாத்திரை என்று இந்தப் பயணத்தை அழைக் கிறோம். தெரிந்தோ, தெரி யாமலோ காந்தியடிகள் சிலை அருகே கூறி இருக்கிறோம். துப்பாக்கிக் குண்டுகள் துளை க்கும் இந்தக் காலத்தில் நாம் நம்முடைய இதயத்தைத் திறந்து அறவழியில் பயணம் தொடங்கியுள்ளோம்.

அன்பு வழியில் தொட ங்கியுள்ள இந்த அறப்போரு க்கு முன்பு எதுவுமே நிற்க முடியாது. சிங்கள அரசுக்கு ஓர் எச்சரிக்கை விடுக்கிறேன். மனித சுதந்திரத்தை எந்தச் சட்டத்தாலும் தடை செய்ய இயலாது.



(தொடரும்)

சொல்லாமல் செய்வோர் பெரியோர்
சொல்லியும் செய்யார் கயவர்
-ஔவையார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மக்கள் கேட்காமல் அரசு செய்யவேண்டும்

வலி வடக்குப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 700 ஏக்கர் நிலத்தை விடுவிப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டமை தமிழ் மக்களுக்கு ஓர் ஆறுதலைத் தருகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மல்லாகத்துக்குச் சென்று வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் உள்ள மக்களைச் சந்தித்தார்.

இதன்போது தமது வாழ்விடங்கள் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதன் காரணமாக நலன்புரி முகாம்களில் தங்கியிருக்க வேண்டிய அவல நிலை இருப்பதாக மக்கள் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினர். இதனையடுத்து வலி வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சுமார் 700 ஏக்கர் நிலம் விடுக்கப்பட்டு உரியவர்கள் அங்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இச் செயலுக்கு தமிழ் மக்கள் நன்றியுடையவர்களாவர்.

அதேநேரம் அடிப்படைத் தேவைகள் மற்றும் தத்தம் உரிமைகளுக்காக அரசிடம் கோரிக்கை விடுதல் என்ற நிலைமை மக்களுக்கு இருக்குமாயின் அரசின்பணி பாகுபாடு உடையது என்றே கூறவேண்டும்.

அதாவது சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறி நலன்புரி முகாம்களில் மக்கள் இருக்கும் போது, அவர்களின் நிலத்தை படையினர் கபளீகரம் செய்து வைத்திருப்பது என்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

எனவே படையினர் வைத்திருக்கின்ற பொது மக்களின் நிலங்களை உடனடியாக விடுவித்து அங்கு மக்கள் மீளக்குடியமர்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதற்காக எவரும் அரசிடம் கோரிக்கை விடவோ, உண்ணாவிரதம் இருக்கவோ வேண்டிய தேவையில்லை என்ற நிலை உருவாக வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரியின் உத்தரவின் பேரில் விடுவிக்கப்பட்ட 700 ஏக்கர் நிலம் என்பது தமிழ் மக்கள் காலாகாலமாக வாழ்ந்த மண். எனினும் அந்த இடத்தில் இன்று ஒரு குடிமனை தானும் இல்லை.

இருந்தவீடில்லை; வாழ்ந்த மனையில்லை; வேலியில்லை; கிணறில்லை; தேடிய தேட்டம் எதுவும் இல்லை என்ற வெறுமையில் நலன்புரி முகாம்களில் வாழும் மக்கள் எப்படி மீளக்குடியமர முடியும்? என்ற கேள்வி அரசிடம் ஏற்பட வேண்டும். அவ்வாறான ஒரு கேள்விக்கான பதில், மீளக்குடியமரும் மக்களுக்கு உடனடியாக வீட்டுத்திட்டம் வழங்கப்படும் என்பதே அரசின் அடுத்த செய்தியாக இருக்க வேண்டும்.

எனினும் உங்கள் காணிகளை விடுவித்தாயிற்று எனி நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்பது போல அரசு நடந்து கொள்ளக் கூடாது.

கேட்காமல், கோரிக்கை விடாமல் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இந்த வரிசையில், நீண்ட காலமாக சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதும் கட்டாயமானதாகும்.

அரசியல் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தால்தான் அவர்கள் பற்றி நினைப்பதென்பது அடிப்படை மனிதவுரிமை மீறலாகும். எனவே அரசாங்கம் என்பது தானாக முன்வந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது, மனித உரிமைகளை பாதுகாப்பது என்பன தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். எல்லாவற்றுக்கும் கோரிக்கை விடுவது, ஆர்ப்பாட்டம் செய்வது என்ற நிலைமை இருப்பது நல்லதல்ல.

# தமிழ்மக்கள் பேரவைக்கு எதிராக விஷமப் பிரசாரம்

## ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் பேரவைக்கு சேறு பூசும் முயற்சியாக பல அநாமதேயமான செய்திகள் மற்றும் புனையப்பட்ட கதைகள் ஒரு சில தரப்பினரால் பேசப்பட்டு வருகின்றது என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவை உருவானதில் இருந்து சில தரப்பினரால் பல புனையப்பட்ட கதைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. பெயர் முகவரி போன்ற எந்த விபரங்களும் இல்லாமல் பல அநாமதேயமான செயதிகளை வெளியிடுகின்றனர். அவை எந்த விடயங்களுக்கும் யாருக்கும் பயனற்ற ஒன்றாகும்.

தமிழ் மக்கள் பேரவையிடம் மக்களால் நியாயமான முறையில் வைக்கப்படும் கோரிக்கைகள் ஏதுவாக இருந்தாலும் அவை ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் அதற்கு நாமும் ஒத்துழைப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தொழிற்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாக கொண்டு முழு நேர மற்றும் பகுதி நேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

இக்கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக் கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் கற்கைநெறிகள் நடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகளான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், ஆடை வடிவமைப்பாளர். காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்) இரு சக்கர மற்றும் முச்சக்கரவண்டி திருத்துநர், தொழிற்சாலை மின்னிணைப்பாளர், குளிர்சாதன உபகரண திருத்துநர், டீசல் வாகன இயந்திர திருத்துநர் ஆகும்.

இக்கற்கைநெறிகள்அனைத்தும் தேசியதொழில்தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக் கற்கை நெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாவது மாடி, வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் அல்லது தொழிற்பயிற்சி நிலையத்தில் கைதடி என்னும் முகவரியில் எதிர்வரும் 03.01. 2016 திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை என இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை அறிவித்துள்ளது. (இ

## நல்லாட்சி குறித்து அர்ஜீன கவலை

நல்லாட்சி குறித்து அமைச்சர் அர்ஜீன ரணதுங்க கவலை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக இலங்கை கிரிக்கெட் தேர்தல் தொடர்பில் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

எவ்வாறெனினும், அரசியல்வாதி என்ற ரீதியில் விளையாட்டுத்துறை அமைச்சரின் மீது நம்பிக்கையுண்டு.

இந்த நாட்டில் சூதாட்ட வர்த்தகத்தில் யார் ஈடுபடுகின்றார் என்பது எல்லோருக்கும் தெரியும். அவ்வாறானவர்கள் கிரிக்கெட் நிர்வாக பதவிக்காக போட்டியிடக் கூடாது.

சட்ட விரோதமான முறையில் தேர்தலில் போட்டியிடுவது நல்லாட்சிக்கு பொருந்தாது என அர்ஜீன ரணதுங்க தெரிவித்துள்ளார். (இ-7)

## ஊர்காவற்றுறையில் அபிவிருத்தித் திட்டங்கள்

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தினூடாக பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய மெலிஞ்சி முனை புதுக்குடியிருப்பு வீதிக்கு ஊரியிட்டு கிரவல் இட்டு புனரமைத்தல், அம்பலவாணர் வீதி ஊரி இட்டு மதகுடன் புனரமைத்தல், சுருவில் பொதுக்கிணறு புனரமைப்பு, புளியங்கூடல் பொது நூலக உள்ளக வீதி புனரமைப்பு, கோட்டைவாசல் இந்து மயான கிணறு புனரமைத்தல், உப்புக்குளம் 3 ஆம் ஒழுங்கை ஊரியிட்டு கிரவல் இட்டு புனரமைத்தல் ஆகிய வேலைத் திட்டங்கள் பிரதேச சபையின் நிதி மூலம் தம்பாட்டி பெரியபுலம் பிரதான வீதி நெல்சிப் திட்டத்தில் சபை மற்றும் பங்களிப்புடனும் புனரமைப்பு வேலைத் திட்டங்கள் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளன. (இ-5)

## விபத்துக்களில் சிக்கிய இருவர் வைத்தியசாலையில்

இரண்டு வெவ்வேறு மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கிய இருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றையதினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சுன்னாகம் கந்த ரோடையைச் சேர்ந்த இராஜரட்ணம் ராஜ்குமார் (வயது 39) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அலெக்ஸ்சாண்ட் சாம்ராஜன (வயது 34) என்ற இளைஞர் ஒருவருமே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ராஜ்குமார் என்பவர் மருதனார்மடம் சந்தியில் நேற்றுக்காலை 6 மணியளவில் விபத்துக்குள்ளானார் எனவும் சாம்ராஜன் பிற்பகல் 2 மணயளவில் யாழ்ப்பாணம் கைலாசப்பிள்ளையார்கோவில் வீதியில் விபத்துக்குள்ளானார் எனவும் தெரியவந்துள்ளது. (இ-5,30)

## கொடுப்பனவுகளை இன்று பெறலாம்

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவின் சமூக சேவைப் பிரிவால் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாற்றுவலுவுடையோர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற மாதாந்த உதவித் தொகையான 3 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவில் நவம்பர், டிசெம்பர் இரு என மாதத்திற்குரிய கொடுப்பனவுகளை இன்றைய தினம் வங்கிகளில் பெற்றுக்கொள்ள முடியும் என கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார். (இ-5,60)

## சத்திய தரிசனம்



### கடவுள் தந்த வெகுமதி

❖ எல்லா உயிர்களிலும் மனிதனே சிறந்தவன். கடவுள் அளித்த வெகுமதியான இப்பிறவியைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

❖ மற்றவருக்கு அறிவுரை கூறுவது மிக எளிது. ஆனால், தன்னிடம் உள்ள குறைகளைப் போக்குவது கடினமானது.

❖ பெற்றோரை மதிப்புடன் நடத்துங்கள். இளைஞரான நீங்களும் வருங்காலத்தில் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கும்.

❖ மலர் போல மனம் இருக்க வேண்டும். அதில் நல்லெண்ணம் என்னும் நறுமணம் பரவ வேண்டும்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



### மார்கழி மாதத்தின் சிறப்பு என்ன? அந்நாட்களில் விடியற்காலை பூஜை செய்வது எதற்கு?

மார்கழி மாதம் தேவர்களுக்கு விடிகாலம். மார்கழியில்தான் விஷ்ணு லெட்சுமியை மணம் புரிந்தார். தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்ததும் மார்கழியில்தான். ஐயப்பன் பிறந்ததும் மார்கழியில்தான்.

நடராஜர் ஐந்து தொழிலை செய்ததும் மார்கழியில்தான். சூரியன் தனுசு ராசியில் பிரவேசிக்கும் மாதமும் மார்கழி மாதம் தான். மார்கழியில் சிவனை யாரும் வழிபடும் நாளாகக் கருதப்படுகிறது. நமது சுப நிகழ்வு. நல்லவை யாவையும் ஒதுக்கிவைத்துவிட்டு கடவுள் வணக்கத்தில் இறங்கி விடுகிறோம். நமக்கு ஒருநாள் என்பது 24 மணிநேரம் என்றால் தேவர்களுக்கு ஒரு வருடம் கணக்கு.

அதனால்தான் மார்கழியில் நமக்கு குளிர் அதிகமாக உள்ளது. குளிர் அதிகம் என்பதால் மூட்டுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால்தான் சீக்கிரம் எழுந்து பூஜை பஜனை செய்யவேண்டும். இந்நேரம் அதிகாலை ஒட்சிசனை சுவாசிப்பதால் உடலுக்கு நல்லது கிட்டும்.

# வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

## சம்பியனாகியது வல்வை றெயின்போ







வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகத்தின் அனுமதியோடு வல்வெட்டித்துறைக் குட்பட்ட 6 கழகங்களுக்கிடையிலான 9 நபர் கொண்ட ஒரு நாள்த் தொடரில றெயின்போ விளையாட்டுக் கழகம் சம்பியனாகியுள்ளது.

இறுதிப் போட்டியில் இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தே றெயின்போ விளையாட்டுக் கழகம் சம்பியனாகியிருந்தது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆரம்பக் கோலைப் பெற்ற றெயின்போவின் பிரகாஸ், தனது அணிக்கு முன்னிலையை வழங்கினார். எனினும் போட்டியின் இரண்டாவது பாதியில் இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தின் பிரஷாந், ஒரு கோலினைப் பெற்று கோல் எண்ணிக்கையைச் சமப் படுத்தினார்.

எனினும் போட்டி முடிவடைய ஐந்து நிமிடம் இருக்கையில் றெயின் போவின் சிரேஷ்ட வீரர் சங்கர், ஒரு கோலினைப் பெற்று தனது அணிக்கு முன்னிலையை வழங்கினார்.

மேற்படி இறுதிப்போட்டியின் நாயகனாக றெயின்போ விளையாட்டுக் கழகத்தின் பிரகாஸூம் தொடரின் சிறந்த வீரராக இளங்கதிர் விளையாட்டுக் கழகத்தின் பிரஷாந்தும் தொடரின் சிறந்த கோல்காப்பாளராக றெயின்போ விளையாட்டுக் கழகத்தின் மணி மாறனும் தெரிவாகினர்.

முன்னர் இடம்பெற்ற, முதலாவது அரையிறுதி ஆட்டத்தில், குழு ஏயில் முதலிடம் பெற்ற றெயின்போ விளையாட்டுக் கழகமும் குழு பியில் இரண்டாமிடம் பெற்ற ரேவடி விளையாட்டுக் கழகமும் மோதியிருந்தது.

இந்தப் போட்டியில் றெயின்போ விளையாட்டுக் கழகம், 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது. இதில், றெயின்போ விளையாட்டுக் கழகத்தின் பிரகாஸ் 2 கோல்களையும் ரேவடி விளையாட்டுக் கழகம் சார்பாக பெறப்பட்ட கோலை தமிழரசுனும் பெற்றிருந்தனர்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், குழு பியில் முதலிடம் பெற்ற இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் குழு ஏயில் இரண்டாமிடம் .பெற்ற சைனிங்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதியிருந்தன. இதில், வழமையான நேரத்தில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தன. இளங கதிர் சார்பாக பெறப்பட்ட கோலை பிரஷாந்தும் சைனிங்ஸ் சார்பாக பெறப்பட்ட கோலை ஜெயக்குமாரும் பெற்றிருந்தனர்.

பின்னர், இறுதிப்போட்டிக்கு அணியைத் தெரிவு செய்வதற்காக வழங்கப்பட்ட தண்டஉதையில் இளங்கதிர் விளையாட்டுக் கழகமானது 3:1 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

இந்தத் தொடரின் குழு ஏயில் றெயின்போ, சைனிங்ஸ், தீருவில் ஆகிய விளையாட்டுக் கழகங்களும் குழு பியில் இளங்கதிர், ரேவடி, நேதாஜி ஆகிய விளையாட்டுக் கழகங்களும் பங்கேற்றிருந்தன. (க)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

காலஞ்சென்ற முல்லைத்தீவு வித்தியா விளையாட்டுக் கழக வீரர்களின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் பத்துப் பந்துப் பரிமாற்றத்தினை கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது 2016.01.05 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக் கழகங்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 2016.01.03 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் வித்தியா விளையாட்டுக்கழக நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வித்தியா விளையாட்டுக்கழக செயலாளர் த.ராஜ் கேட்டுள்ளார்.

அத்துடன் இப் போட்டிகளின் இறுதிப் போட்டியானது 2016 ஆம் ஆண்டு தைப்பொங்கல் நாளன்று முள்ளியவளை வித்தியானந்தமைதானத்தில் இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-302)

### பயிற்சியை புறக்கணித்து விட்டு

## புத்தாண்டு கொண்டாட அனுஷ்காவுடன் சுற்றுலாவுக்கு கிளம்பிய விராட் கோலி

அவுஸ்திரேலிய தொடருக்கு தயாராகாமல் புத்தாண்டு கொண்டாட காதலி அனுஷ்காவுடன் சுற்றுலாவுக்கு கிளம்பி விட்டார் விராட் கோலி.

இந்திய அணி அடுத்த வருடம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள், 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதில் முதல் ஒருநாள் போட்டி ஜனவரி 11 ஆம் திகதி பேர்த்தில் நடக்கிறது.

இந்த நிலையில் டோனி தலைமையிலான இந்திய அணி மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.



குறிப்பாக தற்போது டெஸ்ட் அணித்தலைவராக உள்ள கோலி, ஒருநாள் போட்டிக்கும் விரைவில் தலைவராகும் நிலையில் அவர் ஓட்ட மழை பொழிய ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த ஆண்டு கோலி துடுப்பாட்டத்தில் பெரிதாக சோபிக்கவில்லை. அவரது ஒட்டுமொத்த துடுப்பாட்ட சராசரி 50 ஆக உள்ள நிலையில், இந்த ஆண்டு 36.64 ஆக சரிந்தது.

இந்த நிலையில் விராட் கோலி இந்திய அணியுடன் சேர்ந்து பயிற்சியில் கவனம் செலுத்தாமல், புத்தாண்டு கொண்டாட காதலி அனுஷ்காவுடன் சுற்றுலாவுக்கு கிளம்பி விட்டார். (க)

## சட்ட மா அதிபர் ஜனவரியில் ஓய்வு

(கொழும்பு)

சட்ட மா அதிபர் யுவான்ஜன வனசுந்தர எதிர்வரும் ஜனவரி மாதம் 9-ம் திகதி ஓய்வு பெற்றுக்கொள்ளவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட சட்ட மா அதிபருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படவில்லை.

பொதுவாக நீதி அமைச்சரின் பரிந்துரைக்கு அமைய ஜனாதிபதியினால் சட்ட மா அதிபர் நியமிக்கப்படுவது வழமையானதாகும்.

இதன்படி, சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத், சட்ட மா அதிபராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சருக்கும் சுஹத கம்லத்திற்கும் இடையில் நெருங்கிய பிணைப்பு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதவிக்கு சட்ட வல்லுநர் தயாந்த ஜயசூரியவும் போட்டியிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## மரநடுகை நிகழ்வு

(வடமராட்சி)

தேசிய மரநடுகை மாதத்தை முன்னிட்டு வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு மரநடுகை நிகழ்வு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, சாவகச்சேரி வீதியில் யாக்கரு சந்தியிலிருந்து சாவகச்சேரி நோக்கி 500 மருதமரக் கன்றுகள் நாட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வில் லயன்ஸ் அங்கத்தவர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு லயன்ஸ் கழகத் தலைவர் சே.சேதுராஜா கேட்டுக் கொண்டுள்ளார். (எ-11)

## மஞ்சள் கடவை அமைக்க பொலிஸாரிடம் தெரிவிக்கலாம்

(கொழும்பு)

பாதையை மாறுவதற்கு மஞ்சள கடவை தேவையாக இருந்தால் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் மஞ்சள் கடவை அமைப்பதற்கு தயார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது உள்ள இரு மஞ்சள் கடவைகளுக்கிடையிலான தூரம் அதிகம் என்றால் அதற்கு இடையில் மஞ்சள் கடவை ஒன்றை அமைக்க முடியும் என போக்குவரத்து மற்றும் வீதிப்பாதுகாப்புக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அமரசிறி சேனாரத்ன தெரிவித்துளளார்.

அது குறித்து உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

புதிய மஞ்சள் கடவைகளை அமைத்துக்கொள்வதற்கோ அல்லது தற்போது உள்ள மஞ்சள் கடவைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை இருந் தால் 071 85 91020 என்ற தொலைபேசி இலகத்திற்கு அழைப்பு மேற்கொள்ள முடியும் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (எ-12)

## கூட்டமைப்பு - முஸ்லிம்...

வரின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் எம்.நிஸாம் காரியப்பர், ஏ.எம்.பாயிஸ் ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசியலமைப்பு யோசனைகள் தொடர்பாக இருகட்சிகளும் நடத்தியுள்ள முதல் கூட்டம் இது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகள் மற்றும் நலன்களை உறுதிப்படுத்தும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஒருமித்த கருத்துகளை முன்வைப்பதற்கு இன்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாகவும், இது தொடர்பில் சில விடயங்கள் ஆராயப்பட்டதாகவும் சந்திப்பில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், கல்முனை உட்பட கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் நிலவி வருகின்ற தமிழ், முஸ்லிம் முரண்பாடுகளை சுமுகமாக தீர்க்கும் பொருட்டு உள்ளூர்மட்டத் தலைமைகள் மத்தியில் பேச்சுகளை முன்னெடுப்பதற்கும் இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாகவும் அவர் கூறினார். (எ-11)

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா காலமானார்

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா நேற்று காலமானார். நாரஹென்பிட்டி பொலிஸ் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக் கொணடிருந்த நிலையில் காலமானதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுகவீனம் காரணமாக இந்திரா டி சில்வா பொலிஸ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

1972-ம்ஆண்டு துணை பொலிஸ அத்தியட்சகராக சேவையில் இணைந்து கொண்ட இந்திரா டி சில்வா, படிப் படியாக பதவி உயர்வு பெற்று பொலிஸ்மா அதிபராக கடமையாற்றினார்.

1992 ஆம் ஆண்டு பிரதி பொலிஸ்மா அதிபராகவும் 2000 ஆம் ஆண்டு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராகவும் பதவி உயர்வு பெற்றார்.

இதனை தொடர்ந்து இலங்கையின் 20-வது பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

அம்பலாங்கொட தர்மாசோக விதத்தியாலயத்தின் பழைய மாணவரான இந்திரா டி சில்வா, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி என்பது குறிப்பிடத்தக்கது. (எ-12)

## உள்ளூராட்சி மன்றங்களில் மோசடி குறித்து முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் 98 முறைப்பாடுகள் ஊழல் மோசடி பிரிவிற்கு கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த முறைப்பாடுகள் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நவம்பர் மாதம் இறுதி வரை கிடைக்கப்பெற்றதாக உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மேல் மாகாண உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும், வட மாகாணத்தில் 5 முறைப்பாடுகளும், தென மாகாணத்தில் 4 முறைப்பாடுகளும், கிழக்கு மாகாணத்தில் 6 முறைப்பாடுகளும் மேலும் மத்திய மாகாணம் குறித்து 8 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அத்துடன் அதி கூடிய முறைப்பாடுகள் மேல் மாகாணத்திலும் குறைந்தளவிலான முறைப்பாடுகள் சப்ரகமுவ மாகாணத்திலும் கிடைக்கப்பெற்றதாக கூறப்படுகிறது.

இதன் பிரகாரம் குறித்த முறைப்பாடுகள் மாகாண சபைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டதோடு, முறைப்பாடுகள் தொடரபரன அறிக்கை அமைச்சருக்கு கையளிக்கப்பட்டு அதன் பின்பே மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என உளளூராட்சி மன்றங்கள மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-12)

## வீட்டில் இருந்தோரை அச்சுறு...

மூன்று மோட்டார் சைக்களில் வந்த இனந்தெரியாத ஏழு நபர்கள் தமது முகத்தினை துணியால் கட்டி மறைத்த வண்ணம் வாள், கத்தி, பொல்லு போன்று கூரிய ஆயுதங்களுடன் வந்து கொள்ளை சம்பவத்தினை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த வீட்டில் புடைவை வியாபார நிலையம் ஒன்று இருப்பதனால் எப்பொழுதும் வாடிக்கையாளர்களால் சூழ்ந்து காணப்படும். நேற்று முன்தினம் இரவும் குறித்த வீட்டில் பல வாடிக்கையாளர் இருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்கள் அங்கிருந்தவர்களை வாள் கொண்டு துரத்தியதுடன் வீட்டின் உரிமையாளரின் மோட்டார் சைக்கிள் உட்பட புடைவை வாங்குவதற்கு வந்திருந்த வாடிக்கையாளர்களின் ஆட்டோக்கள் மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றை அடித்து நொருக்கியுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் வீட்டின் உள்ளே சென்று கதவை பூட்டியதும் கொள்ளையர்கள் வீட்டின் யன்னல்கள் மற்றும் கதவுகளை அடித்து நொறுக்கி சேதமாக்கியுள்ளனர்.

அதேசமயம் புடைவை வியாபார பணம் வைக்கும் மேசை வீட்டின் வெளி மண்டபத்தில் வெளியே பூட்டிட்ட நிலையில் இருந்ததினால் இதனை உடைத்து அதற்குள் இருநத பணம் மொத்தமாக கொள்ளையடிக் கப்பட்டிருக்கின்றது.

அத்துடன் சில உயர்ந்த ரக புடைவைகளையும் கொள்ளையர் கள் தம்வசம் எடுத்துச் சென்றுள்ளனர்.

பணத்தினையும்புடைவைகளையும் கொள்ளையிட்ட கொள்ளையர்கள் இலாவகமாக தப்பிச் சென்றதனால் நேற்றிரவு அப்பகுதி சற்று பதற்றமாக காணப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவத்தில் தெய்வாதீனமாக யாருக்கும் எவ்வித காயங்களும் ஏற்பட்டிருக்கவில்லை.

கொள்ளையர்கள் வாள் கொணடு துரத்திய சமயம் வீட்டில் இருந்தாமும் புடவை வாங்க வந்த வாடிக்கையாளர்களும் சிதறி ஓடியமையால் எவ்வித பாரதூரமான அசம்பாவிதங்களோ காயங்களோ ஏற்படவில்லை என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

அத்துடன் அந்நேரம் இருந்த பதற்றமான சூழ்நிலையால் தம்மால் அவர்களையும் அவர்கள் வந்த மோட்டார் வாகனத்தின் இலககங்களையும் குறித்து கொள்ள முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடாந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் சம்பவ இடத்தையும் சேதமாக்கப்பட்ட பொருட்களையும் பார்வையிட்டதுடன், மேலதிக விசாரணைகளுக்கென சேதமாக்கப்பட்ட ஆட்டோ மற்றும் மோட்டார் வாகனங்களை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றுள்ளனர்.

உரும்பிராய் பகுதியில் அண்மைக்காலமாக பல திருட்டுச் சம்பவங்களும், தெருச்சண்டைகளும் அதிகளவில் இடம்பெறுவதாகவும், பொலிஸார் இரவு வேளைகளில் கூடுதலான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேறகொள்ள வேணடும் என்றும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-1)

## கூட்டமைப்பில் உள்ள சிலருக்கு...

தமிழ் மக்கள் பேரவை தொடரபில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பில் முதலமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். குறித்த விடயம் தொடர்பில் முதலமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரா.சம்பந்தனை கொழும்பில் சந்தித்தபோது தமிழ் மக்கள் பேரவை தொடர்பாக தெரிவித்திருந்தேன். இதன்போது நான் கூறிய விடயங்களை அவர் முழுமையாக கேட்டார்.

அதாவது தமிழ் மக்கள் பேரவை ஒரு கட்சி அல்ல கடந்த பல வருடங்களில் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வை கொடுக்கப் போகின்றோம் என்பதை எவ்வாறு அரசாங்கம் கூறாமல் இருக்கின்றதோ அதே போன்று தமிழ் மக்களும் தமக்கு என்ன தேவை எனபதை கூறாமலே இருக்கின்றார் கள்.

இந்நிலையில் அதனை மக்களிடமிருந்து அறிந்து கொண்டு வெளிப்படுத்துவதற்கான ஒரு அமைப்பாகவே இதனை நாங்கள் பார்ககிறோம் என்பதை தெளிவுபடுத்தினேன். மேலும் கட்சியாக்கும் எண்ணம் அதற்காக செயற்படும் எண்ணம் இல்லை என்பதையும் நான் தெளிவுபடுத்திய நிலையில் இது ஒரு ஜனநாயகரீதியான செயற்பாடு என்பதை இரா.சம்பந்தன் ஒத்துக் கொண்டுள்ளதாக முதலமைசசர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை படையினர் யாழ். குடாநாட்டில் கால்வாய்களை துப்புரவு செய்யவேண்டும் என தாங்கள் கூறிய கருத்து இனவாத நோக்கில் பார்க்கப்படுகின்றதே? எனக் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போது மாகாணசபையில் குடாநாட்டில் வெள்ளநீர் தேங்குவதற்கான காரணங்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருந்த போது போர் காலத்தில் புலிகளுடைய ஊடுருவலை தடுப்பதற்காக படையினர் கால் வாயகளை அடைத்தமையே காரணம் என உறுப்பினர் ஒருவர் கூறினார்.

எனவே அவர்கள் அடைத்தார்களாயின் அவர்களே திறக்கும் வல்லமையுடன் உள்ளமையால் அவர்கள் திறந்து விடட்டும் என்றே நான் கூறினேன். அதனை இனவாத நோக்கில் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

அவ்வாறு நான் கூறிய கருத்துக்கு தவறான வியாக்கியானம் கொடுக்கவேண்டிய தேவையும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சம்பந்தனுடனான சந்திப்பு குறித்து கேட்டபோது, சந்திப்பு திறம்பட நடைபெற்றது. இருவரும் அறியாத விடயங்கள் தொடர்பாக அறிந்து கொண்டோம். புரிந்துணர்வுடன் கூடிய பேச்சுவார்த்தையாக அது அமைந்தது என முதலமைச்சர் மேலும் கூறியுள்ளார். (எ-11)

## அரச சேவை...

வரும் வேலை ஆண்டு ஆரம்பம் அன்று அரசாங்க சேவை சத்தியப்பிரமாணம் செய்யுமாறு அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே.தடல்ல அறிவித்துள்ளார்.

அதற்கான சத்தியப்பிரமாண உரையில் ஒரே நாட்டின், ஒரே இனத்தின் ஒரே கொடியின் நிழலில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் நேர்மையாகவும், மக்களுக்கு பக்கச் சார்பாகவும் என்ற வரியும் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ-1)

## விபத்தில்...

ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் 22 பேர் காயமடைந்துள்ளதுடன் அவர்கள் வரக்காபொல மற்றும் கேகாலை ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வரக்காப்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் மூவர் பெண்களும், வானின் சாரதியும் குழந்தை ஒன்றும் காணப்படுகின்றனர். அம்பாறை மற்றும் கல்முனை பகுதிகளைச் சேர்ந்தவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து தொடர்பில் வரக்காப்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## ஜனாதிபதி...

காங்கேசன்துறை தெற்கு, பளைவ்மன்காமம் வடக்கு, தையட்டி தெற்கு ஆகிய பகுதிகளில் 213.5 ஏக்கர் காணியும், பலாலி வடக்கு, பலாலிதெற்கு, பலாலி கிழக்கு ஆகிய பகுதிகளில் 255 ஏக்கர் காணியும், வளலாய் பகுதியில் 233 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் தற்போதுவளலாய் பகுதியில் உள்ளஅனைத்து காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

படைத்தரப்பினரால் விடுவிக்கப்பட்டுள்ள இந்த தனியார் காணிகளில் பொதுமக்கள் குடியேறுவதற்கானஆயத்தங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மிகுதியாக உள்ள அனைத்து தனியார் காணிகளும் விரைவில் விடுவிப்பதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

## அடுத்த ஆண்டு...

2013 இல் தான் இந்த சிறிய பாலகன் (வட மாகாண சபை) தவழத் தொடங்கியது. வடக்கு மாகாண சபை என்பது இரண்டு வருடங்கள் தான் பூர்த்தியாகின்றது. இந்த இரண்டு வருடத்தில் காணப்பட்ட முரண்பாடுகளும் பிரச்சினைகளும் எங்களுக்குள்ளே இருந்த பரஸ்பர தப்பெண்ணங்களும் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இவ்வாறான ஒரு கூட்டத்தை கூட்டி எல்லோரினையும் ஒருமித்து உங்கள் எல்லோரிடமும் பேசுவதற்கு ஏற்பாடு செய்த ஒழுங்கமைப்பாளர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கின்றேன். வடக்கு மாகாண சபை ஆரம்பமாகும் போது நாங்கள் எல்லோருமே அரசியலுக்கு புதிது. ஆகவே பலவகையான சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டத்தில் இருந்தோம்.

அப்போது இருந்த ஆளுநர் வித்தியாசமான ஒருவர். அதாவது இராணுவத்திலிருந்து வந்தவர் என்ற காரணத்தினால் எங்களிடையே பலவிதமான முரண்பாடுகள் காணப்பட்டன. இப்பொழுது அந்த காலம் மாறிக் கொண்டு வருகின்றது. இந்த வருடத்திலே பல நன்மைகளை கண்டு வருகின்றோம். ஆனால் அது காணாது. இந்த வருடம் முழுந்து அடுத்த வருடம் தொடங்கும்போது எங்களுடைய கட்டுப்பாடுகள் சற்று கடுமையாக இருக்கும் என்பதனை இப்போதே கூறிவைக்கின்றேன்.

ஏனென்றால் இதுவரை காலமும் எங்களுடைய நிதிக் கொடைகளை எவ்வாறு செலவளித்தோமேயானால், அதிலே பலவிதமான தடங்கல்கள் தடைகள், தளர்வுகள் என பலதும் இருந்த கார ணத்தினால் எல்லாவற்றையும் செய்ய திருந்து கடைசி நேரத்தில் அவை செய்யப்பட்டுள்ளன. என்றாலும் ஓரளவிற்கு மற்றைய மாகாணங்களிலும் பார்க்க செய்து முடித்துள்ளோம்.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் மற்றைய மாகாணங்களை பார்க்கிலும் சற்று வேறுபட்டது. தமிழ் மக்கள் கூடியளவில் உள்ள மாகாணமாக இது உள்ளது. ஆகவே எங்களுடைய தனித்துவத்தை எடுத்து காட்டும் செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு முன்னு தாரணமாக செயற்படல் வேண்டும் என்று முதலமைச்சர் தெரிவித்தார். (எ-4)

## மகிந்த அரசின்...

சுட்டிக் காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த கனகரட்ணம் ஜீவரட்ணம் (வயது 44) என்ற அரசியல் கைதி தற்போது மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 2007ஆம் ஆண்டு ஆனி மாதம் 23 ஆம் திகதி கருணா குழுவினரால் திருகோணமலை மொரவவ பகுதியில் வைத்து பிடிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் குறித்த நபரை திருகோணமலை பொலிஸாரிடம் கருணா குழுவினர் ஒப்படைத்துள்ளனர். பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர் விசாரணை மேற்கொண்ட பின்னர், பொலிஸார் திருகோணமலை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையில், கடந்த 2012ஆம் ஆண்டு ஆனி மாதம் 06ஆம் திகதி திருகோணமலை உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 2014 இவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு வழக்கு நடைபெற்று வந்துள்ளது.

குறித்த வழக்கினை தற்போது கொழும்பு விசேட நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசியல் கைதிகள் குறிப்பிட்டனர். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டு, நீதிமன்றினால் விடுதலை செய்யப்படவிருந்த தருணத்தில் இவ்வாறு வழக்கினை கொழும்பு விசேட நீதிமன்றத்திற்கு மாற்றியிருப்பது அரசியல் கைதிகளை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களம் நல்லாட்சி அரசாங்கத்தின் சட்ட திட்டங்களை கடைப்பிடிக்காது பழைய அரசாங்க த்தின் சட்ட திட்டங்களையே கடைப்பிடித்து வருகின்றது. இவ்வாறு அரசியல் கைதிகளை புனர்வாழ்விற்கு அனுப்புவதாக பெயர் வெளியிடப்பட்ட அரசியல் கைதிகளின் வழக்குகளும், வழக்கு விசாரணை திகதிகளும் 6 மாதத்திற்கு மேல் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றதாகவும்கூறியதுடன், அரசியல் கைதிகள் அவலநிலையில் இருப்பதாகவும் கூறினார்கள். (எ-4)

# உயர்தரப் பெறுபேறு 3ஆம் திகதி வெளியாகும்

2015ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள், ஜனவரி மாதம் மூன்றாம் திகதி வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. பரீட்சைப் பெறுபேறுகளை www.doen ets.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

அத்துடன், கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு, பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்படும் அதே நாள் காலையில் ஏனைய பகுதிகளுக்கான பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை உயர்தர பரீட்சைக்கு சுமார் 309,069 பரீட்சார்த்திகள் தோற்றியதுடன், அவர்களில் 236,072 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் என்பதுடன் 72,997 பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆவர்.

நாடு பூராகவும் 2,180 பரீட்சை மத்திய நிலையங்களிலும் 303 இணைப்பு மத்திய நிலையங்களிலும் இந்தப் பரீட்சைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இப் பெறுபேறுகள் நேற்று வெளியிடப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## நாமல் ராஜபக்ஷ...

நடத்தப்படவுள்ளது. நாமல் ராஜபக்ஷவைப் போன்று விமானப்படைத் தளபதிக்கு அழைப்பினை ஏற்படுத்தி, விமானப்படை உத்தியோகத்தர் ஒருவரின் இடமாற்றம் குறித்து பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு போலியாக தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தியவர் அம்பாறை நகர சபையின் முன்னாள் தலைவர் என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்திருந்தது. இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் தொடர்பில் நாமல ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-11)

## ரயில் மோதியதில்...

குறித்த இளைஞர் அவுஸ்திரேலியாவில் பொறியியலாளராக கடமையாற்றி வந்த நிலையில் தனது விடுமுறையை கழிப்பதற்காக தனது குடும்பத்தினருடன் வந்துள்ளார்.

பின்னர் அவுஸ்திரேலியா செல்வதற்காக பயணச்சீட்டை பதிவு செய்ய கொழும்புக்கு சென்றிருந்தவேளை பம்பலப்பிட்டி பகுதியில் ரயில் மோதி உயிரிழந்துள்ளார்.

இளைஞரின் சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-12,60)

DCM ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
A/L 2018 கலை, வர்த்தகம் தொழில்நுட்பம்
புதிய பிரிவுகள்
(3020)
ஆரம்பம் 02-01-2016
சனி காலை 8.00 மணி

BEACON வெலிங்டன் சந்தி யாழ் நகர்
A/L 2016 DAY BATCH
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் : 04.01.2016 காலை 8 மணி
பொருளியல் : K.பிரதீபன்
கணக்கீடு : R.சுகிர்தன்
வணிகக்கல்வி : கொழும்பு பிரபல்யமான ஆசிரியர் S.முகுந்தன்
(C-3251)
BEACON -BEACON -BEACON

ECONOMICS HALL
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L 2018
கலை
வர்த்தகம்
ஆரம்பம் 02.01.2016
காலை 9.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(3025) தொ.இல : 0776624387

A/L பொருளியல்
வினா விடை - 1
பொருளியல் அறிமுகம்
முழு விடயங்களும், புதிய அம்சங்களும் அடங்கிய இரண்டாம் பதிப்பு
ரூபா: 150
2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெற வைத்த மற்றும் பொருளியல் நூல்கள்
(3021)
ஆசிரியர் : வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
A/L 2018
ஆரம்பம்: 01.01.2016 வெள்ளி 9.00 A.M
கலைப் பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
|---|---|---|
| தமிழ் | A.K .கீர்த்திராஜன் | S.தங்கரூபன் |
| இந்து நாகரிகம் | T.ஸ்ரீநீஸ் | T.ஸ்ரீநீஸ் |
| அளவையியல் | P.கமல் | P.கமல் |
| அரசியல் | M.அசோக் | M.அசோக் |
| புவியியல் | S.R.பாலா | S.சபரீதன் |
| பொருளியல் | NB.கஜீதரன் | NB.கஜீதரன் |
| நாடக அரங்கியல் | S.சுகந்தன் | S.சுகந்தன் |
| வரலாறு | S.S.தாஸ் | S.S.தாஸ் |
| தொடர்பாடல் | V.நவநீதன் | V.நவநீதன் |
| I.C.T | V.தர்சிநாத் | V.தர்சிநாத் |
| கிறிஸ்தவம் | R.ஜோன்சன் | R.ஜோன்சன் |
| விவசாயம் | R.விக்கி | R.விக்கி |

வர்த்தகப் பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
|---|---|---|
| கணக்கீடு | K.பாலகஜன் | K.பாலகஜன் |
| பொருளியல் | NB.கஜீதரன் | NB.கஜீதரன் |
| வணிகக்கல்வி | S.K.பாலசபேஷ் | S.K.பாலசபேஷ் |

தொழில்நுட்ப பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
|---|---|---|
| Science for Technology | S.வாசு | S.உதிஸ் |
| Engineering Technology | S.உதிஸ் | S.உதிஸ் |
| Bio Technology | S.சுதா | S.தனேஸ் |

கணித உயிரியல் பிரிவு

| பாடம் | ஆனைப்பந்தி | யாழ்நகர் |
|---|---|---|
| இரசாயனவியல் | S.வாசு | S.வாசு |
| பௌதீகவியல் | S. சசி | T.மோகன்ராஜ் |
| கணிதம் | S.விமலநாதன் | S.விமலநாதன் |
| உயிரியல் | S.சுதா | S.சுதா |

NEC கல்வி நிறுவனத்தின் 10ஆவது வருட நிறைவினை முன்னிட்டு 01.01.2016 வரை அனுமதி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் அனுமதி கட்டணம் இலவசம்

DCM வேம்படிச் சந்தி யாழ் நகர்
A/L - 2018 புதிய பிரிவுகள்
வர்த்தகப் பிரிவு
பொருளியல் S.ஜெயக்குமார் | கணக்கீடு A.P. பகீரதன் | வணிகக்கல்வி V. முரளி
கலைப் பிரிவு
தமிழ் K.சந்திரலிங்கம் | அரசியல் K.சுகாஸ் | வரலாறு Y.பிரதீபன் | இ/நாகரிகம் T.சதீஸ்
அளவையியல் T.நீதன் | நாடகம் R.ரமேஸ் | ஊடகம் S.நவநீதன் | ICT S.சிவா
தொழில்நுட்பப் பிரிவு
SFT T.நிரோஜன்,N.ஜனா | E.T G.சிறிகரன் | BT R.விக்கி
(3020) ஆரம்பம் 02.01.2016 , சனி காலை 8.00 மணிக்கு

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தளபாட காட்சி அறைக்கு
1. விற்பனை பிரதிநிதி ( Sales Representative ) ஆண்/ பெண்
2. தளபாடங்கள் பொருத்துவதற்கு ( Furniture Fittings ) ஆண்
விரும்பத்தக்கது. ஆரம்ப ஊதியமாக 14000/= வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும்.
SMART KINGS PVT (LTD)
NO 12, POINT PETRO ROAD,
JAFFNA.
021-454 6699
(C-3253)

BEACON வெலிங்டன் சந்தி யாழ் நகர்
30 வருடத்திற்கு மேலாக கல்விச் சேவையை சிறப்பாக வழங்கும் எமது நிறுவனத்தில்
A/L 2018 கலை -வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் : 10.01.2016 காலை 8 மணி
A/L 2018 தொழில்நுட்பப்பிரிவு
(C-3252) ஆரம்பம் : 01.01.2016 காலை 8 மணி
BEACON - யாழ் நகர் BEACON - யாழ் நகர்

புத்தி சாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு
ஞானோதய அக்கடமி
(சங்கத்தானை, சாவகச்சேரி)
A/L 2018
A/L Day Class
◆கலை ◆வர்த்தகம் ◆கணிதம் ◆உயிரியல்
◆தொழில்நுட்பம் (செயன்முறைப் பயிற்சிகளுடன்)
◆B.A பட்டப்படிப்பு வகுப்புகள்
◆ஆண்டு 09, 10, 11 வகுப்புக்கள்
(3012)
ஆரம்பம் : 01.01.2016 - வெள்ளிக்கிழமை - காலை 9.00 மணி அனுபவமும் திறமையும் வாய்ந்த யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.
-நிர்வாகம்

FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 11.01 @ 4pm.
கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 13.01 @ 4pm
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.